Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

வார வெளியீடு

THINAKKATHIR WEEKLY

தினக்கதிர்

சகல விதமான உங்கள்
ஒப்செட் அச்சுத்
தேவைகளுக்கும்,

ஈஸ்ரன் கிராபிக்ஸ்
205/2, பார் வீதி,
மட்டக்களப்பு.
T/P 065 - 23055

இதழ் - 25 | செப்டம்பர் 1 - 12, 1998 | (வெள்ளி மலர்) | பக்கங்கள் - 16 | விலை ரூ.10/=

## பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் குண்டு வெடிப்பு

## லங்கா சமஜமாஜக் கட்சி விலகலால் அரசு பதவி கவிழும் அபாயம்

## சந்திரிகாவின் அடுத்த கட்டம் என்ன?

(நமது அரசியல் நிருபர்)

நான்கு வருடங்கள் நிலையான ஆட்சியை நடாத்தி வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு தற்போது ஆட்சியை தொடர்ந்து நடாத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. லங்கா சமஜமாஜக் கட்சி இதுவரை அரசிற்கு வழங்கி வந்த ஆதரவினை விலக்கிக் கொள்வதே இதற்கான காரணமாகும். மாகாண சபைத் தேர்தலை நடத்தாது ஒத்திப் போட்டமை நாடளாவிய ரீதியில் அவசர காலச் சட்டத்தை அமுல்படுத்தியமை போன்ற குற்றச் சாட்டுகளை வைத்தே அரசிற்கான ஆதரவினை விலக்கப் போவதாக மேற்படி கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்காரா அறிவித்துள்ளார்.

ஆகஸ்ட் மாதம் 28ம் திகதி நடைபெற இருந்த மாகாண சபைத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்ட வேளை பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் இடது சாரிக் கட்சிகள் பெரிதாக எதிர்ப்புக் காட்டா விட்டாலும் தற்போது எழுந்துள்ள நிலமையால் அரசுக்கு சங்கடமானதொரு ஆட்சி கவிழும் நிலையை உருவாக்கி உள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

எனவே அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறும் வரையிலான காலப் பகுதி வரையாவது ஆட்சியை தக்க வைக்கும் நோக்கமே சந்திரிகாவுக்கு தோன்றியுள்ளது. எனவே யுத்தம் முடியும் வரை மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை உருவாகி இருந்தாலும் எப்பாடுபட்டாவது அடுத்த வருட முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தலை நடாத்தவே அரசு இப்போது முடிவு செய்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## சொந்த நாட்டில் யுத்தம் அண்டை நாடுகளின் பிரச்சினைகளுக்கு அணிசேரா மாநாட்டில் தீர்வு காணத் துடிக்கும் அம்மையார்

(நமது நிருபர்)

சொந்த நாடு யுத்தத்தால் வேந்தணலாக்கிக் கொண்டிருக் கிறது. சமாதானம் எப்போது உருவாகும் யுத்தம் எப்போது முடிவுறும் எனும் குரலே தமிழ்பேசும் மக்களின் குரலாக இருக்கும் போது.

அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் ஜனாதிபதி அவர்கள் சார்க் நாடுகளின் தலைவி என்ற முறையில் முக்கிய உரையாற்றவுள்ளார். அவர் தனதுரையில் ஐ.நாவின் மறுசீரமைப்பு, சர்வ தேசப் பயங்கரவாதப்பிரச்சினை, போதைப் பொருள் கடத்தல் வர்த்தகம் சம்மந்தமான பிரச்சினைகள் போன்வற்றிக்கே தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்துவார் என எதிர்பாக்கப்படுகிறது.

இதேவேளை அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் உலக நாடுகளின் தலைவர்கள் இலங்கையில் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை உருவாக்க இலங்கை ஜனாதிபதியை வலியுறுத்துவார்களா என்பது கேள்விக்குறி.

## இலங்கை அரசுக்கு இராணுவ செலவு 5400 கோடி

(நமது நிருபர்)

தற்போது இலங்கையில் நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கைக்கு பாதுகாப்பு செலவினமாக 4400 கோடி ரூபாயை விட மேலும் 800 கோடி ரூபாய் தேவைப்படுமென நீதி அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேவைப்படும் இவ் 800 கோடி ரூபாவும் பாதுகாப்பு வரியைக் கொண்டு திரட்டப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முன்னர் 4வீதமாக அறிமுகம் செய்யப்பட்ட பாதுகாப்பு வரி தற்போது 4.5வீதமாக உள்ளது எனவும் யுத்த செலவின் தேவைப்படாத போது மாத்திரமே இப்பாதுகாப்பு வரி ரத்துச் செய்யப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## வீதியுலா வந்தமுருகன் மீது கல்வீச்சு சித்தாண்டி முருகன் ஆலயத்தில் அனர்த்தம் ஐந்து கடைகள் தீக்கிரை ஒரு வீடு சேதம்

(நமது நிருபர்)

சித்தாண்டி ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் மருத்துவ குடி மக்களின் உற்சவ நாளான 29ம் திகதி இரவு இடம் பெற்ற சம்பவம் ஒன்றில் ஐந்து கடைகள் தீக்கிரையாகியதுடன் ஒரு வீடு சேதமாக்கப்பட்டது. சிறுமி உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருதாவது சித்தாண்டி முருகன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் மருத்துவ குடி திருவிழா நாளான கடந்த 29ம் திகதி ஆலயத்தின் பாரம்பரிய சட்டதிட்டங்களுக்கு அமைவான முறையில் பூசை முறைகளை கைக்கொள்மாறு மருத்துவ குடி உபயகாரர்களிடம் ஆலயபரிபாலன சபையினரால் எடுத்துரைக்கப்பட்டதாம். ஆனால் மருத்துவ குடிமக்கள் இவ்வருடம் சுவாமி வீதி வலம் வரும் பணிகளை தாமே செய்ய வேண்டும் என வாதிட் டார்களாம். இறுதியில் வெளி வீதிப் பணி மட்டும் மருத்துவ குடிமக்களுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் உள்வீதி வெளி வீதி இரு பணிகளையும் தாமே செய்ய வேண்டும் இல்லாது விட்டால் வெளியேறிச் செல்வோம் எனக் கூறி வெளியேறிச் சென்றுள்ளனர்.

பின்னர் ஆலய நிருவாகத்தால் திருவிழா நடத்தப்பட்டு இரவு சுவாமி வீதியுலா வரும் வேளை மருத்துவ குடி மக்கள் சுவாமி மீதும் சனக் கூட்டம் மீதும் சரமாரியாக கல்வீசியுள்ளனர். இதனால் சுவாமியையும் வைத்துவிட்டு ஓடவேண்டிய நிலை உள்ளாகி உள்ளது.

இச்சம்பவத்தில் சிறுமி உட்பட இருவர் படுகாயமடைந் தார்கள். பின்னர் ஆத்திரமுற்ற ஊர் மக்களால் மருத்துவ குடியினருக்கு சொந்தமான நான்கு சிகை அலங்கார நிலையங்களும் ஒரு சில்லறைக் கடையும் தீயிட்டு கொளுத்தப்பட்டன. ஒரு வீடு அடித்து சேதமாக்கப்பட்டது.

ஒரு ஆலயத்தின் உற்சவ உபயகாரர்களை திருவிழா பணிகளில் இருந்து புறங்கணிப்பு செய்வது குற்றமோ, குற்றமில்லையோ ஒரு புறமிருக்க ஆலய சட்ட திட்டங்கள் பாரம்பரிய கட்டுப்பாடுகளுக்கு அமைவாக நடப்பது சகல குடியினரது கடமையுமாகும்.

இதேவேளை கிழக்கிலங்கையில் புகழ் பெற்ற முருகன் ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் இவ்வாலயத்தில் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் வந்து தரிசனம் பெறும் வேளையில் சுவாமி மீது கல் எறிந்து அஜாரகம் புரிந்தது பொதுமக்களை கொதிப்படையச் செய்துள்ளது.

## யுத்தம் முடிந்த பின்பு மாகாணசபைத் தேர்தல் மீண்டும் ரத்வத்தை சூளுரை யுத்தம் எப்போது முடியும் தேர்தல் எப்போது நடைபெறும்?

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கில் இடம் பெற்று வரும் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்பு திட்டமிட்டபடி மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை சூளுரைத்துள்ளார்.

வடக்கு் கிழக்கில் ஈழக் கோரிக்கையை முன்வைத்து விடுதலைப்புலிகள் நீண்ட காலமாக அரசிற்கு எதிராக போராடி வருகின்றனர். இதன் ஒரு அங்கமாக கடந்த வருடம் வன்னித் தரைப் பாதையை திறக்க ஆரம்பிக்கப்பட்ட ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை கூட 1½ வருடத்திற்கு மேலாக முன்னேற முடியாமல் உள்ளது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் ரத்வத்தை நினைப்பது போல் ஒரு குறுகிய காலகட்டத்துக்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து விடலாம் என்பது முடியாத காரியம். புலிகளுடன் அரசு ஒரு சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பித்து சமாதான வழிமுறைகளை கையாளாமல் இராணுவ ரீதியில் புலிகளை ஒழித்துக் கட்ட நினைத்தால் அது ஒரு நீண்டகால யுத்தமாகவே தொடரும். எனவே மாகாண சபைத் தேர்தலை யுத்தத்தை முடித்த பின்பு நடத்த முடியும் என நினைப்பது தவறாகும் எனப் பொது மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

## எறிகணைத் தாக்குதலில் குழந்தைகள் பலி.......!

மட்டக்களப்பு படுவான்கரைப் பகுதியில் அடிக்கடி இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக மற்றும் பொதுமக்கள் உயிரிழந்தும் காயமடைந்துள்ளனர். இராணுவத்தின் கண்மூடித்தனமான எறிகணைத்தாக்குதலின் காரணமாக பல வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் மட்டக்களப் பில் இராணுவத்தினரின் தாக்குதலில் இரண்டு வயது கிந்துசன், ஒரு வயது நிரம்பிய சதுாசன் ஆகிய இரு பிஞ்சுக் குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் சகோதரர்களாவார்கள். களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாமிலிருந்து, போரைதீவு,முனைத்தீவு, பழுகாமம் கிராமங்கள் நோக்கி இராணுவத்தினரின் எறிகணைத்தாக்குதலில் போதே இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இதன் போது ஏழு பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் இரண்டு பிள்ளைகளின் தாயும் அடங்குவர் எனத் தெரியவருகின்றது.

காயமடைந்த இரு குழந்தைகளையும் பட்டிருப்பு பாலத்தில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்குள் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல அனுமதிக்காமலேயே இரு குழந்தைகளும் அநியாயமாக உயிரிழந்துள்ளனர்.

இலவச, சலுகை அடிப்படையில் Computer கல்வி பயில

College of Computer Technology (British ACP Recognised Training Centere)

5வது முறையாக வழங்கப்படும்

DCS
DATA CONNECTION SYSTEMS (PRIVATE) LIMITED


1000 விசேட புலமைப்பரிசில் திட்டம் 1998/99

* DIPLOMA IN OFFICE MANAGEMENT * DIPLOMA IN APPLICATION PROGRAMMING

மேலதிக விபரங்களுக்கு

DCS NO. 399 1/1 GALLE ROAD, COLOMBO - 4 T.P : 589899 DCS NO. 171, TRINCO ROAD, BATTICALOA.

விண்ணப்ப முடிவு திகதி 19.09.1998




## யாழ் மாவட்டத்தில் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட வெற்றிடங்கள்

(நமது நிருபர்)

யாழ் மாவட்டத்தில் உள்ள அரச துறைகளில் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறு தொழிலாளர் தொட க்கம் பெரிய பதவியில் இருக்ககூடிய அதிகாரிகள் வரை இவ் வெற்றிடங்கள் உள்ளன. கல்வி திணைக்களகம், சுகாதார திணைக்களம், உள்ளூராட்சி சபைகள் போன்றவற்றிலே இவ்வெற்றிடங்கள் அதிகமாகக் காணப்படுகின்றது.

மற்றைய திணைக்களங்களை விட உள்ளூராட்சி திணைக்களத்தில் அதிக எண்ணிக் கையான வெற்றிடங்கள் உள்ளது. உள்ளூராட்சி அலுவல்கள் நடைபெறத் தொடங்கியும் இன்னமும் அவற்றில் வேலை வாய்ப்பு வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. என்பது குறிப்பிடதக்கது.

## தமிழர்களையும் சிறுவர்களையும் படுகொலை செய்யும் இலங்கை அரசை அணிசேராவில் சேர்க்கவேண்டாம்---

(நமது அலுவலக நிருபர்)

தென்னாபிரிக்காவில் ஆரம்பித்துள்ள அணிசேரா நாடுகளின் மகாநாட்டை முன்னிட்டு பல நூற்றுக்கணக்கான தென்னாபிரிக்கா யாழ் தமிழர்கள் திரண்டு இலங்கை அரசிற்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். அரசிற்கு எதிரான பதாதைகள் தாங்கி எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்தியும் உள்ளனர்.

தமிழ் மக்களை இனப் படுகொலை செய்யும் இலங்கை அரசையும் சிறுவர்களை கண் மூடித் தனமாக கொலை செய்யும் இலங்கை அரசையும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளக் அனுமதிக்கூடாது என தென்னாபிரிக்க அரசை அங்கு திரண்டு இருந்த தமிழ் மக்கள் கோரியுள்ளனர். இம் மகாநாட்டில் இலங்கை ஜனாதிபதி கலந்து உரையாற்ற வருவது குறிப்பிடதக்கது.

## பட்டிப்பளை,வவுனதீவுப் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் விரைவில் சமூர்த்தித் திட்டம்

(நமது நிருபர்)

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களான பட்டிப்பளை வவுணதீவுப் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு விரைவில் சமூர்த்தி ஊக்குவிப்ளர்கள் நியமனம் வழுங்கி சமூர்த்தித் திட்டத்தை அமுல்படுத்த இருப்பதாக கடந்த 29ம் திகதி நாவற்குடா இந்து கலாச்சார மண்டபத்தில இடம்பெற்ற சமூத்தி ஊக்குவிப்பாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு சமூர்த்தி ஊக்குவிப்பாளர்கள். சங்கத் தலைவர் திரு டீ.ரவி தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டிற்கு மட்/ மாவட்ட சுதந்திர கட்சி அமைப்பாளர் ஜனாப் மௌசூர்க் மட் / மாவட்ட கம்னியூஸ் கட்சி அமைப்பாளர் ஆர்.சுந்தரேசன் ஈ.என்.டி.எல்.எப் அமைப்பாளர் திரு டினேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சமூர்த்தி திட்டத்தை அமுல்படுத்துவது சம்பந்தமாக பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டது இறுதியாக செயலாளர் திரு வே பத்மசிறி நன்றி உரை வழங்கினார்.

## கிழக்கு மாகாண வயல் பிரதேசங்களில் விமானத் தாக்குதல் விவசாயிகள் அச்சம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் தற்போது அடிக்கடி விமானக் குண்டுத் தாக்குதல் இடம் பெற்று வருகின்றன. விடுதலைப்புலிகளின் தளங்கள் மீதே இத்தாக்குதல் நடத்தப்படுவதாக அரசு அடிக்கடி அறிவிக்கின்றது. ஆனால் தற்போது சிறு போக அறுவடைக் காலமாதலால் பெரும்பாலான விவசாயிகள் அறுவடையில் வேலைகளில் ஈடுபடும் வேளையில் இவ்வாறான குண்டுத் தாக்குதலால் பெரிதும் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## யாழ் குடாநாட்டில் நிலவும் சீர்கேடுகள்

(நமது யாழ் நிருபர்)

யாழ்குடா நாட்டில் விடுதலைப்புலிகளின் கையில் இருந்து ராணுவத் தினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக மாறியதைத் தொடர்ந்து சில சமூக சீர்கேடுகள் தலைதுாக்கியுள்ளதாக மக்கள் கவலை அடைகின்றனர்

அண்மையில் நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தின் போது ஒரு யுவதியை இளைஞர் குழு ஒன்று கிண்டல் செய்ததை தொடர்ந்து பெரிய அடிபிடி சண்டையாகமாறி இறுதியில் இரு ஊர்களின் பிரச்ச னையாக மாறிவிட்டது இதேபோன்று சிறு சிறு திருட்டு சம்பவங்களும் காணப்படுகின்றன. மானிப்பாய நவாலிப்பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை விற்க விரும்பிய அதன் உரிமையாளர் மோட்டார் சைக்கிள் வாங்க போவதாக கூறிய நபர் ஒருவரிடம் கொடுத்து ள்ளார். அவரும் சைக்கிளை ஓட்டி பார்த்து எடுப்பதாக கூறி சைக்கிளை ஓட்டிச்சென்று தலைமறவாகி உள்ளார் இதுவரையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

யாழ்பாணத்தை விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த காலத்தில் இப்படியான நிகழ்வு இடம் பெறவில்லை என மக்கள் கவ லை அடைகின்றனர்.

## சுகாதரப் பரிசோதகர் மாணவர் நலன் புரிச் சங்கம் உதயம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு பொதுச் சுகாதார பரிசோதகர் பயிற்சி நெறி ஆண்டு 98/ 99 மாணவர்களுக்கான மாணவ நலன் புரிச்சங்க கூட்டம் கடந்த 19 ம் திகதி பனிப்பாளர் டாக்டர் எஸ். செல்வரஞ்சனின் தலைமையில் நடைபெற்றது இவ் பயிற்சி நெறிக்கு இணைப்பாளராக பீ.ஜே.விமலநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பின்வருவோர் நிருவாக சபையினராக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தலைவர் பி. சபாநாதன் , வீ. ஜோன் இமானுவேல் , பொருளாளர் இ.ரி.சலிம் உதவித்தலைவர் எஸ் .ஜெயசங்கர், உதவிச் செயலாளர் ஜ.எம் இத்ரீஸ், கணக்காய்வு அலுவலகர் ஏ.ராஜ்குமார் ,விளையா ட்டுச் செயலாளர் ஏ.எல்.நவ்பர் ,கலாச்சார செயலாளர் டீ. ராஜர விதர்மா

மேலும் குழு அங்கத்தவர்களாக மாவட்ட அடிப்படையில் ஒவ்வொருவராக ஒன்பது பேரும் இணைந்து நலன்புரிச்சங்கத்தின் மூலம் பயிற்சி நெறியில் உள்ள மாணவர்களினது கல்வி காலச்சார விளையாட்டு நலன்களை மேம்படுத்துவதற்காக மாணவர்களால் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## கல் நாட்டு விழா

(நமது நிருபர்)

கடந்த 31.08.1998 திங்கட் கிழமை கல்லடி வினாயகர் வித்தியாலத்தில் காலை 8.30 மணி அளவில் சுற்றுமதில் அமைப்பதற்கான அடிக் கல்லை பிரதம அதிதியாக கலந்து கொண்ட கௌரவ பாரளுமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் பரராசசிங்கம் அவர்கள் நாட்டினார்.

இதுவரை காலமும் முட்கம்களினால் அமைக்கப்பட்டு ஒரு பகுதியும் இன்னுமொரு பகுதி அரை குறையாக கல்லாலும் கட்டப்பட்டும், சரியான பாதுகாப்பு இல்லாமல் இருந்தது குறிப்பிடதக்கது. இதனால் பூச் செடிகள், பயிர்கள் ஏனைய செடிகள் நட முடியாமல் வேதனைப்பட்ட அதிபர்,ஆசிரியர்கள்,மாணவர்களுக்கு இது ஒரு நல்ல வரப் பிரசாதமாகும். மேலும் இச்சுற்று மதில் பாடசாலை அபிவிருத்திச்சபையின் பெரும் முயற்சி னாலும் அயராத உழைப்பினாலும் கிடைக்கப்பெற்றது என்பது குறிப்பிடத் தக்கது.

## தில்லைகுமரனின் மகோற்சவம்

(த.பிரதீஸ்)

கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற ஆலயங்களுள் ஒன்றாகவும் சின்ன கதிர்காம் என்றும் அழைக் கப்படும் மண்டூர் தில்லைகுமரனின் வருடாந்த மகோற்சவம்சென்ற 17ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் செப்டெம்பர் 6ம் திகதி தீர்தோற்சவத்துடன் இனிது முடிவடையும். உற்சவ நாட்களின் இரவு வேளைகளில் கூட்டுபிராத்தனை, கதாப் பிரசங்கம் போன்றவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## மீண்டும் தபால் நிலையம்

(மூதுார் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதுார்பிரதேசத்தில் மீள் குடியேற்றக் கிராமமான இறால் குழியில் மீண்டும் உப தபால் நிலையம் இயங்க ஆரம்பித்துள்ளது

1990 களில் இடம் பெற்ற வன்செயலின் போது உப தபால் அலுவலகம் சேதமாக்கப்பட்டதோடு இக்கிராமவாழ் குடும்பங்களும் இடம் பெயர்ந்து அகதிகளானார்கள்

1997 ஜுனில் இறால் குழி கிராமத்திற்கான மீள் குடியேற்ற நடவ்டிக்கைகள் மேற்கொள்ளபட்ட போதிலும் உபதபால் நிலையத்தை மீள் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் ஏதுவும் மேற்கொள்ளப்படாமையால் இரண்டு மைல் துாரத்தில் உள்ள மூதுார் தபாலகம் வந்தே தம் தேவைகளை இம் மக்கள் பூர்த்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது

இவ் அவல நிலை பற்றி தொலைத்தொடர்புகள் அமைச்சர் மற்றும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து திருகோணமலை மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ். நல்லதம்பி துரித நடவடிக்கை எடுத் ததன் காரணமாக சுமார் 9 ஆண்டு கால இடை வெளிக்குப்பின் மீண்டும் உபதாபாலகம் செயற்பட ஆரம்பித்துள்ளதுஎன்பது குறிப்பிடத்தக்கது.

## லியோ மாவட்ட தலைவராக தெரிவு

(நமது நிருபர்)

லியோ சின்னத்தம்பி விஜயபாலா இலங்கை 306C மாவட்டத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மட்டக்களப்பு லியோ கழக உறுப்பினராக 1994 லில் பிரவேசித்து கழக ரீதியில் செயலாளர், தலைவர் பதவிகளையும் இலங்கை மாவட்ட மட்டத்தில்பிராந்திய இயக்குனராகவும் முழு இலங்கை மல்டிபிள் டிஸ்ரிக் பொருளாளராகவும் 306C இணைப்பாளராகவும் பல பதவிகளை வகித்ததுடன் இவ்வாண்டு இலங்கையில் சிறந்த தலைவர் சிறந்த பிராந்திய இயக்குனர் சிறந்த லியோ ஆகிய விருதுகளை வென்றெடுத்துள்ளார்.

சிறந்த சமூக சேவையாளரான இவர் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட பல்கலைக்கழக இந்து மாணவ சங்கத் தலைவருமாவார்.

கிழக்குபல்கலைக்கழக வியாபார நிர்வாகமாணி (BBA) பட்டதாரியான இவர் தொழில் சார்கற்கை நெறிகளான கணக்கீட்டு தொழில் நுட்பவியலாளர் (MAAT) ,பட்டய கணக்காளர் தகுதிகாண் நிலை, (LICA), உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா இடை நிலை ஆகிய கற்கை நெறிகளைபூர்த்தி செய்துள்ளார்

சிவானந்தா தேசிய பாடசாலையில் பழைய மாணவரான இவர், ஆரையம்பதியை பிறப்பிட மாகவும் நாவற்குடாவை வசிப்பிடமா கவும் கொண்ட சின்னத்தம்பி- இராஜ லஷ்மி தம்பதிகளின் கனிஷ்ட புதல் வராவார்.

## பட்டிப்பளை,வவுனதீவுப் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் விரைவில் சமூர்த்தித் திட்டம்

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களான வவுனதீவுப் பிரதேச செ யலாளர் பிரிவுகளுக்கு விரைவில் சமூர்த்தி ஊக்குவிப்பாளர்கள் நியமனம் வழுங்கி சமூர்த்தித் திட்டத்தை அமுல்படுத்தாக இருப்பதாக கடந்த 29ம் திகதி நடவற்குடா இந்து கலாச்சார மண்டபத்தில இடம்பெற்ற சமூர்த்தி ஊக்குவிப்பாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு சமூர்த்தி ஊக்குவிப்பாளர்கள். சங்கத் தலைவர் திரு.டீ.ரவி தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டிற்கு மட்/ மாவட்ட சுகந்திர கட்சி அமைப்பாளர் ஜனாப் மௌசூர்க், மட்/ மாவட்ட கம்னியுஸ் கட்சி அமைப்பாளர் ஆர்.சுந்தரேசன் ஈ.என். டி.எல்.எப் அமைப்பாளர் திரு.டினேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சமூர்த்தி திட்டத்தை அமுல்படுத்துவது சம்பந்தமாக பல்வேறு தீர்மானங்கள் எடுக்க ப்பட்டது இறுதியாக செயலாளர் திரு.வே.பத்ம சிறி நன்றி உரை வழங்கினார்.

அடியார்கள் நலன்கருதி விஷேட போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

### முக்கிய அறிவித்தல்

ஹலோ.... ப்ளீஸ் உங்களைத்தான் நீங்கள் தினக்கதிர் வாசகரா....? உங்கள் கரத்திலுள்ள தினக்கதிரை பார்த்துக் கொள்ளுங்கள். ஏதாவது ஒரு பக்கத்தில் அச்சாகியதில் தவறியுள்ளதா...? இல்லை. அச்சாகாமலே உள்ளதா...? அந்தப் பிரதியை உங்கள் விற்பனை முகவரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு புதிய பிரதிஒன்றினை பெற்றுக் கொள்ளுங்கள். எம்மையும் மீறி தினக்கதிரின் அச்சாக்கத்தில் ஏற்பட்ட தவறுக்காவும் தங்கள் சிரமத்திற்காகவும் வருந்துகிறோம்.

-ஆசிரியர்.

### மாணவ செய்தியாளர்கள்

செய்திகள் சேகரிக்கவும், செய்தி விவரணங்களுக்கான தகவல்களைத் திரட்டவும், விவரணங்களை எழுதவும் ஆர்வமுள்ள மாணவ செய்தியாளர்கள் தேவைப்படுகின்றார்கள். பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்கள் தினக்கதிர் பத்திரிகையுடன் இணைந்து கொள்ளலாம்.

தமது சுய விபரங்களுடன் பின்வரும் விலாசத்தை வெட்டி. ஒட்டி அனுப்புபவர்களே தேர்வுக்கு தகுதியானவர்கள்.

மாணவ செய்தியாளர்கள்
தினக்கதிர்
த.பெ.இல. 06
மட்டக்களப்பு.

# ஸப்தரிஷி மண்டலத்தில் அலை திரளும் சக்தி உலகை உய்விக்கும் என அருளாசி!

இப்பூவுலகில் ஏழு அதிசயங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் 'லௌகீக' அதிசயங்களாகும். ஆனால் – இவ்வுலகின் ஆன்மிக ரீதியான மாபெரும் அதிசயமாக சப்தரிசிகள் மண்டலம் அமைகின்றது!

அதுவும் இந்தப் பேரதிசயம் மட்டக்களப்பு நகரின் கல்லடிக் கடலோரம் புதுமுகத்துவாரத்திலேயே அமைந்திருக்க அகத்திய மாமுனிவர் உட்பட சப்தரிசிகளின் அருளாசி வாய்த்திருக்கிறது!!

இவ்வாறு – இலங்கை – நுவரேலியா ஸ்ரீ காயத்திரி பீடாதிபதி ஸ்ரீமத் சுவாமி, காயத்திரி சித்தர், கலாநிதி எம்.முருகேசு அடிகளார் "தினக்கதிர்" – க்கு அருளாசி கூர்ந்து அளித்த விசேட நேர்காணலின்போது திருவாய் மலர்ந்தார்.

தினக்கதிரின் 25 வது வெள்ளி மலருக்காக இந்த ஆன்மிகப் 'பேட்டி' கைகூடியது.

சப்தரிசிகள் மண்டலத்தின் ஆன்மிகப் பேரதிசயம் குறித்து ஆய்வு நடத்த உலகின் பல பாகங்களிலும் இருந்து நவீன விஞ்ஞானிகள் மட்டுமாநகருக்கு வருகை தர இருக்கிறார்கள் – என்ற தகவலையும் சுவாமி முருகேசு அவர்கள் இந்தப் பேட்டியின் போது தெரிவித்தார்.

சப்தரிசிகள் மண்டல அமைப்பின் பூர்வாங்கம்பற்றி சுவாமிஜி விபரிக்கையில் குறிப்பட்டதாவது :-

"சப்தரிசிகளில் ஒருவராகிய ஈஸ்வரப்பட்ட மகரிசி யாம் இந்திய பவானி ஆச்சிரமத்தில் தியானத்தில் இருந்த ஒரு சந்தர்ப்பத்தில் சப்தரிசிகள் மண்டலத்தின் வடிவமைப்பைக் காட்டி அதனை அமைக்குமாறு உத்தரவு தந்து ஆசியும் அருளினார்.

அதனை 'பவானி'யில் அமைக்கவே முதலில் முயற்சித்தோம். ஆனால் அது கைகூடவில்லை.

பின்னர் – சென்னையில் அமைக்க காணியும் கொள்வனவு செய்து ஏற்பாடுகள் செய்தோம். அதுவும் நிறைவேறவில்லை.

அதன் பின்னர் – நமது நுவரேலியா ஸ்ரீ காயத்திரி பீட ஆச்சிரமத்தோடு சேர்த்து சப்தரிசிகள் மண்டலத்தையும் அமைக்க திட்டங்கள் வகுத்தோம். அங்கும் காரியமாகவில்லை.

கடைசியாக – கடந்தாண்டு (1997 ல்) யாம் மட்டக்களப்புக்கு வருகை தந்தபோது கல்லடிக் கடலோரம் அரசினால் ஸ்ரீ காயத்திரி பீடத்துக்கு வழங்கப்பட்ட காணியைப் பார்வையிடச் சென்றோம் –

அவ்விடத்தில் நின்று நாம் தியானித்த போது – அந்த இடத்திலேயே சப்தரிசிகள் மண்டலத்தை அமைக்குமாறு ஈஸ்வரப்பட்ட மகரிசி உள்ளிட்ட சப்தரிசிகளின் சம்மதத்துக்கு உத்தரவாகி ஆசியும் கிட்டியது!

அங்கே சப்தரிசிகளை முன்னிட்டு தியானித்து நாம் அடிக்கல் நாட்டி வைத்தோம்.

இரண்டு மாதங்களின் பின்னர் – எமது அருளாசி பெற்ற அம்மையார் ஒருவர் இவ்வூரில் நமது பக்தர்களில் ஒருவரான இஞ்சினியர் ரவீந்திரன் (நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர்) சகிதம் அந்த இடத்தைப் பார்க்கச் சென்றிருக்கிறார்.

அங்கே அம்மையார் தெய்வீக சக்தியால் ஆட்கொள்ளப்பட்டு மெய்சிலிர்த்தவராய் – தாமே சப்தரிசிகள் மண்டலத் திருப்பணி வேலைகளை நிறைவேற்றித் தருவதாகக் குறிப்பிட்டு, உடனடியாக அவ்விடத்தில் வைத்தே பக்தர் ரவீந்திரனிடம் ஒரு தொகைக்கான காசோலையையும் எழுதிக் கொடுத்து நிர்மாணிப் பணிகளைத் தொடருமாறு வேண்டிக் கொண்டார்.

சுமார் ஆறு மாத காலத்தில் கல்லடிக் கடற்கரையில் சப்தரிசிகள் மண்டல நிர்மாண வேலைகள் பூர்த்தியாகின.


இது மகரிசிகள் தோன்றாத் துணையாக நின்று நடத்தி வைத்த திருப்பணி என்றே கூறவேண்டும்.

நுவரேலியாவுக்கு எம்மிடம் ஆன்மிக சாதனை பயில வரும் மேல்நாட்டவர்கள் பலர் மட்டுநகருக்கு வந்து இந்த சப்தரிசிகள் மண்டலத்தை தரிசித்து சென்றிருக்கிறார்கள். இங்கு அவர்களுக்கு ஏற்பட்ட தெய்வீக காந்த ஆதர்சன சக்தியின் ஈர்ப்புக் குறித்து பிறரிடம் கூறிப் பிரமிப்படைந்துள்ளனர்.

சப்தரிசிகள் மண்டலத்தின் மகாகும்பாபிசேக விழாவுக்கு உலகின் பல பாகங்களிலும் இருந்து பக்தர்கள் வருகை தரவிருக்கிறார்கள்.

கும்பாபிசேக விழாவை அடுத்து இங்கு தியான நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெறும்.

அத் தியான நிகழ்வின்போது மகரிசிகளின் அருட் சக்தி ஈர்க்கப்பட்டு அவை ஆகாய மண்டலத்தில் அலை பாயும். உலகின் பல்வேறு பாகங்களிலும் உள்ள அருள்த் தாகம்



கொண்ட பக்தர்கள் ஆங்காங்கு தியானத்தில் இருந்து இந்தத் தெய்வீக காந்த அலைகளைத் தங்களுக்குள் ஈர்த்து சப்தரிசிகளின் அருளாசியைப் பெற்றுய்ய முடியும்"

சுவாமி முருகேசு அவர்கள் தமக்கு அகத்திய மாமுனிவரின் தரிசனம் கிட்டிய ஆன்மிக அனுபவம் பற்றியும் இப்பேட்டியில் பிரஸ்தாபித்தார்.

"எமது குருநாதர் அகத்தியரிடம் பதினான்கு ஆண்டுகள் ஆன்மிக சாதனம் பயின்றனர்! யாம் குருநாதரிடம் சாதனம் பயின்று கொண்டிருந்த காலத்தில் ஒரு சந்தர்ப்பத்திலே குருநாதர் எம்மை தூய உடலை விட்டு சூட்சும சரீரத்தில் அகத்தியர் பெருமானிடம் அழைத்துச் சென்று அப்பெருமானுடைய அனுக்கிரகத்தைப் பெற்றுத் தந்தார்! நீலகிரி மலையில் இந்த அற்புதம் நிகழ்ந்தது" – என்று சுவாமிஜீ அதனை விபரித்தார்.

சப்தரிசிகள் மண்டல ஆன்மிக அருட் சக்தி பற்றி விஞ்ஞான ரீதியாக ஆராய்வு செய்வதற்கு மேல்நாட்டு விஞ்ஞானிகள் இங்கு வருகை தருவது பற்றி சுவாமிஜி குறிப்பிட்டுச் சொன்னதாவது :-

விஞ்ஞானிகள் 'மெய்ஞானம்' குறித்து ஆய்வு செய்வதில் அவர்கள் வெற்றி காண முடியாது என்பதே எமது அபிப்பிராயம்! எல்லா மண்டலங்களோடும் எங்களுக்குத் தொடர்புண்டு. பல கோடிக்கணக்கான பணச் செலவுகளோ, தொழில் நுட்ப உபகரணங்களோ, வானவூர்திகளோ என்ற ஒன்றுமில்லாமல் இப்பூலோகத்துக்கு அப்பாலுள்ள மண்டலங்களுடன் தொடர்பு கொள்வோம். எமது அபிப்பிராயப்படி சந்திரன், செவ்வாய் முதலான கிரகங்களுக்கு விஞ்ஞானிகள் சென்று வர முடியாது! மனிதன் மனித தேகம் கொண்டு விஞ்ஞானத் துணையோடு சந்திர மண்டலம் உட்பட அங்கெல்லாம் போகவே முடியாது. ஆனால் – மெய்ஞானிகளாகிய மகரிசிகள் எல்லா மண்டலங்களுக்கும் சென்று – அங்கெல்லாம் சஞ்சாரம் செய்து – ஆங்காங்குள்ள பேருண்மைகளைப் பூலோகத்துக்கு கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். மகரிசிகளுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள எங்களுக்கு இந்த இரகசியங்கள் தெரியும். இதனை உலக மக்களும் விஞ்ஞானிகளும் புரிந்து உணர்ந்து கொள்வார்களேயானால் சாந்தி நிறைந்த புதிய யுகம் ஒன்றை இம் மண்ணிலே படைக்கலாம் –

அன்று மெய்ஞானிகள் கண்டு அனுபவித்த ஆன்மிக இரகசியங்களை இன்று விஞ்ஞானிகள் கண்டு பிடிக்க முயற்சிக்கிறார்கள். ஆனால், உலக சாந்திக்குத் தேவையான எதனையும் அவர்களால் இதுவரை கண்டு பிடிக்க முடியவில்லை!

இன்றைய சஞ்சலம் நிறைந்த இந்த உலகுக்கு சாந்தி நிலவ மகரிசிகள் விரும்பி – "சப்தரிசிகள் மண்டலம்" ஆகிய இப் புண்ணிய கைங்கரியத்தை செய்ய அவர்களை அண்டியிருக்கும் எம்மைப் போன்றவர்களுக்கு உத்தரவிட்டு மறைமுகமாக எம்மைக் கண்காணித்து வருகிறார்கள்"

மேற்கண்டவாறு, சுவாமி முருகேசு அவர்கள் விபரித்து, அருளாசியுடன் இந்த பேட்டியை நிறைவு செய்து வைத்தருளினார்.

வீ.சு.கதிர்காமத்தம்பி

# குற்றவாளி ராஜபக்ஷ மீதான தாக்குதல் செம்மணி புதைகுழி மீது சேறு பூசும் நடவடிக்கை

செம்மணியில் 400 பேரின் சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை தன்னால் அடையாளம் காட்ட முடியும் எனவும் எடுத்துக் கூறிய மரண தண்டனைக் குற்றவாளியான ராஜபக்ஷவை சிறைச்சாலையில் வைத்து பலவந்தமாக தாக்கியமை ஒரு திட்டமிடப்பட்ட தாக்குதலாகும். இவை செம்மணி புதைகுழி விவகாரத்தின் உண்மை நிலைமை வெளிவராமல் சேறு பூசம் நடவடிக்கையாகவும் அமைகின்றது.

யாழ் சுண்டிக்குளி மகளீர் கல்லூரி மாணவியான கிருஷாந்தினி குமாரசாமியை பாலியல் வல்லுறவு புரிந்து கொலை செய்தது இராணுவத்தினர் தான் என்பது நன்கு நிரூபணமானதுடன் சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட பல மனித உரிமை பேணல் அமைப்புக்கள் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து கிருஷாந்தினி கொலை தொடர்பான வழக்கை விசாரணைக்காக அரசு எடுத்தது. விசாரணை இறுதியில் 6 இராணுவத்தினர் மீது மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஒரு பாடசாலை மாணவியை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி படுகொலை புரிந்த குற்றச் சாட்டுக்காக இலங்கை அரசு இராணுவத்தினருக்கு மரண தண்டனை வழங்கியுள்ளது என பாராட்டும் வண்ணமே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதை விடுத்து ஒரு தமிழ் மாணவியின் படுகொலையின் அனுதாபத்துக்கு கிடைத்த பரிசு அல்ல. ஏனெனில் கிருஷாந்தி போன்று கிழக்கில் கோணேஸ்வரி உட்பட பல தமிழ்ப் பெண்கள்



பாலியல் வல்லுறவுக்கு இரையாகி மரணப் படுக்கையில் விழுந்துள்ளனர். அவர்களை எல்லாம் ஆதாரபூர்வமாக நிருபித்தால் இன்று எத்தனையோ படையினர் மரண தணடனையை ஏற்க வேண்டி வரும். அவ்வாறான ஒரு நிலைமையை உருவாக்க அரசு தயாராக இல்லை. இதேவேளை கிருஷாந்தினி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஆறு குற்றவாளிகளில் 1ம் எதிரியான சோமரெட்ண ராஜபக்ஷ மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கிய பின் கருத்து தெரிவிக்கையில் செம்மணியில் 400 தமிழர்களினை கொலை செய்து புதைத்துள்ளதாகவும் தம்மால் அவற்றை அடையாளம் காட்ட முடியும் எனவும் குறிப்பிட்டிருந்தார். அவரது வாக்குமூலத்தை தொடர்ந்து தமிழ் கட்சிகள் உட்பட பல்வேறு மனித உரிமை பேணல் அமைப்புக்களும் செம்மணி புதைகுழியை தோண்டி விசாரணை செய்ய வேண்டும் என அரசை வற்புறுத்தினர். இறுதியில் செம்மணியில் புதைகுழி இருந்தால் அவற்றை தோண்டுவோம் விசாரணை செய்வோம் என அறிக்கை விட்டனரே தவிர உடனடியாக அவற்றை தோண்டி விசாரணை செய்ய முயற்சிக்கவில்லை என்பது வேதனைக்குரியது.

பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் ஜே.வி.பியினரின் கிளர்ச்சி உக்கிரமடைந்திருந்தது. இறுதியாக பிரேமதாஸாவின் உத்தரவின் பேரில் குளக்கொட்டியா என்றழைக்கப்படும் பச்சைப் புலிகள் இராணுவப் பிரிவினரால் பலநூற்றுக்கணக்கான ஜே.வி.பி உறுப்பினர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். பல நூற்றுக்கணக்கானோர் காணாமல் போனர். அவ்வாறு காணாமல் போனோர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சூரியகந்தை புதைகுழியைப் போன்ற ஒன்று தான் செம்மணி புதைகுழி. சூரியகந்தை புதைகுழியைத் தோண்டி அங்கிருந்த எலும்புக் கூடுகளை வெளிக்காட்டி அரசியல் பீடம் ஏறிய அம்மையார் ஏன் செம்மணி புதைகுழியை மட்டும் தோண்டுவதில் கால இழுத்தடிப்பு செய்கிறார். மரண தண்டணையை எதிர்பார்த்து காத்திருக்கும் ஒரு குற்றவாளியே தம்மால் செம்மணி புதைகுழியை காட்ட முடியும் எனக் கூறிய பின்பும் அவற்றை தோண்டி விசாரணை செய் யாது மீண்டும் மீண்டும் குற்றவாளியை விசாரிப்பதால் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. கள்ளனை கண்டேன். திருடிய பொருட்களையும் காட்ட முடியும் என ஒருவர் ஒப்புக் கொண்ட பின்பும் திருடனை எப்போது கண்டாய், அவனது தோற்றம் என்ன? என காட்டித் தருவதாக ஒப்புக் கொண்டவரை விசாரணை செய்வதால் யாதென்றும் நிகழப் போவதில்லை.

இதேவேளை ராஜபக்ஷவ கடந்த 20 திகதி வெலிகடைச் சிறைச்சாலையில் வைத்து சிறைச்சாலை ஊழியர்களால் தாக்கப்பட்டுள்ளார். செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பான இரகசியத்தை வெளியிட்டமை தொடர்பாகவே தாக்கி சித்திர

14 பக்கம் தொடர்ச்சி

யாழ் சுண்டிக்குளி மகளீர் கல்லூரி மாணவியான கிருஷாந்தினி குமாரசாமியை பாலியல் வல்லுறவு புரிந்து கொலை செய்தது இராணுவத்தினர் தான் என்பது நன்கு நிரூபணமானதுடன் சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட பல மனித உரிமை பேணல் அமைப்புக்கள் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து கிருஷாந்தினி கொலை தொடர்பான வழக்கை விசாரணைக்காக அரசு எடுத்தது. விசாரணை இறுதியில் 6 இராணுவத்தினர் மீது மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அருண் எழுதும் தத்துவத்தொடர்

# மனக்கோலங்கள் - 8

## எண்ணங்களும் வாழ்வும்

எண்ணங்கள் தாம் ஒரு மனிதனை ஆட்டுவிக்கின்றன என்று பெரியோர்கள் கூறுவார்கள். எண்ணங்கள் நல்லவையாக இருந்தால் அந்த மனிதனின் வாழ்வு சிறப்படைகிறது. எண்ணங்கள் தீயவையாக இருந்தால் மனிதனின் வாழ்வு பாழடைகிறது. இதைத்தான் மனம் போல வாழ்வு என்று முன்னோர்கள் சொல்லி வைத்துள்ளார்கள்.

ஆனால் பல மனிதர்கள் தீய எண்ணங்களைச் சுமந்து கொண்டு நல்ல மனிதர்கள் போல் தோற்றமளிக்க ஆசைப்படுகிறார்கள். பெரியார்கள் போல் பவனி வரத் துடிக்கிறார்கள். எண்ணங்கள் தாம் ஒரு மனிதனது வாழ்க்கை முறைமையைத் தீர்மானிக்கிறது என்பதிலெல்லாம் இவர்களுக்கு நம்பிக்கை கிடையாது.

என்றாலும் இவர்கள் சமூகத்தின் முன்னால் என்றோ ஒரு நாள் தோற்றுப் போய்த் தலை குனிந்து நிற்க வேண்டி வந்து விடுகிறது. புத்தியுள்ளவர்கள் உணர்ந்து கொள்கிறார்கள். திருந்தியும் விடுவார்கள். புத்தியற்றவர்களோ பாவம் தலைகுனிந்து போன சங்கதி கூடத் தெரியாமல் வாழ்ந்து விடுகிறார்கள்.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான் என்று சொல்வது இத்தகையவர்களுக்குத்தான் வெகுவாகப் பொருந்தும். ஆடுகிற ஆட்டமும் போடுகிற வேஷமும் ஒரு நாளைக்கு வெளிச்சத்திற்கு வந்தே தீரும்.

தீய எண்ணங்களால் ஆட்கொள்ளப்படுபவர்கள் தங்களது புத்திப் பலத்தால் குடும்பப் பலத்தால் வேறு புறக்காரணிகளால் அந்தஸ்துடனும் மாலை மரியாதைகளுடனும் வாழக் கூடும். ஆனால் இவை அவர் பலமாக இருக்கும் வரைதான் நீடிக்கும். பலம் குறைந்து விட்டால் அடுத்த கணமே அரைக் காசுக்குக் கூடப் பெறுமதியற்றுப் போய் விடுவார்கள்.

தீயவர்களாக இருப்பதைவிட தீய எண்ணங்களைச் சுமந்து கொண்டு நல்லவர்கள் போல் வேஷம் போடுபவர்கள் எப்போதும் ஆபத்தானவர்கள். இவர்கள் எல்லா இடங்களிலும் ஊடுருவார்கள். எல்லா மேடைகளிலும் மாலை பெறுவார்கள். எல்லாப் பதவிகளையும் அலங்கரிக்கத் துடிப்பார்கள்.

இத்தகையவர்கள் ஏறுகின்ற மேடையும் நாசம் அலங்கரிக்கின்ற பதவிக்கும் தோஷம். நல்ல கௌரவமான பதவிகள் கூட இவர்களால் கேவலப்பட்டுப் போகிறது.

இவர்கள் பெறும் பதவிகளுக்கு எவ்வளவுக்கெவ்வளவு அதிகாரம் இருக்கிறதோ அவ்வளவுக் அவவளவு நாட்டுக்கும் மக்களுக்கும் கேடு.

இவர்கள் நகரத் தலைவராக இருந்தால் நகரத்துக்குக் கேடு. பாராளுமன்ற உறுப்பினராக இருந்தால் தொகுதிக்குக் கேடு. மத்திய அமைச்சராக இருந்தால் நாட்டுக்கே கேடு.

இவர்கள் பதவி தேடுவதெல்லாம் சேவை செய்வதற்கல்ல. தானும் தன் குடும்பமும் வாழ்ந்து விட்டுப் போவதற்காக. சமுதாயத்தின் பெரிய குடும்பம் என்று முத்திரை குத்திக் கொள்வதற்காக. ஊருக்குப் பொதுவாக இருக்க வேண்டியவற்றை முடிந்த மட்டும் வளைத்து தங்கள் குடும்பச் சொத்தாக மாற்றிக் கொள்வதற்காக.

அபின் விற்ற பணம் கூட அதிகாரம் கிடைத்தால் நியாயமாகி விடும் என்று நம்புவபவர்கள் இவர்கள். இல்லாவிட்டால் வடிசாராயம் வடித்தவன் , கோழி களவெடுத்தவன், களவாக வாழைக்குலை வெட்டி வளர்த்தவன் என்று எத்தனை அயோக்கிய சிகாமணிகள் பெரிய மனிதர்களாகக் பவனி வருகிறார்கள். கோயில் பணத்தைத் திருடி வாயில் போட்டுக் கொண்டு தர்மவான்களாகத் திரிகிறார்கள். ஊரை அடித்து உலையில் போட்டவர்கள் ஊர்மக்களுக்கே வழி காட்டுகிறார்கள்!

இவர்களைப் பார்த்து ஊரே கெட்டுப் போகின்றது. நல்ல சிந்த னைகள் வீறு கொண்டெழ வேண்டிய இளைஞர் நெஞ்சங்களில் விரக்தி தோன்றுகிறது. தருமம் பிழைத்துக் கொள்ளும் நீதி நியாயங்கள் எப்போதும் நிமிர்ந்து நிற்கும் என்று சொல்வதெல்லாம் ஏட்டுச்சரக்கு என்ற எண்ணமே மேலோங்கி வருகிறது.

இவர்களைப் பற்றி எவ்வளவுக்கெவ்வளவு ஒருவன் அறிந்து கொள்கிறானோ அந்த அளவுக்கு அவனும் கெட்டுப் போக வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறான். நல்ல வாழ்க்கை என்பது ஊரை ஏமாற்றுவது நியாயங்களைக் கொல்வது என்பவற்றால் மட்டுமே கிடைக்க வல்லது என்று முடிவு கட்டுகிறான்.

நேர்மையாய் வாழ்பவன் தரித்திரனாயும் அதிகாரபலம் அற்றவனாயும் இருப்பதைக் காணும் எவனுக்குத்தான் நேர்மையில் நம்பிக்கை பிறக்கும். அயோக்கியன் நாட்டுக் கொடியை ஏற்ற நேர்மையானவன் ஓரத்தில் நின்று கை தட்டுகிறான். ஊரை ஏய்த்தவன் நீதி சொல்ல உழைப்பாளி கேட்டுக் கொண்டிருக்கிறான்.

தொடரும்..........

**வாசகர்களே.......!**

**உங்களுக்கு ஜாதகத்தில் நம்பிக்கை உண்டா... உங்கள் குறிப்பின் போட்டோ பிரதியுடன் கீழ் உள்ள கூப்பனை வெட்டி முத்திரை ஒட்டிய தபாலுறையுடன் அனுப்பி வையுங்கள். தினக்கதிர் இலவசமாக உங்கள் அதிஷ்ட காலத்தை கணித்து அனுப்பி வைக்கும்.**

பெயர் :...............................................

முகவரி:...............................................

...............................................

# பாசப்பயிர்

குழந்தைகள்தானே, அதற்கு என்ன உணர்ச்சிகள் இருக்கப் போகிறது? என்று பல சமயங்களில் நாம் இருந்து விடுவது உண்டு. பெரியவர்களுக்கு இருக்கும் எல்லா உணர்ச்சிகளும் குழந்தைகளுக்கும் இருக்கின்றன. ஆனால் அவைகள் தங்கள் உணர்ச்சிகளை வெளியிடும் விதத்தில் தான் வித்தியாசமிருக்கிறது. இன்று எத்தனையோ பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் செலவழிக்க வேண்டிய நேரத்தில் கூடிய பங்கை பணம் சம்பாதிப்பதிலேயே செலவழித்து விடுகின்றனர். அவர்கள் குழலின் இசையையும் காற்றின் இசையையும் தான் விரும்புகின்றனர் போலும்.

வயதாகி பெரியவர்களாகிய நம்மை விட குழந்தைகளின் உணர்ச்சிகள் மிகவும் தீவிரமானது. உதாரணமாக ஒரு குழந்தை தன் அம்மா தன்னை இடுப்பில் வைத்துச் சோறு ஊட்டி விட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. எனில் தான் நினைத்தது நிறைவேறும் வரை தன்னுடைய பிடிவாதத்தைத் தளர்த்தாமல் அழுது அடம் பிடித்து ஊரைக்கூட்டும்.



பெரும்பாலும் குழந்தைகளிடம் பிடிவாத குணம் உருவாக உணவு தேவையான அளவு உறக்கம் முதலியவை கிடைக்காமல் இருப்பதே முக்கிய காரணம். குழந்தைப் பருவத்தில் அவைகளிடம் பொதுவான சில உணர்ச்சிகளை நாம் காணலாம்.

தவழும்போது கால் உராய்தல். விளையாட்டுப் பொம் மைகளுடன் சண்டை மற்றக் குழந்தை களின் தாக்குதல் முதலியவை குழந்தைகளின் கோப உணர்வைத் தூண்டி விடக்கூடிய சங்கதிகளாகும். இதனால் இவைகள் தங்கள் கோபத்தை குழந்தைகளை அடிப்பது. கையில் கிடைப்ப வற்றை வீசிவிடுவது காலைப் பரப்பிக் கொண்டு அழுவது பிராண்டுவது கடிப்பது போன்ற செய்கைகளால் வெளிப்படுத்துகின்றன.

குழந்தைப் பருவம் பயமறியாப்பருவம் உடல் உணர்ச்சிகளின் மூலமே பயத்தினை உணரும் நிலையில் உள்ளதால் குழந்தைகளின் பய உணர்வுக்குதொட்டதெல்லாம் காரணமாகிவிடும். ஆகவே குழந்தையின் பயத்திற்குரிய காரணத்தை உடனடியாகக் கண்டறிந்து குழந்தையின் பயத்தைப் போக்க வேண்டும்.

ஒரு சிறு எறும்பு கடித்து வலியினால் அழத்தொடங்கும் குழந்தை கடிக்காத எறும்பைக் கண்டதும் கூட நசுக்கி விடும் மனோ பாவத்தை வளர்த்துக் கொள்கிறது.

தம் உள்ளத்து உணர்வுகளை பேச்சு வடிவில் வெளிப்படுத்த குழந்தைப் பருவத்தில் இயலாது ஆனால் குழந்தைகள் தங்களுக் குள்ளேயே கற்பனை செய்து கொள்கின்றன. தூக்கத்தில் சிரிப்பது சிணுங்குவது அழுவது முதலியன இவைகளின் கற்பனைகளின் விழைவுகளாகும். இருட்டைக் கண்டு பயப்படுவது கழிவறை அல்லது குளியலறைத் தொட்டிகளைக் கண்டு பயப்படுவது முதலிய கற்பனைப் பயங்களை விலக்கி தைரியமூட்ட வேண்டும்.

குழந்தைகளுக்குள் ஒரு விழையாட்டு ஒருவரையொருவர் பயங்காட்டி விளையாடுவது. இவ் விளையாட்டு விபரீதமாகி குழந்தையின் மனதில் பயம் கவ்விக்கொண்டால் எதிர் காலத்தில் தனி மனித ஆளுமையைப் பாதிக்கும் ஆபத்து உருவாகி விடும். அர்த்தமற்ற பயங்களை குழந்தை மனங்களில் இருந்து விலக்குவது பெற்றோர்களின் கடமை. ஆனால் சில குழந்தைப் பருவ பயங்கள் இறுதிவரை நம்மை விட்டு அகலுவதில்லை.

சிறு குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களின் கவனம் அல்லது கருத்து தன்னை விட்டு வேறிடம் தாவிவிட்டால் அதைக் குழந்தைகள் தாங்கிக் கொள்ளாது. உதாரணமாக முதல் குழந்தைதனக்கடுத்து வந்த குழந்தை மீது தன் பெற்றோர்கள் காட்டும் கவனிப்பை விரும்புவதிலை இது குழந்தையின் பொறாமை உணர்ச்சியை காட்ட முடியாது என்பதால் அந்தப் பூம்பிஞ்சைக் கிள்ளி அடித்து, கடித்து விட்டு வந்துவிடும். இது மறைமுகமாகவே தான் பொறாமையைக் காட்டும் படுக்கையில் சிறுநீர், கழித்தல் எப்போதும் வியாதியுடனோ அல்லது மிகவும் குறும்புக்காரத் தனத்துடனே வளரும். இம் மாதிரியான குணங்களை குழந்தைகள் வளர்த்துக் கொள்ளக் காரணம் பெற்றோர்கள் தம்மை வளர்க்க வேண்டும் என்பதற்காகத்தான்.

குழந்தைப் பருவத்தில் காணும் எந்தப் பொருளையும் புதுமையான தாகவே உணருகிறது அப்பொருளைக் கண்டதும் அதைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வமடைகிறது. ஆரம்பத்தில் அப்பொருளைப் பிடிக்கவோ எடுக்கவோ எத்தனிக்கும் அக்குழந்தை வளர்ந்தபின் புதுப் பொருட்களைப்பற்றி பலநூறு கேள்விகளைக் கேட்கத் தொடங்கும் அப்போது பெரியோர்களும் பெற்றோர்களும்பொறுமையுடன் பதில் சொல்ல வேண்டும். மற்றக் குழந்தைகளின் திறமைகளைப் பார்த்ததும் அவர்களிடம் உள்ள பொருட்களைப் பார்த்ததும் குழந்தைகள் ஏங்கும் இம்மாதிரியான ஏக்கங்கள் உள்ள குழந்தைகள் கோள் சொல்லும் அல்லது மற்றக் குழந்தைகளின் பொருட்கள் பற்றியே பேசிக் கொண்டிருக்கும். முடிந்தவரை பெற்றோர்கள் குழந்தைகளின் மன ஏக்கங்களைத் தவிர்த்து விட வேண்டும்.

புதிய ஒலிகள் அல்லது புதிய பொருட்களைப் பார்த்தால் அல்லது மற்றக் குழந்தைகளுடன் அல்லது பெற்றோர் பெரியவர்களுடன் விளையாடும் போது மகிழ்ச்சியடைகிறார்கள் தாங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கும் பொழுது கைகொட்டிச் சிரிப்பார்கள். துள்ளல், குதித்தல், அல்லது சந்தோஷத்திற்குரிய பொருள் அல்லது மனிதரைக் கட்டிக் கொள்தல் முதலிய செயல்களைச் செய்கின்றன.

குழந்தை விரும்பும் எந்தப் பொருளாவது அல்லது நபராவது அதை விட்டுப் பிரித்து விட்டால் குழந்தை சோகமாகிறது. இச்சோக நிலையை குழந்தை தன் அழுகையின் மூலமாகக் காட்டுகின்றது. இது தன்னுடைய இயல்பான உண்ணல் உறங்கல் போன்ற செயல்களைப் புறக்கணிக்கிறது.

**திருமதி சகாதேவன்**

குழந்தைகள் பொருட்களையும் மனிதர்களையும் மிருகங்களையும் நேசிக்கத்தெரிந்து கொள்கின்றனர். தங்களுடைய பாசத்தை கட்டியணைத்தல் முத்தமிடுதல் தட்டிக் கொடுத்தல் போன்ற செயல்களால் வெளிப்படுத்துகின்றனர்.

குழந்தைகளின் உணர்ச்சி வெளிப்பாட்டு முறைகள் பெரும்பாலும் அவர்களது வயது, மனத்திறன் வித்தியாசங்கள், குடும்ப அளவு குழந்தையின் வளர்ச்சி சூழ்நிலை முதலியவற்றின் அடிப்படையிலேயே அமைகிறது.

குழந்தைகளின் மன உணர்ச்சிகள் சரியானபடி வெளிப்பட முடியாமல் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டால் குழந்தைகளின் உள்மனம் பாதிக்கப்பட்டு, ஆளுமை நசுக்கப்பட்டு மனோ வலிமை குன்றிய மற்றும் பொருத்தமற்ற ஆளுமைகளை வளர்த்துக் கொண்டு குழந்தைகள் வளருகின்றனர்.

செடி, கொடி, பிராணிகளைப் போல நாம் வளர்க்கும் விதத்தில் தான் நல்ல ஆளுமைகளை குழந்தைகள் வளர்த்துக் கொள்கின்றனர் என்பது உறுதி.

# சமாதான நீதவான்

மட்டக்களப்பு – கல்லடி முகத்துவார்ரத்தைச் சேர்ந்த இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர் கோணேசன் தம்பிப்பிள்ளை மட்டக்களப்பு நீதி நிர்வாக மாவட்டத்திற்கான சமாதான நீதவானாக அண்மையில் நீதிபதி எஸ்.விஸ்வநாதன் முன்னிலைய்யில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் முதலாந் தர கிராம உத்தியோகத்தராக கதிரவெளி, கல்லடி முகத்துவாரம் முதலான இடங்களில் கடமையாற்றியவர். பெரியகல்லாற்றைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கோட்டைமுனை – புன்னையம்பதி ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலய பரிபாலன சபையின் உப தலைவரான இவர் பல் வேறு சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.



# நெதர்லாந்து பயணம்

(கொக்கட்டிச்சோலை நிருபர்)

செங்கலடி மக்கள் வங்கி முகாமையாளரான திரு.க.ஆறுமுகம் அவர்கள் புலமைச் பரிசில் நிமித்தம் நெதர்லாந்துக்குப் புறப்பட்டுள்ளார்.

கன்னங்குடாவைப் பிறப்பிடமாகவும் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் பொருளாளராகவும் சமாதான நீதிவானகவும், விபுலம் நூல் வெளியீட்டாளராகவும், விமோசனா கலைக் கழகத்தின் தலைவராகவும் கடமை புரியும் இவர் பல பொது நலத்தொண்டுகளின் முன்னோடி என்பது குறிப்பிடத் தக்கது.

ஒரு மாத கால புலமைப் பரிசில் நிமித்தம் சிறந்த வங்கி முகாமையாளராக தெரிவு செய்யப்பட்ட பத்துப் பேரில் இவர் மட்டுமே தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம்

கொத்துக்குளம் மாரியம்மன் ஆலயத்தைப் பார்த்த பொழுது விஷேசமான கவர்ச்சியொன்று தெரிந்தது. படுவான் நோக்கிச் செல்லும் பகலவன் வெப்பத்தைத் தணித்து நிறத்தை மாற்றிக் கொண்டான். பழுப்பு மஞ்சள் நிறத்திலிருந்து சிவப்பு நிறமாக மாறிய சூரியன் செம்பந்து போல அம்மன் கோயிலுக்கு மேலே காட்சியளிக்கிறான். காட்சிகளைத் தனியே இரசிப்பதைவிட ஈடுபாடான இன்னொருவருடன் ரசிக்கும்போது இன்பம் துளிர்க்கிறது.

உதயன் பள்ளிப்பருவத்தே கூட்டாக ரசித்துப் பழகியவன். கோழியின் சிறகுக்குள்ளிருந்த குஞ்சுகள் திசை பலதுக்கும் விடை தெரிந்து ஓடுவதுபோலப் பாடசாலையை விட்டுப் படிப்பு முடிந்து நண்பர்கள் ஓடிவிட்டார்கள். தொழிலைத் தேடி மலைகளுக்கு ஓடும் போது கூட்டாக ஓடுவது சாத்தியமில்லைத்தானே. பலநாள் தேடியபின் ஒருவாறு வேலை கிடைத்துவிட்டது. தாய்தந்தையருக்குரிய கடமைகள் தங்கை தம்பியர்களுக்குரிய கடமை இத்தியாதி கடமைகள் முடித்துத் தலை நிமிர்ந்தபோது ஐந்து வருடங்கள் முடிந்திருந்தன. நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி மாரியம்மன் கோயிலுக்குப் போய் அமைதியாக வழிபட்டபோது தலைப்பாரம் குறைந்தது போல ஒரு உணர்வு. நம்மையெல்லாம் பார்வையிலே பிணி தீர்க்கும் பராசக்தியின் உருவமல்லவா? அந்த உணர்வுக்கு பின் அடிக்கடி அந்த அம்மனைத் தரிசிக்கும் பழக்கம் வந்துவிட்டது.

கோயில்மணி அடிப்பதற்கு இன்னும் பத்து நிமிடம் பாக்கி இருக்கிறது. வெறுமையாக இருந்த இதயத்தில் இடம்பிடித்துக் கொண்டிருக்கும் இதயா அந்த வழியாலே வருவாள். சிலவார்த்தைகள் பேசிக் கொண்டு போவது சரியாக இருக்கும். இப்படி நினைத்துக் கொண்டுதான் ஊறணிச் சந்தியில் தரித்து நின்றான். இதயா வரவில்லை. மனதில் நிம்மதி இல்லை. பழகிவிட்டால் இப்படித்தான். இதயா வரவில்லையென்றால் கோயில் மணி அடிக்காமலா போகும். மணி அடித்து விட்டது. இனிமேலும் தாமதிக்க முடியாது. உதயன் துவிச்சக்கர வண்டியை உருட்டியபடி நடந்தான். அவள் வந்தாலும் வருவாள் என்ற நம்பிக்கை அப்படி உருட்ட வைத்தது. கோயில் வளவுக்குள் வந்தும் ஆகிவிட்டது. இப்போது சந்தியால் வேகமாக நடந்து வருவாள். தம்பிப் பயலை இழுத்துக் கொண்டு என்றது உள்மனம். சாதகமான சூசகம் சொல்லிப் பழக்கப்பட்ட மனம். அதை எப்படி உதாசீனம் செய்வது. அம்பாளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு திரும்பிப் பார்த்தான். ஒரு மயில்நீலச் சேலை தெரிகிறது. நேற்றும் இந்தச் சேலைதானே கட்டி வந்தாள். நம்பிக்கை பலக்கிறது. கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். அது இதயாவே இல்லை. வழக்கமாக மல்லிகைச்சரம் கொண்டு வரும் மாரியம்மாளின் பக்தை. நேரம் சற்றுப் பிந்திவிட்டது. அதனால் இளைக்க இளைக்க வேகமாக நடந்து வருகிறாள்.

பூஜைகள் ஆரம்பமாகி விட்டன. முன்பெல்லாம் தனிமையாக வந்து வணங்கும் பொழுது இல்லாத வெறுமை உள்ளத்தில் உணரப்படுகின்றது. பயித்தியம் இதயா எனக்கென்ன சொந்தக்காரியா? கண்டு கதைத்து ஏற்படுத்திக் கொண்ட சிநேகிதம். இதை வைத்துக் கொண்டு ஆராய்ச்சி வேறு செய்கிறேன். அம்பாளை கும்பிட வந்து விட்டு ஆரோ பெற்ற பெண்ணைப்பற்றி நினைக்கிறேன். நான் ஒரு அசடு. என் மனதைப் பற்றி மாரியம்மன் என்ன நினைப்பா? இப்படி மனதில் ஒரு மூலையில் ஒரு புறுபுறுப்பு. சேச்சே நான் அம்மாளை வணங்க மறந்து விட்டேனா? என்ன! தீமைகளைப் போக்க வைக்கும் தீனதயாபரி நம்பியவரைக் காக்கும் நாராணயன் சோதரி. மனதுக்கு மனமே ஆறுதல் சொல்ல உதயன் "தனந்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா மனந்தரும் தெய்வ வடிவுந் தரும் என்னும் அபிராமி அந்தாதியை மனதுக்குள் முணுமுணுத்துக் கொண்டு வலம் வந்து தரிசனம் கண்டு எல்லா வழமையான வணக்கங்களையும் முடித்துக் கொண்டான். ஆனாலும் எதிர் பார்த்த அமைதி எங்கோ ஒரு பக்கத்தில் குறைந்து தெரிகிறது. அது ஏன்? ஆராய்ச்சி தேவையில்லை. பழக்க தோஷம் தொடர்ந்து சில நாட்களாக அவளைச் சந்தித்துப் பேசிய பழக்கம் இன்று குறை கண்டு விட்டது. கூட்டத் தோடு சேர்ந்து செல்லக்கூட விருப்பமில்லாத ஒரு மனநிலை. எல்லாரும் போய் முடியட்டும். இப்படிச் சொல்லிக்கொண்டே வெளியே வந்து

**இதயச்சுவடுகள் பளிச்சிடும் டீன் ஏஜ் தொடர்**

துவிச்சக்கர வண்டியைத் தள்ளிக் கொண்டு நடந்தான். கோயில் தலத்தின் இப்படியான எண்ணமா? மனம் குற்றஞ் சாட்டுகிறது. அதற்கு நான் என்னதான் செய்யலாம். நானும் மனிதன் தானே. அதுதான் மயங்குகிறேனாக்கும். மீண்டும் அதே மனம். ஆறுதல் கூறுகிற. கோயில் வளவைத் தாண்டி வீதியால் வந்து சைக்கிளில் பாய்ந்து ஏறிக்கொண்டு சந்தி நோக்கி வரும் பொழுது எதிரே ஒரு சைக்கிள் தெரிகிறது. உதயனைக் கண்டதும் சைக்கிளில் வந்த சிறுவன் பக்கமாக இறங்கி நின்று விட்டான். தன்னைத் தான் அவன் சந்திக்க விரும்புகின்றான் என்பது உதயனுக்கு விளங்கிவிட்டது. சைக்கிளை வேகம் குறைத்துக் கொண்டு அவனைத் திரும்பிப் பார்க்க அவன் ஒரு கடிதத்தை நீட்டினான்.

"அக்கா குடுக்கச் சொன்னா" கொடுத்தவன் தாமதிக்கவில்லை. மீண்டும் சைக்கிளில் ஏறி வந்த வழியே திரும்பி விட்டான். இருட்டிய நேரம் கடிதத்தை வாசிக்கவே முடியாது என்பதுதான் உண்மை. ஆனாலும் அதைப் படித்துப் பார்த்து விடவேண்டுமென்று மனம் தன் பாட்டில் அடித்துக் கொண்டது.

# காதலேன் காதலா........?

## அத்தியாயம்2



திமிலை மகாலிங்கம்

"என்ன இதயா போயும் போயும் பன்னிரண்டரை மணிய பிக்ஸ் பண்ணி இருக்கிறியே"

"நீங்க என்ன எதிர்பார்ப்பீங்க எண்டு தெரியும். நான் இப்ப கோயிலுக்கு வரஏலாது"

"அடடே அப்படியம்மா"

"இன்னும் நாலு நாளைக்கு வர ஏலாது"

அத முதலிலே சொல்லி இருக்குலாமே"

அதெல்லாம் சொல்ல ஏலாது. நடப்பது நடக்கும் அதெப்புடி எனக்குத் தெரியும்"

"சில விஷயங்கள் அப்படித் தான் இதயா. விஞ்ஞானம் அது இதெண்டு என்னதான் செய்தாலும் சிலவிஷயங்களைக் கடவுள் தனக்குள்ளே தான் வச்சிருக்கார்"

"நம்ம சந்திப்புக்கூட அப்படித் தானே. நான் வாழச்சேனை பஸ்ஸில வரணும். ஊறணியில இறங்கக்குள்ள

**"உள்ளத்தை அள்ளும் உணர்ச்சிகரமான தொடர்கதை"**

கையில இருந்த பேர்சை சீட்ல விட்டிட்டு இறங்கணும்" நீங்க அத எடுத்து என்னிட்டத் தரணும்.

தரக்குள்ள கையும் கையும் படணும்"

"கண்ணும் கண்ணும் பேசணும்'

"பிறகு கடிதம் கடிதமா எழுதணும்"

"நான் இப்புடி வந்து சந்திக்கணும்"

இதெல்லாம் இறைவன் சித்தப்படிதான் நடக்குது"

ஒருவர் வசனம் முடிய அடுத்தவர் வசனத்தை ஆரம்பிக்க அருமையாக அந்த இரண்டு நிமிடமும் விடைபெற்றது. இருவரது நெஞ்சிலும் ஒரு திருப்தி அதற்கும் மேலாக வீட்டிலே யாருமில்லாதிருந்தது. இன்னும் திருப்தியாகப் போய்விட்டது. உதயன் மறுபடியும் தொடர்ந்தான்.

"அதுசரி இந்திரன் முகூர்த்தத்தை ஏன் தெரிவு செய்தே இதயா? இந்திரன் மூகூர்த்தம் காதலர்களுக்கு இது அமைதியான நேரம்"

"அப்ப நாம காதலர்களாகிட்டமா?"

"எனக்குத் தெரியாது"

"அதுதான் எனக்கும் தெரியாது. ஏதோ உன்னைப் பார்க்கிறதாலயும் பேசுறதாலயும் ஒரு சந்தோஷம் இருக்குது. இல்லாட்டி இந்த வெயில் நேரத்தில வீடு தேடி வருவனா?"

அம்மா விவசாயக் கடனுக்குப் போட்டிருக்கா. அதுக்காக இண்டைக்குப் பதினொரு மணிக்கே புறப்படுவா. வர எப்படியும் ரெண்டு மணி ஆகும்.

"அந்த நேரத்தில் இதயாக் குட்டி தெரிவு செய்து கோயிலடிக்குக் கடிதம் குடுத்து அனுப்பியிருக்கா"

"அதுதான் நீங்க வந்திருக்கீங்க சரியா"

"நீ சொல்லும் வரை எனக்குத் தெரியாது. என்னையே மறந்து இருந்திட்டன். இதயா இப்ப வீட்டில ஆரும் இல்லத்தானே" இளமையின் துடிப்பு அவனது உள்ளத்தை அறியாமல் உதடுகளே கேட்டுவிட்டன. ஆசைக்கு வெட்கமில்லையாம். இது ஒரு சாட்டு.

"ஏன் கேக்கிறீங்க? தம்பி பள்ளிக்கூடம். அம்மா வேங்க்"

"ஆச்சி"

"ஆச்சி கோச்சில போயிட்டா"

"அதென்னடா புதுகதை"

மன்னம்பிட்டிப் பிள்ளையார் கோவிலுக்குப் போறதா நேந்து வச்ச

"சரி சரி நமக்கும் சான்ஸ் வேணும்தானே" முகத்தில் விழுந்து உருண்ட கேசச் சுருளை ஒதுக்கி விட்டுக் கொண்டு நின்ற இதயாவை அவன் பார்த்தான். அவளை விழுங்கி விடுவது போல பார்த்தான்.

"இண்டைக்கும் நான் கோவிலுக்கு வரமாட்டேன். இருங்க கூள்றிங் கொண்டு வாறன்" கவனத்தைத் திருப்புவதற்காக இப்படிக் கூறியவள் உள்ளே நகர்ந்தாள்.

"நானும் வரட்டா"

"வேணாம். இது குசினி ஒன்லி போ லேடிஸ்"

"நானும் வந்தாக் கொஞ்சம் கூளா இருக்குமெண்டு பார்த்தன்"

"கூள் கூடினாலும் கூடாது அப்படியே இருங்க நான் வந்திட்டன்" உள்ளே இருந்து வந்த ஒலி உதயனை இருக்கையை விட்டு எழும்பவிடவில்லை. அறையை அலங்கரித்து வைத்திருக்கும் முறையை நோட்டம் விட்டவன் 'சங்கடப்படாமல் அப்படியே அவள் வரவை எதிர்பார்த்தான். கூள்றிங் வந்தது குடித்து முடிப்பதற்குள்

நீ குடிக்கல்லையா இதயா?

"நீங்க குடியுங்க" கண்கள் அவளை விழுங்க மிடறு குளிர்பானத்தை விழுங்கியது. அதற்கிடையில் சைக்கிள் மணி.

"கிணிங் கிணிங்"

"கிணிங் கிணிங்"

"அக்கா அக்கா" வெளியிலிருந்து ஒரு குரல் "இதயா ஆரது உன்ட தம்பி வந்திட்டானா?' உதயன் கேட்டான்.

"இல்ல அண்ணன் வந்திருக்

"அண்ணனா ஆரது"

பயப்படாதீங்க அண்ணன் எண்டர் காக்கா" பனம்பழம் ஒவ்வொரு நாளும் பைந்து எடுத்துப் போறவர் அரை வாசிப்பதிலை உதயனுக்குக் கூறி விட்டு.

விருந்தைச் சுவரில வைச்சிருக்கு எட்டுப் பனம்பழம் எடுங்க" என்று காக்காவுக்கு மீதிப் பதிலை சொல்லி முடித்தாள். வழக்கமாக வியாபாரத்துக்கு வருபவன் பெட்டி வியாபாரம் முடிந்ததும் வீட்டுக்கு அதாவது ஏறாவூருக்கு போகும்போது பனம்பழங்ளை எடுத்துக் கொண்டு போவான். மறுநாள் காலையில் வியாபாரத்துக்கு வரும்போது உரிய விலையைக் கொண்டு கொடுத்து விடுவான். ஒரு குடும்ப நண்பன் மாதிரி.

"அம்மாவைக் காணல்ல"

"அம்மா ரவுணுக்குப் போயிட்டா"

"சரி சரி நான் வாறன்" வியாபாரம் முடிந்தது. காக்கா போய் விட்டார். நேரம் பொன்னானது என்பது அவர்களது கொள்கை.

அப்படியானால் உதயன்.

இதயா அப்ப நான் வரட்டா"

"என்ன காக்கா வந்து குளப்பிப் போட்டானெண்டு பயப்படுறீங்களா?"

"இல்ல இதயா சரியில்ல தானே!

"இம் சரி நேரம் கிடைச்சா இந்தப் பக்கம் வாங்க"

அவன் கண்களை விட்டு மறையும் வரை இதயா மறைந்து நின்று பார்த்தபடி நின்றாள்.

தொடரும் காதல் தொடர்


## தினக்கதிர் வாசகர் வட்டத்திற்கான அழைப்பு

**தினக்கதிர் குடும்பம் தனது வாசகர்களுக்கான அமைப்பினை உருவாக்குவதற்கு முடிவு செய்துள்ளதென்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.**

தினக்கதிர் வாசகர்கள் தங்களுக்கிடையில் ஒரு தொடர்பாடலை ஏற்படுத்திக் கொள்வதற்கும், தினக்கதிரின் வளர்ச்சியில் பங்கெடுப்பதற்குமாகவே இந்த வாசகர் வட்டம் அமைக்கப்படுகிறது. இந்த வாசகர் வட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு ஆர்வலர்கள் அழைக்கப்படுகின்றீர்கள்.

முழுப்பெயர்:..............................

முகவரி:..............................

..............................

தொலைபேசி:..............................

எழுத்துத்துறை, இலக்கியம் போன்றவற்றில் ஆர்வமிருப்பின் அது பற்றிய குறிப்புக்களும் தினக்கதிரின் வளர்ச்சிக்கான உங்கள் ஆலோசனை குறிப்புகளும் வரவேற்கப்படுகின்றன.

அலுவலக உபயோகத்திற்கு வாசகர் எண்..................

தினக்கதிர் சந்தாதாரராயின் சந்தா எண் T...............

தினக்கதிர் வாசகர் வட்டம்
த.பெ.இல்: 06
05, வேதாரணியம் சதுக்கம்
மட்டக்களப்பு
T.P: 065- 23055

# கிழக்கில் புலிகளின் தளப்பிரதேசங்களை நோக்கிய சதபல இராணுவ நடவடிக்கை, வெற்றி பெற முடியாத நிலையில் படையினர்



குருசேத்திரத்திலிருந்து
சேரன்

வடக்கின் தரைபாதை திறப்பு விடயமும் யுத்தமும் ஒரு தொடர் கதையாகி விட்டது. காலக் கெடுகளின் எல்லைகளைக் கடந்து வன்னிச் சமர் தொடர் சமராக செல்லுகின்ற இன்றைய நிலையில் தென்னிலங்கையில் மக்க ளுக்கு அல்வா கொடுக்கும் ஒரு நடவடிக்கைதான் கிழக்கில் உள்ள விடுதலைப் புலிகளின் தளப்பிரதேசங்களின் மீதுமேற் கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளாகும். ஆயினும் இவ்ராணுவ நடவடிக்கைகளை முறியடித்து தளப்பிரதேசங்களை தொடர்ந்து தக்க வைக்கும் நிலையிலேயே கிழக்கில் புலிகள் உள்ளனர்.

ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் வட பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது கிழக்கு மாகாணத்தில் செங்கலடி - பதுளை வீதியில் சில இராணுவ முகாம்கள் அமைந்திருந்தன. இதைவிட ஒரு சில வயல் பிரதேசங்களிலும் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர். அடிக்கடி மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ .நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான ஒரு நிலையில் கிழக்கு மாகாணம் அரசின் கட்டுப்பாட்டில்தான் இருப்பதாக அன்றைய ஐ.தே.கட்சி ஆட்சியாளர்கள் கூறிக் கொண்டிருந்தனர். புலிகள் கிழக்கு மாகாணத்தை தற்காலிக தளப்பிரதேசமாக பாவித்துக் கொண்டு வயல் பிரதேசங்களில் நிலை கொண்ட இராணுவ அணிகள் மீதும் மற்றும் நகரப் பிரதேசங்களிலுள்ள இராணுவ நிலைகள் இராணுவ அணிகள் மீது பரவலான தாக்குதல்களை நடத்திய வண்ணமிருந்தனர். இத்தாக்கு தலுக்கு அரச படையினர் சிக்குண்டாலும். பெரிதாகக் காட்டிக் கொள்ள வில்லை. கிழக்கு மாகாணம் பூரண மானதொரு அரச கட்டடப்பாட்டில் இருப் பதாகவே பிரச்சாரம் செய்து வந்தனர். இதேவேளை புலிகளுக்கும் பெரியள விலான பாதிப்பை ஏற்படுத்த வில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த வேளை கிழக்கு மாகாண வயல் பிரதேசங்களில் உள்ள இராணுவ முகாம்கள் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது. இதனால் தொடர்ந்து நிலை கொள்ள முடியாத படையினர் அப்பிரதேசங்களை விட்டு வெளியெறினர். அத்தோடு வட பகுதியை புலிகளின் பிடியில் இருந்து மீட்பதற்கு படையினர் அதிகமாக தேவைப்பட்டதாலும் கிழக்கு மாகாண நகரம், கிராமப் புறங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இருந்த படை முகாம்கள் மூடப்பட்டது. சகல துருப்பினரும் வடபகுதிக்கே அனுப்பி வைக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தை புலிகளின் பிடியில் இருந்து மீட்டெடுத்ததால் கிழக்கு மாகாணப் பிரதேசத்தை மீட்பது இலகுவான காரியமாகவே அரசு நினைத்தது.

தற்போது வன்னிச் சமர் உக்கிரமான மரபுவழிச் சமராக உருப் பெற்று இருக்கின்ற நிலையில் பாதை திறப்பு விவகாரம் எட்டாக் கனியாகவே இருக்கின்றது. இக்காலட்டத்தில் இராணுவ தரப்பு சந்திக்கும் தோல்விகளை நிவர்த்திக்கவும் தென்னிலங்கை மக்களை திசை திருப்பவும் நடாத்தப்படும் கிழக்கு மாகாண இராணுவ நடவடிக்கைகள் குறிப்பிட்ட இலக்கை அடைய முடியாமல் இடை நடுவில் நிறுத்த வேண்டிய நிலையில் அரச தரப்பு உள்ளது.

கடந்த மாதம் கொக்கட்டிச் சோலை தான்தோன்றிஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்ற பின்பு இராணுவ நடவடிக்கை ஒன்று மேற் கொள்ளப்பட்டது. படையினர் கைப் பற்றும் பிரதேசத்தில் நிலை கொள்ளும் நோக்குடன் சென்றாலும் குறிப் பிட்ட இலக்கை அடைய முடியாத நிலையில் புலிகளின் தாக் குதலினால் திசை திரும்ப வேண்டி உள்ளனர். பின்னர் மட்டுப்படுத்தபட்ட வெற்றியுடன் திரும்பியதாகவும் அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் செய் திகள் வெளியிட்டனர். இந்நடவடிக்கை வெற்றி பெறாததைத் தொடர்ந்து கடந்த வாரம் மட்டக்களப்புக்கு மேற்கே இராணுவத்தினர் பாரியளவிலான இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற் கொண்டனர் "சதபல" எனப் பெயரிடப் பட்ட இவ் இராணுவ நடவடிக்கை கொக்கட்டிச்சோலை பிரதேசத்தை நோக்கி மும்முனைகளிலும் இருந்து முன்னேறியது. பாரியளவிலான படையினர் அதிரடிப்படையினர் ஆகியோர் முன்னேறிய நிலை கொள்ளும் நோக்குடன் கூடார வசதிகள் உணவுப் பொருட்கள் உட்பட அனைத்து வசதிகளுடனுமே சென்றனர். ஆனால் படையினர் வருகையை முன்கூட்டியே அறிந்திருந்த புலிகள் தாக்குதலுக்காக காத்திருந்தனர். படை நிலைகள் மீது ஆட்டிலறித் தாக்குதல் நடத்தினர். புலிகளின் தாக்குதலுக்கு பதில் தாக்குதலாக படையினரும் மோட்டார் தாக்குதல் நடத்தினர். எனினும் படையினர் நிலை கொண்டிருந்த தளங்களை மிக துல்லியமாக உற்று நோக்கி ஆட்டிலறித் தாக்குதல் நடத்தினர். இதனால் மேலும் முன்னேற முடியாமல் படையினர் "சதபல" நடவடிக்கையை முடித்துக் கொண்டு திரும்பினர். படையினர் தரப்பில் பலத்த உயிர் இழப்பு ஏற்பட்டது. பலர் காயமடைந்தனர்.

வடக்கில் தரைப் பாதையை திறக்க முடியாது தடுமாறும் இராணுவத்தினரால் இனி வரும் காலங்களில் கிழக்கு மாகாணத்தில் புலிகளின் பிடியில் உள்ள பகுதிகளை கூட மீட்பது கடினமானதொன்றாக தோன்றும் என்பதும் அவ்வாறு கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளைக் மேற்கொண்டால் கூட வட பகுதியைப் போன்று கிழக்கிலும் புலிகள் பலமான நேரடிச்சமர் முறையிலான தாக்குதலை நடத்துவார்கள் என்பதை அவர்களது தாக்குதல் முறைகளிலிருந்து அறிய முடிகிறது.

## நான் கதிரைக்கு பாரமாக இருக்கவில்லை மக்களின் சேவையே எனது குறிக்கோள்

### -செழியன் பேச்சு

நான் கதிரைக்கு பாரமாக இருக்கவில்லை மக்களின் சேவையே எனது குறிக்கோள் தற்போது நாட்டில் வேலையில்லாப்போராட்டம் சம்பளம் இல்லாப்பிரச்சனை, இனப்பிரச்சனை எத்தனை எத்தனையோ பிரச்சனைகள் எல்லாம் புற்றுநோயாக உருவெடுத்துள்ளது. இதற்கான காரணங்கள் அரசியல் ரீதியான பிரச்சனையே ஆகும். அரசியல் மக்களிடம் இருக்க வேண்டும். ஆனால் அரசியலைக் கொண்டு பிழைப்பு நடத்தக் கூடாது.

மேற்கண்டவாறு மட்/மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை சிற்றூழியர் சங்கத்தின் வருடாந்த பொதுகூட்டத்திற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய மட்/மாநகர சபைத் முதல்வர் திரு. செழியன் பேரின்பநாயகம் அவர்கள் தெரிவித்தார்.

மேற்படி சங்கத் தலைவர் திரு.எஸ் லோகநாதன் அவர் கள் உரையாற்றுகையில் ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்தில் சிற்றூழியர்கள் தனிப்பட்ட கோபத்தினால் இடமாற்றம் செய்யப்பட்டனர் இதனைக் கண்டித்து எமது அகில இலங்கை சிற்றூழியர் சங்கம் மிகச் சிரமப்பட்டு போராடி உண்ணாவிரதம் இருக்கும் அளவிற்கு வந்தது பின் உரியவர் களிடம் பேச்சுவார்தை நடத்தியபின் பிரதேச செயலாளரை இடமாற்றம் செய்தனர். இவ்வாறானநிலையில் எமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் போராடவும் தயங்ககூடாது. என வேண்டுகோள் விடுத்தார்.

பின்னர் சங்கத்தால் பின்வரும் கோரிக்கைகள் முன்வை க்கப்பட்டது.

1.வடக்கு கிழக்கு கமநல கேந்திர நிலையங்களில் கடமைபுரியும் காவலாளி,சிற்றூழியர்கள்அனைவருக்கும் உடனடியாக நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்.

2.தற்காலிக அமைய ஊழியர்கள் சுற்று நிருபம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

3சிற்றூழியர்களுக்கு பதவி உயர்வுத் திட்டம் அமைக்கப்படவேண்டும்.

4.12% இருந்த கடன் கொடுப்பனவு 25% ஆக ஆக்கப்பட வேண்டும்.

5.தரம் 3ஐச் சேர்ந்த சிற்றூழியர் களுக்கு சீருடை வழங்கப்படவேண்டும்.

எனும் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டது.இவ்கூட்டத்திற்கு மட்/மாவட்ட கமநலகேந்திர நிலைய சிற்றூழிய சங்கத் தலைவர் திரு. அ.கோதாசன் உட்பட பலர் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கைகளையும் முன் வைத்தனர்.

## நிதி ஒதுக்கீடு

சமூர்த்தி அதிகாரசபையினால் கிரான் குளத்தில் பொதுச்சந்தை அமைக்க 90 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ள பிரதேச செயாளர் ஊடாக கிரான்குளம் சமூர்த்தி செயலணியினருக்கு இவ் நிதி வழங்க பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்தை பூரணமாகச் செய்ய கிராம மக்களாலும் 30 ஆயிரம் ரூபாய் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

## சமூர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கு நிரந்தர நியமனம் வடக்கு கிழக்கு ஊழியர்கள் அதிருப்தி

(நமது நிருபர்)

சமூர்த்தி கொவி செவன ஊக்குவிப்பாளர்களான 13600பேருக்கு எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் இருந்து நிரந்தர நியமனம் வழங்கப்போவதாக சமூர்த்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணம் நீங்கலாக ஏனைய மாகாணங்களில் கடமை புரிவபர்களுக்கே இவ்நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது இதனால் வடக்கு கிழக்கில் கடமைபுரியும் சமூர்த்தி ஊக்குவிப்பாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

வடக்கு கிழக்கை பொறுத்தமட்டில் இன்னும் சமூர்த்தித்திட்டப் பூரணமாக அமுல்படுத்தப்படவில்லை வெறுமனே முதலாம் சுற்று,இரண்டாம் சுற்று என மாதம் 250 ரூபாவிற்க்கு நிவாரணம் பெறக்கூடிய சமூர்த்தி நிவாரண முத்திரைகளே வழங்கப்படுகின்றன.

இலங்கையில் வடக்கு கிழக்கில் உள்ள மக்களே யுத்தத்தின் தாக்கத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு வறுமைநிலைக்கு உள்ளாகி உள்ளனர் இவர்களுக்கே சமூர்த்தி நிவாரண உதவிகள் வழங்குவதில் முன்னுரிமை வழங்கவேண்டும். ஆனால் அரசுமாறாக வடக்கு கிழக்கை புறக்கணித்தே சமூர்த்தித்திட்டத்தை அமுல் படுத்திவருகிறது. இதன் அடிப்படையிலேயே சமூர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கான நிரந்தரநியமனத்திலும் புறக்கணிப்புசெய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் மீண்டும் சோதனைக் கெடுபிடிகள் அதிகரிப்பு தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பில் மீண்டும் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளது. அண்மையில் இரானுவ அதிகாரி ஒருவர் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி படு காயமடைந்த சம்பவம் மற்றும் வெடிகுண்டு நிரப்பப்பட்ட அம்புலன்ஸ் வண்டி ஒன்று தலை நகருக்குள் நுழைந்து விட்டதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவல் போன்றவற்றினால் பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரித்து காணப்படுகின்றன இதன் விளைவாக பல லொட்ஜிகள் சோதனையிடப்பட்டு பல நூற்றுக்க ணக்கான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்பட்டுள்னர். கைது செய்யப்பட்ட அனைவரும் கொழும்பில் நிறுவனங்களில் தொழில் புரிபவர்களும் மற்றும் வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்பைத் தேடிச் செல்லுவதற்கு கொழும்பிற்கு வந்தவர்களுமாவார்கள். கொழும்பில் ஏற்படும் குண்டுப்புரளி வெடி குண்டுத் தாக்குதல் போன்றவற்றால் அப்பாவி தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதும் சித்திரவதைப் படுவதும் ஒரு தொடர் கதையாகவே அமைந்து விட்டது.

## ♥இதயத்தில் இருந்து♥

தினக்கதிர் வெளியாகிய தில் இருந்து அதை மிக உன்னி ப்பாக கவனித்து வருகின்றேன் உயிர்ரோட்டமாய் உள்ளது. அத்துடன் கிழக்கிலங்கை செய்தி உட்பட இலங்கையின் பல பாகங்களிலும் உள்ளிட்ட விடயங்களையும் தன்னுள் அடக்கி சுவைப்பட தருகின்றது. ஒரு சிறு குறை எங்களின் அக்கரைப் பற்றுப் பிரதேசத்தில் இடம் பெறும் எத்தனையோ விடையங்களை ஏனைய பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்வது போல் தினக்கதிரும் செய்வது மிக மனவருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

அக்கரை மாணிக்கவாசகம்
அக்கரைப்பற்று

ஆசிரியருக்கு வணக்கம்

தினக்கதிரின் அபிமான வாசகி நான் கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற பல அசம்பாவிதங்கள் புதை குழியில் புதைத்து மூடப்பட்டுள்ளன. அவற்றை வெளிக் கொண்டு வரும் இன்னுமொரு பத்திரிகையான தினக்கதிர் வெளிவருவதில் மகிழ்ச்சி. வாரம் ஒரு கிராமம் படு சூப்பர் சிறு சிறு செய்திகள் நிறைவைத் தருகின்றன. என்றும் உனது தியாக பணிகளும் பதிலடிகளும் முடங்கி விடக் கூடாது கதிரின் சேவை சிறப்புடன் வளர என் குறைவில்லாத வாழ்துக்.

லோகிதவாணி
இருதயபுரம் மேற்கு,
மட்டக்களப்பு

## தினக்கதிரே நீ என்றென்றும் வாழ்க

தினந்தோறும்
ஊரெல்லாம் பவனி வரும்
தினக்கதிரே
வாரம் தோறும்
புதிய புதிய செய்திகளை அறிமுகம்
செய்யும்
தினக்கதிரே
உன் சேவைகள் இன்னும் மேலும்
மேலும் தொடரட்டும்
தினந்தோறும்
காலையில் மலரும் பூவைப் போல
மலர வேண்டும் என
என்றென்றும் உன்னை என் மனசார
வாழ்த்துகிறேன்.

எஸ்.பி.லக்குனா
வட்டக்கச்சி

# புதிய அலைகள்

வாசுகி குணரெத்தினம்

# மரபுக்குள் புதையுண்ட மங்கையர் உணர்வுகள்



பெண் விடுதலை பற்றிய கருத்துக்களும், செயற்பாடுகளும் முனைப்புப் பெற்றிருக்கின்ற இக்கால கட்டத்தில் சில மறைக்க முடியாத உண்மைகள் இருப்பதையும் நாம் மறுத்து விட முடியாது இருக்கின்றோம்.

ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம். ஆணுக்குரிய அனைத்து உரிமைகளும் பெண்ணுக்கு வழங்கப்பட வேண்டும். தொழில் ரீதியாகப் பெண் பாலினருக்கு வேறுபாடு காட்டப்படுதல் கூடாது. அனைத்து அடக்குமுறைகளிலிருந்தும் பெண்ணுக்கு விடுதலை வேண்டும். வெறும் பாலியல் கருவியாகப் பெண்ணைக் கருதுவதில் மாற்றம் ஏற்பட வேண்டும் என பல கருத்துக் கோர்வைகள் முன்வைக்கப்பட்டு அவற்றைச் செயற்படுத்துவதற்காகப் பல பெண்ணிலை அமைப்புக்கள் தோன்றி செயற்பட்டு வருகின்றன. இந்த அமைப்புக்களின் செயற்பாடுகளில் வெற்றிக்குரிய படிநிலை படிப்படியாக உருவாகி வருவதும் கண்கூடு.

இருப்பினும் இவ்வாறான அமைப்புக்களின் செயற்பாடுகளினால் பெண்களின் மேலோட்டமான பிரச்சினைகளுக்கு மாத்திரமே தீர்வு காண முடியும் என்று கூறலாம். உறவியல் ரீதியாக நோக்கின் இவ்வாறான புதிய சிந்தனைகள் பெண்கள் மனதில் ஒரு மாற்றத்தை விரைவாக ஏற்படுத்தியுள்ளது என்றோ, ஏற்படுத்தும் என்றோ கூறமுடியாது. காரணம் யாதெனில் நாம் பிறந்தது முதல் எம்மைச் சூழவுள்ள பல நிழ்வுகளால், உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறோம். அல்லது எம்மையும் அறியாமலே எமது சமூகத்தினுடைய பல கருத்துக்களை நமது மனம் உள்வாங்கிப் பதிவு செய்து வைத்துள்ளது. இந்நிலையிலிருந்து விடுபடுவது தொடர்பாகப் பெண்களின் நிலை என்னவென்பதைச் சற்று நோக்குவோம்.

குறிப்பாக எமது தமிழ்ச் சமூகத்தை எடுத்துக் கொண்டால், எமது பண்பாடு கலாசாரம் என்பன அழியாத புனிதமான ஒன்றாகக் கொள்ளப்பட்டு அது சிதைந்து விடாமல் பாதுகாக்கப்பட்டும் வருகின்றது நமது பண்பாட்டில் சில கழிக்கப்பட வேண்டிய மூட நம்பிக்கைகள் இருந்து கொண்டு தமது பெருமையை நிலை நாட்டிக் கொண்டிருந்தாலும், அவற்றை விடுத்து தமிழரின் பண்பு தனித்துவமுடையது எனப் பலரும் போற்றிப் புகழ்ந்து கூறுமளவுக்கு நிலைத்துள்ளது எனக் கூறலாம்.

இந்தக் கலாசாரப் பண்பாட்டுக்கு ஊடாகத் தோன்றி வளர்ந்து வரும் ஒரு பெண் உளவியல் ரீதியாக எவ்வாறு தாக்கப்பட்டுள்ளாள் அல்லது இந்த மரபுக்குள் எவ்வாறு கட்டுப்பட்டுள்ளாள் என்பதை நோக்கும் போது இங்கு பெண் விடுதலை பற்றிய விழிப்புணர்வு எந்த வகையில் தனது செல்வாக்கைச் செலுத்தும் என்பது ஒரு கேள்விக் குறியாகின்றது.

ஒரு தமிழ்க் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து வருகின்ற பெண் பிள்ளை சிறு வயதிலிருந்தே ஆண் பிள்ளைகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றது. பெற்றோர் தமது பெண் குழந்தை ஆண் பிள்ளையுடன் சேர்ந்து விளையாடும் போது "ஆண்பிள்ளையளோடு உனக்கென்ன விளையாட்டு இங்கால வா" "நீ என்ன ஆம்பிளையா அவனுகளோட விளையாட?" எனப் பலவாறு கூறி அப்பெண்ணின் மனதில் ஆண் தன்னிலிருந்து வேறுபட்டவன் எனும் உணர்வை ஏற்படுத்தி விடுகின்றனர்.

மேலும் தாய் எவ்வாறு தந்தைக்குப் பணி செய்கின்றாளோ அவ்வாறே தனது மகளையும் தந்தைக்கும், ஆண் சகோதரர்களுக்கும் பணி செய்யுமாறு பணிக்கிறாள். இந்நிலையில் ஆண் ஏதோ தன்னிலிருந்து வித்தியாசமானவன் எனும் எண்ணம் அந்தப் பெண் மனதில் பதிய வைக்கப்படுகின்றது.

பெண் பருவ வயதை அடைகின்ற போது பெற்றோரால் பல வழிகளில் கட்டுப்படுத்தப்படுகிறாள். இந்தக் காலகட்டத்தில் ஆணிடமிருந்து முற்றாக விலக்கப்பட்டவளாக அவள் காணப்படுகின்றாள்.

பெண்ணின் கல்வி நிலையைப் பொறுத்த வரையிலும் பெற்றோர் தமது பெண்ணை தனியான பெண்கள் பாடசாலையில் சேர்த்துப் பயில வைப்பதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் வளர்கின்ற பெண் ஆணிலிருந்து முற்றாகவே அந்நியப்படுத்தப்படுகின்றாள். அத்துடன் ஆண் பற்றிய வித்தியாசமான மன உணர்வுடன் வளர்கின்றாள்.

நமது சமூகத்தைப் பொறுத்த வரை பெண் பிள்ளைகள் படித்து முடித்தவுடன் திருமணத்துக்கு தயார் படுத்தப்படுகின்ற ஒரு நிலை உள்ளது. இந்தத் திருமண பந்தத்திலிருந்து விடுபட முடியாத நிலையும் அவளுக்கு உள்ளது. திருமண வாழ்வு அமையாதவிடத்து ஒரு பெண்ணின் மன நிலையில் சில உளவியல் தாக்கங்கள் ஏற்படுவது என்பது ஒரு புறமாக இருக்க, நமது சமூகத்தைப் பொறுத்தவரை திருமணம் ஒன்றே பெண்ணின் இறுதி இலட்சியம் என்ற நோக்கோடு அவள் வளர்க்கப்படுகின்றாள். இங்கு பெண் படிப்பு அதன் பின் திருமணம், குடும்பம், கணவன், குழந்தைகள் கவனிப்பு என்ற வட்டத்தினுள்ளே அடக்கப்பட்டவளாகிறாள். எத்தனை பெண்ணிலை இயக்கங்கள், ஸ்தாபனங்கள் தோன்றி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முயன்றாலும் மேற்கூறிய மரபினை மாற்றுவது என்பது இலகுவான விடயமல்ல.

இந்தத் திருமண பந்தத்தில் இணையப் போகின்ற பெண் தான் வாழ்ந்த சூழ்நிலைக்கும், தனது பண்பாடு கலாசார மரபுக்கும் இசைந்த வகையிலேயே தனது வாழ்க்கையைக் கொண்டு செலுத்த வேண்டிய நிலை உள்ளது. பெண் விடுதலை அமைப்புக்களில் இணைந்து ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்ற பெண்களிடம் கூடத் தமது மரபுக்குரிய வகையில் திருமண பந்தத்துள் நுழைய வேண்டும் என்ற எண்ணமே உள்ளது.

இவ்வாறாக திருமண பந்தத்துள் நுழையும் ஒரு பெண் கணவனுக்குக் கட்டுப்பட்டவளாகவே கருதப்படுகின்றாள். திருமணமான பின் அவள் பிற ஆடவருடன் இதுவரையும் தனக்கு இருந்து வந்த தொடர்புகளைக் குறைத்துக் கொள்வாள். ஏனெனில் அவ்வாறு பிற ஆடவருடன் அதிகம் பழகுவது கணவனுக்குப் பிடிக்காது என்பதுடன் சமூகம் தன்னைப் பிழையாக நோக்கும் என்ற எண்ணமுமாகும். திருமணம் செய்த பெண் என்பதனை அடையாளப்படுத்துவதற்கு நமது சமூகம் என்னவென்ன வழிகளைப் பண்ணிக் கொடுத்துள்ளதோ அவற்றைப் பின்பற்ற வேண்டும். இயன்ற வரையில் கணவனின் மனம் நோகாமல் நடக்க வேண்டும். குடும்பத்தில் ஏதாவது பிரச்சினை ஏற்படுமாக இருந்தால் அதற்கு பெண்தான் பொறுப்பு. "நீ பெண் அல்லவா கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போகக் கூடாதா?" இதுதான் எமது சமூகம் இன்று வரையும் பெண் இனத்துக்குப் போட்டு வைத்துள்ள விலங்காகும். எவ்வளவுதான் படித்த பெண்ணாக இருந்தாலும், என்னதான் பெண் விடுதலை பற்றிய உணர்வுகளைக் கொண்டவளாக அவள் காணப்பட்டாலும் இங்கு மேற்கூறிய வாசகம் அவள் தொடர்பாகக் கூறப்படுவதை இன்று வரையும் எந்தப் பெண்ணுமே மறுதலிக்கத் துணியவுமில்லை. அதிலிருந்து விடுபடவும் அவர்கள் முயன்றதுமில்லை. இதற்கு உளவியல் ரீதியில் சமூகத்தால் அவர்கள் அடைந்துள்ள பாதிப்பு அல்லது தாக்கமே காரணம் என்று கூறலாம்.

இதற்கு விதிவிலக்காகப் பல பெண்கள் இருக்கலாம். அவர்களைப் புரிந்து கொண்டு வாழ்கின்ற கணவர்களும் இருக்கலாம். இருப்பினும் இந்த வீதம் குறைவானதாகவே இருக்கும். கூடுதலான பெண்களாக இருந்தாலும் சரி, சாதாரணமாக குடும்ப வாழ்க்கையை மேற்கொள்கின்ற பெண்களாக இருந்தாலும் சரி திருமணம் என்றால் தான் ஆணுக்கு கட்டப்பட்டவள் அல்லது அவனது மனநிலை அறிந்து செயற்பட வேண்டிய பொறுப்புள்ளவள். அவனுக்குரிய வகையில் தனது வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய கடமைப்பாடு உடையவள். அவனின் மனநிலை கோணாமல் நடக்க வேண்டியவள். தனது விருப்புக்களைச் சிறிதளவாவது விட்டுக் கொடுக்கத் தயாராய் இருப்பவள் என்ற கருத்து நிலையே இன்று வரை நிலைத்துள்ளது. இந்தக் கருத்து நிலையில் மாற்றங்களை ஏற்படுத்த முடியுமா? அதாவது நமது முழுச் சமூகத்தையும் உள்ளிட்ட வகையில் இக்கருத்து நிலையில் மாற்றங்களை இன்று இயங்கி வருகின்ற பெண்ணிலை அமைப்புக்களால் ஏற்படுத்த முடியுமா என்பதே வினாவாகும்.

இவ்வாறாக உளவியல் ரீதியாக ஒரு சமூகத்தின் மரபுக்கும், வார்த்தைகளுக்கும் தங்களை அறியாமலே இயல்பாகவே கட்டப்பட்டுப் போய் இருக்கின்ற நமது பெண்களின் மனநிலையில் அல்லது நமது சமூகத்தின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இன்று செயற்பட்டு வருகின்ற பெண்ணிலை அமைப்புக்கள் என்ன வழிவகைகளைக் கையாளலாம் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

## பிறந்தநாள் வாழ்த்து



பெரியபோரதீவைச் சேர்ந்த திரு. திருமதி தவராணி - குமரன் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி செல்வி கௌதமி தன் நான்காவது பிறந்த தினத்தை பிறந்தகத்தில் 22.08.1998ம் திகதி வெகு விமர்சையாக கொண்டாடினார். அப்பா, அம்மா, அம்மம்மா, மாமன்மார், சகோதரர்கள், பெரியப்பா, பெரியம்மா, மாமிமார், மச்சான், மச்சாள்மார் எல்லாம் வல்ல இறையருளால் இன்றும் போல் என்றும் வாழ்க என வாழ்த்தினார்கள்.

## வீரமகள் நீதானா.....?

பதுங்கு குழி வெட்டி - அதனுள்
பகலெல்லாம் ஒழிந்திருந்து
ஒதுங்கி புறம் இருந்து - விம்மி
ஓரமாய் அழுதவள் நீ

ஹெலி வரும் சத்தத்திலே - தினம்
ஷெல்லடி முழக்கத்திலே
கெலி கொண்டு வாழுவதாய் -
அவலச்
செய்தி அனுப்பி வைத்தாய்

காக்கி உடை கண்டால் - ஆவி
கலங்க விழி பிதுங்கி
போக்கிடம் இல்லையென்று - அன்று
புலம்பிப் புரண்டவள் நீ

தாவி மதில் பாய்ந்து - வரும்
தீயரை வீழ்த்துவதற்காய்
கூவித் துவக்கேந்தி - இன்று
குறி பார்த்துச் சுடுகிறாய்

பெண் அடிமை என்றே - கூறும்
பித்தரின் செய்கை தன்னை
மண்ணில் உடைக்க வந்த - அந்த
வீரமகள் நீதானா......

கேணிப்பித்தன்

சகலவிதமான கட்டிடப் பொருட்கள் பெயிண்ட் வகைகள் பைப் வகைகள் மின்சார உபகரணங்களை நீங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள எந்த வேலையிலும் சேவை செய்ய காத்திருப்பவர்கள்.

டிஸ்னி இரும்புக் கடை

இல - 337, திருமலை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 - 23323

தினக்கதிரில் விரைவில் ஆரம்பமாகிறது

மண மலர்கள்

உங்கள் இல்லற வாழ்வு சிறக்க நீங்கள் மணமகனை அல்லது மணமகளை தேடிக் கொண்டிருக்கிறீர்களா......?

உங்களுக்கு இலவசமாக சேவை செய்ய தினக்கதிர் தயாராகிறது
விரைவில் ஆரம்பமாக இருக்கிறது
மணமலர்கள் சேவை
விபரங்கள் அடுத்த இதழில்

## ப்ரீதா விஜயகுமார்



கோடம்பாக்க மாயைகளில் ஒன்று...... நம்பர் ஒன் நடிகை என்கிற அங்கீகாரம்! அதை அடைவதற்கு காலத் காலமாக நடந்து வரும் போட்டியில் செந்தமிழ்நாட்டு தமிழச்சிகள் வெற்றி பெற்றதாக நினைவில்

கேரள குமரிகளும், ஆந்திர அழகிகளும், மும்பாய் வரவுகளும் கைப்பற்றிய நம்பர் ஒன் நடிகை அரியணையை முதன் முறையாக ஒரு தமிழ் நடிகை கைப்பற்றும் அறிகுறிகள் தென்படுகின்றன். அனேகமாக அடுத்த ஆண்டு அவருக்கு கிரீடம் சூட்டப்பட்டிருக்கும்.

யார் பற்றிய ஆருடம் இது?

ப்ரீதா விஜயகுமார்!

'சந்திப்போமா' படத்தின் மூலம் படத்துறைக்கு வந்திருக்கும் இவர், இப்போது முன்னணி கதாநாயகி! முதல் படம் வெள்ளித்திரையில் விரியும் முன்பே ஏராளம் படங்கள் இவர் வசம்!

விஜயகாந்துடன் - தர்மா, சத்யராஜுடன் - பொண்ணு வீட்டுக்காரன், பார்த்திபனுடன் - காக்கைச் சிறகினிலே, அர்ஜுனுடன் - ஜெயசூர்யா, பாண்டியராஜனுடன் இன்று முதல் ஹேப்பி, லிவிங்ஸ்டனும் - லவ் பண்ணுங்க ஸார், மட்டுமல்ல, மேலும் பல புதிய ஒப்பந்தங்கள் ப்ரீதாவை வட்டமிட்டு வருகின்றன. ஆச்சர்யம் + அதிசயம் இது!

முதல் படம் வரும் முன்பே வாய்ப்புகள் குவிந்தது எப்படிங்க?

''கடவுளோட ஆசிர்வாதம் தாங்க. அப்புறம் அப்பா, அம்மாவோட ஆசிர்வாதம்'' என்று பக்தி வுமனாக பதில் சொல்கிறார் ப்ரீதா.

தொடர்ந்து பேசியது அவரே...

''சந்திப்போமா படத்தின் ஸ்டில்ஸ் எல்லாப் பத்திரிகைகள்லேயும் வந்தது. அதைப் பார்த்துட்டுத்தான் நிறைய பேர் அப்ரோச் பண்ணினாங்க. அப்புறம் நான் நடிச்ச தெலுங்குப் படம் 'ருக்மணி'யோட டிரெய்வரை ஜெமினி டி.வி.யில் பார்த்துட்டும் சில பேர் என்னை புக் பண்ணினாங்க 'தர்மா'வுல நடிச்சப்ப விஜயகாந்த் ஸார் கூட இப்படித்தான் சொன்னார். எல்லாத்துக்கும் மேல அதிர்ஷ்டம்னும் சொல்லணும்.''

என்கிற ப்ரீதா விஜயகுமார் நடிகையாக அரிதாரம் பூசியது 'ருக்மணி' என்கிற தெலுங்குப் படத்துக்காக. 'காதல் சங்கமம்' என்ற பெயரில் விரைவில் தமிழில் டப் செய்யப்படவிருக்கும் இந்தப் படம் தெலுங்கு தேசத்தில் மெகா ஹிட்!

தவிர சிறந்த நடிகைக்கான ஆந்திர அரசின் 'நந்தி' விருதையும் ப்ரீதாவுக்கு அறுவடை செய்து கொடுத்தது..... வாழ்த்துக்கள்!

மஞ்சுளா - விஜயகுமாரின் மகள் என்கிற ஒரு தகுதி போதும் - தமிழ்ப் படங்கள் தானாகத் தேடி வர.

அப்புறம் ஏஊன் ஆந்திராவில் அறிமுகமானார் இவர்?

''ஸ்பெஷல் ரீசன் எதுவுமில்லை. வனிதா நடிச்சுக்கிட்டிருந் தப்பவே நிறைய தமிழ்ப்பட ஆ்.பர்ஸ் வந்தன. அப்ப நான் படிச்சுக்கிட்டிருந்தேன். ரொம்ப சின்னப் பொண்ணாவும் இருந்தேன். அதனால அம்மா வேணாம்னு சொல்லிட்டாங்க'' என்ற ப்ரீதா, 'ருக்மணி'யில் நடிக்க நேர்ந்த சூழ்நிலையை விவரிக்கிறார்.

''டைரக்டர் ரவிராஜா பினிஷெட்டியோட ப்ரீவியஸ் படத்துல எங்கம்மா ஆக்ட் பண்ணினாங்க. அப்ப அவங்க கூட நானும் ஷூட்டிங் போனேன். என்னைப் பார்த்ததும் ரவிராஜா ஸார் ஆ்.பர் பண்ணினார். நல்ல சப்ஜெக்ட் இருக்கு. ப்ரீதாவுக்கு ஆப்ட்டா இருக்கும்னு அதைச் சொன்னார். அந்த சப்ஜெக்ட் எனக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சு. அதனால நானே எங்கம்மாகிட்ட நடிக்கிறேன்ம்மான்னு சொன்னேன்.''

என்று சொல்லும் ப்ரீதாவுக்கு 'ருக்மணி'யில் நடிக்கும் முன்பு வரை தெலுங்கு மாட்லாடத் தெரியாதாம். இப்போது ஓரளவு!

ஓ.கே! ருக்மணி, வெற்றிப் படம், ப்ரீதாவுக்கு நந்தி விருதும் கிடைத்தது. பிறகு ஏன் தொடர்ந்து தெலுகில் நடிக்கவில்லை?

''ருக்மணிக்கப்புறம் எக்கச்சக்கமான தெலுங்குப் படங்கள் வந்தன. அதற்கு முன்பே தமிழில் நிறைய படங்கள் கமிட்டாகிவிட்டன. அதனால் தான் தெலுங்கில் நடிக்கவில்லை. நல்ல கேரக்டர்ஸ் இருந்தால் அவ்வப்போர் நடிப்பேன்''.

என்கிற ப்ரீதா, இப்போது 'ப்ரஸ்னா' என்ற தெலுங்குப் படத்தில் நடித்து வருகிறாராம். உப தகவல் ஒன்று. இப்படத்தின் நாயகன் ஆந்திர வி.ஐ.பி. சிவபார்வதியின் மகன் கோடீஸ்வர பிரசாத்.

ப்ரீதா தமிழில் அறிமுகமாகிய 'சந்திப்போமா' படத்தில் இவருக்கு முன் ஒப்பந்தம் செய்யப்பட்டவர் சிம்ரன். அவரை நீக்கிய பிறகு ப்ரீதாவுக்கு அடித்தது அதிஷ்டம்.

நம் கேள்வி: முதல் படத்திலேயே வேறொரு நடிகையின் வாய்ப்பைத் தட்டிப் பறித்தது ஏனம்மா?

''நான் கமிட்டாகறதுக்கு முன் அது பற்றி எனக்குத் தெரியாது. அப்புறம்தான் இந்த விஷயமே தெரியும். அவங்க என்னை அப்ரோச் பண்ணினப்ப, கதை கேட்டேன். ரொம்ப நல்லா இருந்தது. என் கேரக்டரும் நல்லா இருந்தது. அதனாலதான் ஒத்துக்கிட்டேன்.''

என்ற ப்ரீதா, சிம்ரனின் வாய்ப்பை நான் பறிக்கவில்லை என்றும் சொல்கிறார். அதற்கு அவர் சொன்ன காரணம், ''சிம்ரனை நீக்கிவிட்டு என்னை கமிட் பண்ணலை. அவங்களாகவே விலகின பிறகுதான் நான் நடிக்கிறேன். ஸோ... பிரச்சினை எதுமில்லை.''

விஜயகுமார் வீட்டு வாரிசுகளில் ப்ரீதா தனி ரகம். இரண்டு விஷயங்களில்.

ஒன்று: கலகலப்பாக படபடவென பேசுகிறார். அம்மாவின் டப்பிங் வாய்ஸ் இல்லாமல்.

இரண்டு: குண்டாக இல்லாமல் உடம்பை சீராக வைத்திருக்கிறார். அதற்கு ப்ரீதாவின் பதில் இதோ:

அதிகமா பேசமாட்டேன். பெரும்பாலும் அமைதியாகத்தான் இருப்பேன். சினிமாவுக்கு வந்தப்புறம் என் சுபாவமே மாறிப்போச்சு. என் மாற்றம் எனக்கே ஆச்சர்யமா இருக்கு.''

தொடர்ந்து பேசுகிறார்:

''சின்ன வயசிலேர்ந்து என் உடல்வாகு இப்படித்தான். முன்ன இதைவிட ஒல்லியா இருந்தேன். காரணம் அதிகமா நான் சாப்பிட மாட்டேன். தினமும் எக்ஸர்ஸைஸ் வேற பண்றேன். என்றவர் நடிக்க வந்த பிறகு உணவுக் கட்டுப்பாட்டை தினமும் தீவிரமாக கடைப்பிடிப்பதாகவும் சொல்கிறார்.

ப்ரீதாவின் முதல் படம் வெளிவரும் முன்பே சக நடிகைகளின் வயிற்றில் பயப்பந்தை உருள வைத்திருக்கிறார். காரணம் கவர்ச்சி விஷயத்தில் இவர் பின்பற்றும் தாராளக் கொள்கை!

ஆக.... முத்தக்காட்சி, டு பீஸ் உடை விஷயங்களிலும் ப்ரீதாவின் பாலிஸி டேக் இட் ஈஸி பாலிஸிதானா? யோசிக்காமல் பதில் வருகிறது ப்ரீதாவிடமிருந்து.

''கதைக்கு அவசியமா இருந்தால் முத்தக்காட்சியில் நடிப்பதில் தவறு இல்லை. அதே போல்தான் டு பீஸ்யமா இருந்தால் மட்டும் தான் செய்வேன். எல்லாப் படங்கள்லேயும் இதை செய்ய முடியாது. கதைக்கு ரொம்ப அவசியமா இருந்தால் மட்டு தான் செய்வேன். 'சந்திப்போமா' படத்தில் முத்தக்காட்சியில் நடிச்சிருக்கேன். ஸ்விம் சூட் போட்டும் நடிச்சிருக்கேன். அது எந்தளவுக்கு தேவைன்னு படம் பார்த்தால் உங்களுக்கே தெரியும். நடிப்புக்காக அதை போட்டாலும் ஒரு லிமிட் வச்சிருக்கேன். எது போட்டாலும் அழகா இருக்கணும், அசிங்கமா இருக்கக் கூடாது.''

## சங்கமம்

நடராஜன் வழங்கும் பிரமிட் பிலிம்ஸ் இண்டர் நேஷனல் தயாரிப்பில் 'லவ் பேர்ட்ஸ்' ''எனக்கொரு மகன் பிறப்பான்'' ''பிஸ்தா'', ''எட்டுப்பட்டி ராசா'', ''பொன்மனம்'' போன்ற பல படங்களை வி.நடராஜன் தயாரித்துள்ளார். இப்பொழுது சிவாஜி, முரளி நடிக்க கஸ்தூரிராஜா டைரக்ஷனில் ''என் ஆசை ராசாவே'', அர்ஜுன் - மீனா நடிக்க வஸந்த் டைரக்டர் செய்யும் ''ரிதம்'' படங்கள் வேகமாக வளர்ந்து வருகிறது. இதில், ''என் ஆச ராசாவே'' ஜூலை மாத இறுதியிலும், தீபாவளி வெளியீடாக ''ரிதம்'' படமும் வெளி வருகிறது. இதை அடுத்து ''சங்கமம்'' என்ற புதிய படத்தையும் தயாரிக்கிறார்.

இதில் ரகுமான் கதாநாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக விந்தியா என்ற புதுமுகம் அறிமுகமாகிறார். இவர்களுடன் மணிவண்ணன், விஜயகமார், ராதாரவி, வடிவேல், சார்லி, டெல்லிகணேஷ், ஸ்ரீவித்யா மற்றும் பலர் நடிக்கிறார்கள். இப்படத்தை திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்பவர் சுரேஷ்கிருஷ்ணா. இவர் ''சத்யா'', ''பாட்சா'', ''வீரா'' போன்ற பல மாபெரும் வெற்றிப் படங் களை டைரக்ட் செய்தவர். பூபதிராஜா இப்படத்திற்கு கதை எழுதியுள்ளார். இவர், ''பாசமலர்'', பாவமன்னிப்பு'' போன்ற அழியா காவியங்களை கதையாக அமைத்த பாலமுருகனின் மகன். ஏ.ஆர்.ரகுமான் இசை அமைக்கிறார். இரண்டு பாடல்களும் ஒலிப்பதிவு ஆகி விட்டது.

வசனம்: ஈ.ராமதாஸ், ஒளிப்பதிவு: சரவணன், ஆர்ட்: கிருஷ்ணமூர்த்தி, தயாரிப்பு மேற்பார்வை: என். ராமதுரை.


இதன் பூஜையை, சென்னை நகர மேயர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார். வாஹினி ஸ்டுடியோவில் பூஜையுடன் படப்பிடிப்பும் ஆரம்பமானது. ரகுமான், விந்தியா கலந்து கொள்ளும் காட்சிகள் பிரமாண்டமான அரங்குகளில் படமாக்கப்படுகின்றன. ஏற்கனவே இரண்டு பாடல்கள் ஒலிப்பதிவாகி விட்டன. தொடர்ந்து படப்பிடிப்பு நடைபெற்று கிறிஸ்துமஸ் தினத்தன்று படம் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

## ராம்கி - நிரோஷா திருமணம்

ராம்கி - நிரோஷா காதல் திருமணம் விவகாரங்கள் இதுவரை வெறும் 'கிசு கிசு'க்களாகவே இருந்து வந்தன! உண்மையை ஒப்புக் கொண்டு விட்டார்.

''நானும் நிரோஷாவும் காதலிப்பது நிஜம்தான்! இன்னும் திருமணமாகவில்லை. விரைவில் எங்கள் பெற்றோரின் முழுச் சம்மதத்துடன் திருமணம் புரிந்து கொள்வோம்!'' என்று ராம்கி பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்! ஆனால் திருமணம் உடனடியாக இல்லையாம்!

## சினி நியூஸ்



## சினிமா துளிக





வெள்ளித்திரை

# பூந்தோட்டம்


நாசரின் இரண்டாவது மனைவியான அம்பிகாவின் மகள் சுந்தரி (தேவயானி) 'பூந்தோட்டம்' என்ற பங்களாவில் தாத்தா - பாட்டி - தங்கை - தம்பியுடன் வசித்து வருகிறார்.அதே பூந்தோட்டம் பங்களா மீது நாசரின் முதல் மனைவியான வடிவுக்கரசியின் வாரிசுகளும் உரிமை கொண்டாட, இரு மனைவியரின் வாரிசுகளுக்குமிடையில் பிரச்சினை வெடிக்கின்றன. இந்நிலையில் அனாதையான மூர்த்தி (முரளி) பூந்தோட்டம் வீட்டில் குடியேறுகிறார். அடாவடிப் பேர்வழியான மூர்த்தியால் சுந்தரிக்கு ஏராளமான தொல்லைகள் ஏற்பட்டாலும், கடைசியில் மூர்த்தி 'பூந்தோட்ட'க் காவல்காரனாக மாறுவதோடு, சுந்திரியின் மனதிலும் இடம் பிடித்து விடுகிறார்.

வழக்கமான காதல் கதைகளிலிருந்து மாறுபட்டு ஒரு குடும்பப் பிரச்சினையை பின்னணியாக வைத்து அதில் மென்மையான காதலையும் இணைத்து தரமான ஒரு குடும்பச் சித்திரமாக உருவாக்கப்பட்டுள்ள இந்த 'பூந்தோட்ட'த்தை உருவாக்கியுள்ள (கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன்) மு.களஞ்சியம் பாராட்டுக்குரியவர்.

அனாதையான மூர்த்தி கதாபாத்திரத்தை நிறைவு செய்திருக்கிறார் முரளி. தேவயானியின் வீட்டை ரவுடிகளிடமிருந்து மீட்க அவர் எதிராளிகளுடன் போராடுவதும், தேவயானியின் தங்கை சுமதி (விஜயலட்சுமி) கர்ப்பிணியாக இருப்பதையறிந்து அவளது காதலனை தேடிக் கண்டுபிடித்து அவர்களை இணைத்து வைக்கப் பாடுபடுவதும், தன் காதலை சுந்தரியிடம் தெரிவிக்க தைரியமில்லாமல் அல்லல் படுவதும் என்று படம் பூராவும் முரளி உணர்ச்சிகளை கொட்டி நடித்துள்ளார்.

துணிச்சல் மிக்க இளம்பெண் சுந்தரியாக தேவயானி அந்தக் கதாபாத்திரத்தில் வாழ்ந்தே காட்டியிருக்கிறார்.

மூர்த்தியின் நண்பர்களாக வரும் மணிவண்ணன், வடிவேலுவின் காமெடிக் காட்சிகள் ரசிக்க முடிகிறதென்றாலும், வடிவேலுவின் கதாபாத்திரத்தை ஜீரணிக்க முடியவில்லை. அது போலவே பூந்தோட்டம் வீட்டை இன்னொருவருக்கு விலைபேசி விற்க முயற்சிக்கும் தாதாவான ரகுவரனின் கதாபாத்திரமும் திணிக்கப்பட்டதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தினாலும், படத்தின் விறுவிறுப்புக்கு அவை பெரிதும் உதவியுள்ளன.



தலைவாசல் விஜய், விஜய் ஆதிராஜ், எம்.என். நம்பியார், மனோரமா, சுந்தர், சத்யன், மாஸ்டர், ஹரி, விஜயலட்சுமி, அம்பிகா, வடிவுக்கரசி, விசித்ரா ஆகியோரது பங்கும் குறிப்பிடத்தக்கது.

படத்திற்கு பக்கபலமாக அமைந்துள்ளவை இளையராஜாவின் இனிமையான இசையும், ராம்நாத் ரெட்டியின் கண்களுக்கு விருந்து படைக்கும் ரம்யமான ஒளிப்பதிவும். பாடல்களில் ஹரிஹரன் பாடியுள்ள 'வெண்ணிலவுக்காசைப்பட்டேன்' என்ற பாடலும், இளையராஜா பாடியுள்ள "வானத்திலிருந்து" என்ற பாடலும் குறிப்பிடும்படியான பாடல்களாக அமைந்துள்ளன.

'ரோஜா கம்பைன்ஸார்' வழங்கியுள்ள இந்த பூந்தோட்டம் வாசம் வீசும் 'பூந்தோட்ட'மாக அமைந்துள்ளது.

# மயூரி

கும்பகோணம் கோபாலு' படத்தின் மூலம் இயக்குநர் கேயாரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இளம் கதாநாயகி மயூரி.

மயூரியின் பின்னணி?

சொந்தப் பெயர் ஷாலினி. சினிமாவிற்காக மயூரி என்று பெயர் வைத்தவர் கேயார். பெங்களூரில் பிறந்து வளர்ந்தவர். தாய் மொழி தமிழ். மயூரியின் தந்தை கல்வித்துறையில் அதிகாரியாக பணியாற்றி வருபவர். தாயார் சொந்தமாக பிஸினஸ் செய்து வருகிறார். மயூரி எட்டாம் வகுப்பு வரை படித்தது பெங்களூரில். அதற்கு பிறகு மயூரியின் குடும்பம் சென்னையில் குடியேறவே இப்போது இங்கு பத்தாம் வகுப்பில் படித்து வருகிறார்...... என்றால் மயூரியின் வயது? நீங்கள் ஊகித்து கொள்ளுங்கள்.

மயூரி எப்படி 'கும்பகோணம் கோபாலு' படத்தின் கதாநாயகி ஆனார்?

மயூரியே சொல்கிறார்...

சின்ன வயதிலிருந்தே ஒரு நடிகையாக வரவேண்டும் என்றுதான் எனக்கு ஆர்வம் இருந்தது. என் ஆர்வத்துக்கு என் பெற்றோர்களும் ஊக்கம் கொடுத்தனர். பள்ளி விழாக்களில் நடைபெறும் நாடகப் போட்டி நடனப் போட்டி ஆகியவற்றிலெல்லாம் பங்கேற்றுக் கொண்டதோடு, கலை மீதுள்ள என் ஆர்வத்தையும், திறமையையும் வளர்த்துக் கொண்டேன்.

'கும்பகோணம் கோபாலு' படத்தில் நடிக்கும் வாய்ப்பு எப்படி கிடைத்தது என்றால்..... புகைப்பட கலைஞர் ஸ்டில்ஸ் ரவி அவர்கள் எடுத்த எனது புகைப் படங்களை கேயார் அவர்கள் பார்த்திருக்கிறார். அவர் எனது படங்களைப் பார்த்ததும் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நடிக்க விருப்பமா என்று கேட்டார். உடனே ஒப்புக் கொண்டேன். மேக் - அப் டெஸ்ட் போன்றவற்றிலெல்லாம் 'ஓகே' ஆகி விடவே, 'கும்பகோணம் கோபாலு' படத்தின் கதாநாயகியானேன்.

முதன் முதலாக கேமிராவுக்கு முன்னால் நடித்த அனுபவம் எப்படி இருந்தது என்று கேட்டதற்கு மயூரி சொல்கிறார்.....

எனக்கு எந்தவித பயமோ, பதட்டமோ ஏற்படவில்லை. நான் நடித்த முதல் காட்சி முதல் ஷாட்லேயே ஓகே ஆனதும் டைரக்டர் கேயார் அவர்களும், யூனிட்டில் உள்ள மற்ற கலைஞர்களும் பாராட்டியதை என் வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவமாகி விட்டது. முதல் படத்திலேயே நடிப்புக்கு ஸ்கோப் உள்ள கதாபாத்திரமாக கிடைத்ததும், ஒரு வெற்றிப் பட இயக்குநரின் இயக்கத்தில் நடித்ததும் என் அதிர்ஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும்.

தனது திறமையை அங்கீகரித்து, ஒரு கதாநாயகியாக தமிழ் திரையுலகிற்கு அறிமுகப்படுத்திய கேயார் அவர்களுக்கு நான் என்றென்றும் நன்றிக்கடன் பட்டவளாக இருக்கிறேன் என்று கூறும் மயூரி... மலையாளத்தில் பிரபல இயக்குநரான சிபி மலையில் டைரக்ஷன் "Summer in Bedleham" என்ற மலையாள படத்திலும் நடித்து முடித்துள்ளார். இதில் ஜெயராம், சுரேஷ்கோபி, மோகன்லால் ஆகியோர்களுடன் மயூரி நடித்துள்ளார். இந்த படத்திலும் மயூரிக்கு பேசப்படும் வகையிலான கதாபாத்திரமாம்.



கேயார் சொந்தமாக தயாரிக்கும் 'நிலா நிலா ஓடிவா", பாலசேகரன் இயக்கத்தில் திருப்பூர் மணி தயாரிக்கும் 'சொல்லிவிடு', மற்றும் நிவேதிதா பிலிம்ஸ் தயாரிக்கும் "நேற்று வரை நீ யாரோ". இதில் 'சொல்லிவிடு' படத்தில் ரஹ்ராம் ஜோடியாகவும், "ரவிச்சந்திரனின் மகன் ஹம்சவிருத்தன் ஜோடியாகவும் மயூரி நடிக்கிறார்.

மயூரிக்கு ஸ்ரீதேவி, சரிதா, சப்னா ஆஸ்மி, ஷோபனா ஆகியோரது நடிப்பை மிகவும் பிடிக்குமாம். அவர்களது படங்களைப் பார்த்துதான் தன் நடிப்புத் திறமையை வளர்த்துக் கொண்டேன் என்று கூறும் மயூரிக்கு தமிழ், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகள் தெரியுமாம். வெஸ்டர்ன், கிளாசிகல் என்று அனைத்து நடனங்களிலும், ஹார்ஸ் ரைடிங், ஸ்விம்மிங், டிரைவிங் என்று ஒரு நடிகைக்கு தேவையான அனைத்து விஷயங்களிலும் போதுமான பயிற்சியையும் பெற்றுள்ளாராம். மயூரி.

கிளாமர் விஷயத்தில் நீங்கள் எப்படி என்று கேட்டதற்கு...

கிளாமர் இல்லாமல் இன்று சினிமாவே கிடையாது. நடிக்க வந்து விட்டால் ரசிகர்கள் விரும்பும்படி நடித்துதானே ஆக வேண்டும். கிளாமர் தான் புகழ்தரும். அதனால் கிளாமர்,

## "தினக்கதிர்" - குறுக்கெழுத்துப் போட்டி இல - 1

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| | 12 | 13 | ■ | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | ■ |
| | 32 | 33 | 34 | 35 | ■ | 37 | 38 | 39 | 40 |
| ■ | 42 | 43 | 44 | 45 | ■ | 47 | 48 | 49 | 50 |
| | ■ | ■ | ■ | 55 | 56 | 57 | 58 | ■ | 60 |
| | 62 | 63 | 64 | 65 | 66 | ■ | 68 | 69 | 70 |
| | 72 | 73 | ■ | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| | 92 | 93 | 94 | ■ | 96 | 97 | 98 | 99 | 100 |

## "தினக்கதிர்" குறுக்கெழுத்துப் போட்டி

### போட்டிக்கான விதிகள்

01. இங்கு தரப்பட்டுள்ள (10×10) 100 சதுரங்கள் கொண்ட அட்டவணையில் அடைபட்ட சதுரங்கள் தவிர ஏனையவை தங்களால் எழுத்துக்கள் இட்டு நிரப்பப்படவேண்டும்.

02. குழும்பியுள்ளது, தலைகீழாக உள்ளது. திரும்பியுள்ளது என்ற "பதங்கள்" குறிப்பிடப்பட்ட கேள்விகளுக்கான விடைகளை எழுதும்போது அதே பதத்துடன் குறிப்பிட வேண்டும்.

03. கேட்கப்பட்ட கேள்விகளின் முடிவில் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்ட இலக்கம் விடையின் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது.

04. ஒற்றை - இரட்டைக் கொம்புகள் அரவு போன்றவை தனி எழுத்துக்களாகக் கருதப்பட மாட்டாது.

05. இரு விடைகளிற்கு நடுவே பிரிவிற்கான அடைப்புச் சதுரம் இல்லாமல் இருப்பதும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

06. போட்டிக்காகத் "தினக்கதிர் அட்டவணை" முக்கியம் என்று கருதப்படமாட்டாது. பிற தாள்களிலும் எழுதி அனுப்பலாம்.

07. விடைகளுடன் இங்கு பிரசுரமாகியுள்ள கூப்பனை அனுப்பத் தவறுபவர்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

08. போட்டியின் முடிவுகள் "தினக்கதிர்" ஆசிரிய பீடத்தால் மட்டுமே தீர்மானிக்கப்படும்.

09. "தினக்கதிர்" ஊழியர்கள் - அவர்களது குடும்பத்தவர் - நெருங்கிய உறவினர்கள் போட்டியில் கலந்து கொள்ளலாம் அவர்களிற்குப் பரிசு வழங்கப்பட மாட்டாது. (பரிசுக் குலுக்கலில் அவர்களுடைய இலக்கங்கள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது)

10. "விதிக்கப்பட்ட விதிகள் அனைத்தும் என்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டது" என்று கருதுபவர்களிற்கே போட்டியில் கலந்து கொள்ளும் உரிமை உண்டு.

பெயர் : ........................................

முகவரி : ........................................

போட்டி இல : ........................................

ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதி அனுப்பும் பட்சத்தில் பரிசுக்குரியவர் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப் படுவார்.

வெற்றி பெற்ற வாசகருக்கு ஆறு மாதத்திற்கான (வெற்றி பெற்ற தினத்திலிருந்து) "தினக்கதிர்" பத்திரிகை இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

### கேள்விகள் - மேலிருந்து கீழ்

இல 1. சாதுர்யம் - திறமை என்ற பொருள்படும் (4)
இல 2. பெண்களின் விழிக்கு உவமை குழம்பியுள்ளது. (5)
இல 3. தையும் மாசியும் வையகத் துறங்கு (2)
இல 5. பாக்கியராஜ் படம் ஒன்றின் பெயர் (9)
இல 6. கவலை குழம்பியுள்ளது (3)
இல 7. புகழ் பெற்ற இந்திய எழுத் தாளர் (6)
இல 9. தந்திரம் தலைகீழாகி விட் டது (3)
இல 10. மூன்று தலைகீழாகி விட் டது (2)
இல 40. மத உணர்வுகளிற்கு அரசி யலில் தமிழர்கள் இடங் கொடுப்ப தில்லை என்பதற்கு உச்சக் கட்ட உதாரணம் இவர் (7)
இல 51. "வில்லிசை" பாடிய வில்லர் கள் மத்தியில் இவர் ஒரு கதாநாய கன். (பிறந்த இடம் அச்சுவேலி) (5)
இல 56. முக்கனிகளில் ஒன்று குழம்பி விட்டது (5)
இல 58. பாணம் (5)
இல 62. முகம் அல்லது துடிப்பு என்ற யாதாயினும் ஒரு சொலிலிற்கு ஒத்த சொல் குழம்பியுள்ளது (4)
இல 63. அறுப்பதற்குப் பயன்படும் ஒரு பொருள் (இதனுடன் பசுவைக் குறிக்கும் ஒரு சொல்லை முன்னே இணைத்தால் ஆதி என்று பொருள் மாறிவிடும் (4)
இல 69. முயற்சி - விடாமுயற்சி - இதனுடைய குணம். சிறு ஜந்துவான படியால் தலைகீழாக உள்ளது (4)
இல 84. நாக்கு (2)


### கேள்விகள் இடமிருந்து வலம்

இல 1. பாகிஸ்தானுடன் "தாஸ்கண்ட்" ஒப்பந்தம் செய்த இந்தியப் பிரதமர் ஒருவர் (இவர் பாகிஸ்தானிலே ஒப்பந் தம் செய்த பின் அங்கேயே மரணமா னவர்) (10)
இல 11. தற்போது தினசரி பத்திரி கைகளில் இந்த ஊரைப் பற்றிய பிர தேசத்தைப் பற்றிய செய்திகள் வராத நாளே கிடையாது (3)
இல 18. அருள் என்றும் பொருள் படும் (3)
இல 21. மிகவேகம் என்ற பொருள் தரும் (4)
இல 25. காணிக்கைப் பணம் போடும் இடம் திரும்பிவிட்டது (5)
இல 31. தினசரி என்ற பொருள் திரு ம்பி விட்டது. (5)
இல 37. விழி திரும்பிவிட்டது. (2)
இல 42. கப்பலைச் செலுத்துபவன்(4)
இல 47. பலகணி என்பதற்கு தற் போது வழக்கில் உள்ள சொல் இது(4)
இல 55. "மாருதி" குழம்பிவிட்டது.(4)
இல 61. விநாயகருக்கு இன்னொரு பெயர். முதலாவது உயிரெழுத்தை இழந்தாலும் பெயர் மறையவில்லை. ஆனால் குழம்பியுள்ளது (6)
இல 68. ஒன்றும் இல்லை என்று கூறும் வர்க்கத்தினர் இதனை அடிப்ப டையாக வைத்தே அழைக்கப்படுவர். (கடவுள் பற்றிய விடயங்களில் அதி கம் காணப்படும்) திரும்பியுள்ளது.(3)
இல 71. காடு குழம்பிவிட்டதே (3)
இல 96. கோலின் துணையுடன் இது ஆடலாம். சொல்லின் துணையுடன் ஆடுவார்கள் அறிஞர்கள். குழம்பியுள் ளது (5)

முடிவு திகதி :- **செப் 12**

விடைகள் கிடைக்க வேண் டிய முகவரி:-

பிரதம ஆசிரியர்
"தினக்கதிர்"
த.பெ.இல 6,
05, வேதாரணியம் சதுக்கம்
மட்டக்களப்பு.




## குருதிப் பறவை

இரவுகளே இல்லை
இமை மூடித் துஞ்ச
பறவைக்கு
இரவுகளே இல்லை

இரவைத் துரத்துகிறது
மனித இருளைத் துரத்துகிறது
எட்டிப் பிடிக்கிறது
ஈற்றில்
பகலாக ஆகிறது

தாகம் தாகம்
பாரில்
பறவைக்கு
தீராத தாகம்

கூடுகளும் இல்லை
கிளைகளுமில்லை
அதற்கு
தாகமோ பெரும் தொல்லை
அது தேடும் குருதியோ
எங்குமே இல்லை
பாவம்!
பறவையின் வாழ்க்கை பாவம்

ஊரும் பார்த்தது
நாடும் பார்த்தது
காடும் பார்த்தது
பாரையே பார்த்தது
எல்லா இனங்களின்
குருதியை ஒட்டி
ஒத்திகை பார்த்தது
எங்குமே இல்லை
அது தேடும் குருதி
பாரில் எங்குமே இல்லை
பாவம் புதுமைப் பறவை

கூடுகள் இல்லை
பறவைக்கு வாழ நிரந்தர கூடுகள் இல்லை
பறவைகள் அடைக்கலம் புகும்
மனிதக் கூடுகளோ கொள்ளை
இதனால்
மனிதக் கூடுகளை
மண்ணில் விட்டுச் செல்லும்
ஆவிகளோ கணக்கில்லை
அதனால் - அகதிகளோ
நாட்டுக்கு பெரும் தொல்லை.

பெண் என்றும் இல்லை
ஆண் என்றும் இல்லை
இரவென்றும் இல்லை
பகலென்றும் இல்லை
அதுபோடும் வேஷமோ
கணக்கில்லை

தோள்களோ - அதற்கு
இடங்கொடுத்த முல்லை
பால்களை இழந்து
பட்டுப் போகிறதே
ஊஞ்சலாட இடங்கொடுத்த
தோள் முல்லை
பாவம்
மனித முல்லை

பறவைக்கோ பசி தீரவில்லை
பலியாகும் உயிருக்கோ
முடிவுகள் இல்லை
தொல்லை இல்லா
வாழ்க்கையோ
நமக்கினி இல்லை
கண்ணீர்தான்
இதற்கு இனி எல்லை
பாவம்
பறவை குருதிப் பறவை
அதுதான்
ஆயுதப் பறவை

இன வேற்றுமை கழற்றி
இருண்டு போன பாரை
இனியாவது மீட்போம்
இந்த
சமாதான
சந்தண மரத்தடியில்
நாம் ஒன்று கூடி

நசீர் பாறூக் மருதமுனை

## மங்கிய மனங்கள்

நறுமணங் மிகுந்த சந்தனத்தை
வெட்டும் போது கூட - அது
எதிரி என்று பாராது
நறுமணம் வீசுகிறது.

காற்று, அது யாதி, மதம்
சொத்து, சுகம்
பணம், பட்டம் கேட்பதில்லை
தனக்கென்று எதுவும் இல்லை
யாவருக்கும் யாவும் ஆகின்றது

உனக்கும், எனக்கும்
உள்ளது இரத்தம்
இறுதி மூச்சுமட்டும் உழைத்திடும்.
ஓய்வுதனை தேடுவதில்லை - எம்மால்
அதற்கு ஓய்வும் இல்லை

இவ்வுலகில்
இயன்றவரைக்கும் இன்பம் அனுபவித்திட்டோம்
எல்லாம் எதற்காக?
சுகத்தினை தேடியே
சுதந்திரமாய் வாழ பழகியும் விட்டோம்,

ஆனால்!
மற்றவனின் துயர்துடைக்க
எதைத்தான் செய்தோம்!

பகைவனுக்கு அன்பு
பயின்றோம் பள்ளியில்
வாழ்வாக்கிட முடிந்ததா?

வாழ்க்கைக்கு வெறும்
உயிரற்ற ஓவியங்கள் தான்
வந்துவிட்டு மறையும்
மின்மினிப் பூச்சுக்களில் ஓர்
வகை என்றால் கூட
அது மிகையாகாது
மங்கிய மனங்கள் உள்ளவரை
வாழ்வில் விடிவு ஏது........

ஏ.ஆர்.கசில்டா

# காத்திருப்பு

சிறுகதை

ஓட்டமாவடி அறபாத்

குடிசைக் கதவை விலத்திக் கொண்டு ரகுமத்து வெளியே வந்தான். புறவளவுக்குள் ஆடுகள். பயிர்களுக்குள் தலையை புதைத்தபடி மும்முரமாயிருந்தன. "துவா.... துவா....... எந்தக் கூதிரமகன்ட ஆடிது" புடவைத் தலைப்பை இழுத்து வாகாக இடுப்பில் சொருகிக் கொண்டு வளவின் கடைக் கோடிக்கு ஓடினாள்.

"டேய் அனிவா, மம்மனிவா" வளவின் வளைவிலிருந்தே ரகுமத்தின் குரல் தடித்தது. புகாரி ஹாஜியாரின் மில்லுக்கு மரத்தூள் அள்ளப்போன மகன் ஹனீபாவின் சிலமனைக் காணாதது வேறு எரிச்சலைக் கிளறிவிட்டது. "இந்த நாசமறுப்பான் எங்க போய் தொலஞ்சான். மறுபடியும் அவன் குரல், தென்னந் தோப்பில் மோதித் தெறித்து காற்றுடன் சங்கமித்து காணாமற் போயிற்று.

"மகரிபடப் போகுது. காட்டுல போன மனுஷனயும் காணல" நெஞ்சில் குமிழியிட்ட எண்ணத்தை சுமந்தபடி கிறவல் வீதிக்கு பார்வையை எறிந்தாள். கரத்தைகள் எதுவும் அசைவதாயில்லை. ரகுமத்து ஆடு நுழைந்த இடுக்குகளை சரி செய்தாள். இன்னும் எங்கேனும் விரிசல் விட்டிருக்கிறதாவென கண்களை இடுக்கிக் கொண்டு, ஒரு ரவுண்டடித்தாள். கீரைத் தளிர்கள் கொஞ்சம் நோண்டியெடுத்து அடிமடியில் கட்டிக் கொண்டாள். ஆற்றங்கரையில் பிடித்து வந்த கங்கான் இருக்குது போட்டுச் சுண்டலாம்.

நிலத்தில் இருளூறையத தொடங்கிற்று. "உம்மோய் சோறு பொங்குது" "கெதியா வாகா" மகள் கைரியா வாசலுக்கு வந்து சத்தம் வைத்தாள். "அரிக்கிமிலா வெச்சி சோறு மூடத் தெரியா" "என்னடி பொம்புள நீ - நாளைக்கோ, இண்டக்கோன்னு இருக்கிறாய்" என்ட வகுத்துலயும் வந்து பிறந்தியே" வாழ்வின் மீதான சகல எரிச்சலையும் கரித்துக் கொட்டினாள். கைரியா முற்றத்து கொய்யாவில் முதுகை வைத்து நெடு நேரமாய் வெறித்து நின்றாள்.

"பாங்கு பறிச்சிட்டு, லாம்ப பத்தவை கைரியா" சொல்லிக் கொண்டே அடுப்பு வெளிச்சத்தில் கீரையின் நார்களை ஒதுக்கத் தொடங்கினாள். சற்றைக்கெல்லாம் தூள்பேக்குடன் மகன் வந்தான்.

"எங்கடா தொலஞ்ச, இம்புட்டு நேரமா"

"அங்க தூளுக்கு சரியான போலிங்கா",

"இனி காசுக்குத்தான் தூளாம்."

"சாமி வரம் கொடுத்தாலும்" இந்த புசாரி மார்தான் நம்மட வகுத்துல அடிப்பானுகள்"

"சரி நீ வாப்பா வாராராண்டு ஒழுப்பம் பாரு, கட்டி வைத்திருந்த கன்றுக் குட்டியை அவிழ்த்து விட்டது போல் அவன் பாதைக்கு ஓடினான்.

திடீரென ஆறாம் கட்டைப் பக்கமிருந்து வெடிகள் கிளம்பின. ஒற்றையில் ஆரம்பித்து, ஏகவாக்கில் இரு தரப்பும் கொட்டத் தொடங்கினர்.

"ம், தொடங்கிட்டானுகளா"

"கொஞ்ச நாளா ஒண்டும் இல்லாம இருந்திச்சி. இது எப்ப ஓய்ரதும், நாம நிம்மதியா இருக்கிறதும்," அடி வயிற்றில் ஜிவ்வென்று எரிந்தது.

"அல்லா, அவரும் காட்டுல போன நீதான் காப்பாத்திக் கொண்டு வந்து சேர்த்திடு"

துவக்கோசைக்குப் பயந்து, இடைநடுவில் ஓடிவந்தான் ஹனீபா. வந்த வேகத்தில் குடிசைக்குள் பதுங்கிக் கொண்டாண்.

"இவன் இப்படித்தான் பயந்தாங்கொள்ளி"

"இஞ்சவாராது பயத்துல மூத்திரம் பேஞ்சிடாத" ஓங்காரமாய் மகனைப் பார்த்து சிரித்துக் கொண்டாள். இன்றைக்கென்னவே மனசில் உற்சாகம் கொப்பளித்துப் பீரிட்டது.

முற்றத்தில் இறங்கி கொய்யாவில் சாய்ந்து கொண்டான். கண் தொடும் எல்லை வரை வியாபித்திருந்தது இருள். இருளின் கருமையைக் கிழித்துக் கொண்டு, நெருப்பைக் கக்கும் ஹெலியின் கொடூரத்தை ரகுமத்து பார்த்துக் கொண்டிருந்தான். தொடர்ந்தும் இருளில் உறைந்திருக்க அச்சமாய் வந்தது.

திண்ணைக் கட்டில் குந்தியிருந்த கைரியா நாடிக்கு கைகளை முட்டுக் கொடுத்தபடி எதையோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தாள். விளக்கொளியில் அவள் மதர்த்த உடலும், எகிறிவரத் துடிக்கும் மார்புகளின் திமிர்வும் திகிலை ஊட்டின. "இனி குமாரகுற பருவம்" அடிவயிற்றில் தீமூண்டு பெருமூச்சாய் கசிந்தது.

இற்றைக்கு பத்து வருடங்களுக்கு முன் இந்த தோட்டத்திற்கு வந்தவள் ரகுமத்து. அவள் கிராமத்தில் ஏற்பட்ட பதற்றமும் புதிதாய் முளைத்த முகாம்களும் கிராமத்தவர்களை பூர்வீக மண்ணை விட்டும் அப்புறப்படுத்திற்று. திக்கற்ற அவள் குடும்பத்தை இந்த தோட்டத்தில் குடியமர்த்தினார் அஸனார் ஹாஜி. வரும் போதே கைரியா கைக்குழந்தை. தோட்டத்தில் தரித்தவன் தான் இளையவன் ஹனீபா.


ரகுமத்தின் கணவனுக்கு பரம்பரைத் தொழில் விறகு வெட்டுவது தான். வனவாசம் அத்துப்படி. அவளின் வாப்பா சீதனமாய் கொடுத்த ஒரு சோடி தம்மன்கடுவ மாடுகளும் மருதமுனைக் கரத்தையும், அவளின் குடும்பத்தின் வறுமையை ஓரளவேனும் விரட்டிக் கொண்டிருக்கும் ஆதனங்களாகும்.

ஓடைக்கரையில் இடைவிடாது ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. வானப் பொட்டில் அறையுமாற் போல் கடகடவென கடுகுழல்களின் அதிர்வு கால்களைப் பரத்தி மல்லாந்தாள். வானமே இருளுக்குள் உறைந்திருந்தது. ஒரு வெள்ளியேனும் மிச்சம் வைக்காமல் மூடிக் கிடந்தது. கருமேகம். மல்லாந்தவள் சற்று கழுத்தை முறித்து மகளில் பார்வையை எறிந்தாள். குப்பி லாம்பின் மினுக்கில் அவள் முகம் மினுமினுத்தது. சின்னவன் ராத்தாவின் இடுப்பை அண்டி பிசினாய் இருந்தான்.

10 வருடங்களுக்கு முன் ரகுமத்தின் வாழ்க்கை நேர் கோட்டில் தான் ஓடிக் கொண்டிருந்தது. மனசுக்குப் பிடித்த பிரியமான வாழ்க்கை. கணவனுக்கு பிகு பண்ணாத தனிமையும் தாபமும். இரவில் ஆற்று மணலில் சர்ப்பங்களாய் பின்னிக் கிடந்து புல்லரித்த நிலாக்காலங்கள். எல்லாமே இந்த இருளுக்குள் இருளாய் கண்ணுக்குள் மின்னிப் போயின.

பெரியபள்ளி மினாராவிலிருந்து இஷாத் தொழுகைக்கான அதான் சாயுத்தம்பி மோதினாரின் குரல் காற்றில் நிறைந்து செவிகளுள் ஒழுகிச் சென்றது. ரகுமத்து இளமைக்கால கனவுகளை கலைத்து விரட்டினாள்.

"பிள்ளைகள் இரண்டும் நல்ல தூக்கம். என்ட அல்லாஹ் புள்ளயல் பசியில படுக்குதுகள்" பதறியவள் விளக்கை நகர்த்தி குடிசைக்குள் நுழைந்தாள். தாலாப் பீங்கானில் சோற்றைப் பரத்தி நடுவில் வகிடெடுத்து,



பாலாணத்தையும், கீரைச் சுண்டலையும் அள்ளிவிட்டாள். "புள்ளேய், டேய் அனிவா எழுப்புங்க திண்டுட்டு படுங்க"

அரிக்கன் லாம்புடன் வெளியே வந்தாள். கரத்தையின் சிலமனே இல்லை. நெஞ்சத்தீ, வளரத் தொடங்கியது. "பக்கத்து தெரு ஆதம்காக்காவும் அவரும் தான் போன ஒரு நடை போய் வருவம்." "இந்தா கைரியா தட்டியச் சாத்திட்டு இருங்க, ஆதம் மாமாடவூட்ட போய்ட்டு வாரன்" கடப படியில் நின்று சத்தம் வைத்தவாறே வீதிக்கு குறுக்கே விரைந்து போனாள்.

அவரின் மேல் உள்ள தீராத அன்பும், காதலனுணர்வும் உயிரின் மேல் உள்ள அச்சத்தை விரட்ட நடந்தாள். மார்புக் கூட்டுக்குள் நாகுகள் இரண்டு போரிடும் வெறி. ஆதங்காக்காவின் வாசலில் அவரின் மனைவி.

என்ன மச்சி, இவுகள இன்னும் காணலியே" அவளைக் கண்ட அவள் உடையத் தொடங்கினாள்.

"அதான் நானும் விசலம் கேட்க வந்த"

"எங்கால வெடில்?"

"வாகநேரிப் பக்கம் தான் கேக்

"தனியா இருக்காம வூட்ட வாங்க மச்சி அவக வந்தா தெரியும் தானே"

பலத்த வெடியோசைகள் குறைந்து ஒன்றிரண்டு திக்கொன்றாய் வெடித்துக் கொண்டிருந்தன. ரகுமத்தின் முற்றத்தில் ஆதத்தின் மனைவி "சோறு தின்னுங்க மச்சி"

"வாணாம் மச்சி அவக வரட்டும்"

ரகுமத்தின் பிரிவில் அவள் உருகி விசும்பத் தொடங்கினாள். சின்னக் கேவல் ஒப்பாரியாக வெடிக்கும் போல் இருந்தது. "கத்தாதீங்க மச்சி அல்லாட காவலா வருவாங்க" ஆறுதல் சொன்ன ரகுமத்தின் குரல் உடையத் தொடங்கியது. புடவைத் தலைப்பை வாய்க்குள் திணித்து தன் பலவீனத்தை மறைக்க முயன்று தோற்றுப் போனாள். இரு பெண்களின் மன சுக்குள்ளும், வேதனையும் கிலியும் ஒருவரை ஒருவர் தேற்ற முடியா பதற்றத்தில் வானத்தை மட்டும் வெறித்திருந்தனர்.

சங்கத்து அலாரம் இரண்டு முறை அடித்து ஓய்ந்தது. கற்சிலையாய் இரு பெண்களும் முற்றத்தில். பனியொழுகும் வானக் கூரையின் கீழ் விழியொழுகி உலர்ந்து போக சோர்ந்திருந்தனர். முயல் வேட்டைக்கென ஏவிவிட்ட நாய்கள் வெறிகொண்டு தோட்டம் முசிய அதர்மம் செய்தன. தூரத்தே வாகனங்களின் இரைச்சல் தலைக்கு மேல். இனம் புரியா பறவையொன்று கணத்த சோகத்துடன், க்த்திச் சென்ற ஒலியைத் தவிர கடும் மௌனத்துள் உறைந்திருந்தது கிராமம்.

அந்த மௌனத் திகிலை கிழித்துக் கொண்டு பெரிய பள்ளியின் ஒலிபெருகி அலறியது. நள்ளிரவு தவம் கலைய சீற்றம் கண்டது ஊர். தற்போது நடந்த சண்டையில் நமது கிராமத்தவர்களும் பாதிக்கப்பட்டிருப்பதாக இராணுவ கமாண்டர் அறிவித்துள்ளார். இன்னும் சற்று நாளிகைக்குப் பின் பொதுமக்கள் பள்ளிவாசலுக்கு வந்து, இன்னும் வீடு திரும்பாத உறவினர்களைப் பற்றிய தகவல்களைத் தரவும் அவ்வளவுதான்.

ரகுமத்து ஓடினாள். போரை வெறுத்து அன்றாடம் வயிற்றுப் பிழைப்புக்கே அல்லல்படும் அவர்கள் தலைவிதியை எண்ணி அழுதழுது ஓடினார்கள். சாயு தம்பி மோதினார். இடைவிடாது ஒலிபெருக்கியில் கரைந்து கொண்டிருந்தார். சாவன்னாவின் கடை மூலையில் திரும்பிய ரகமத்தை ஆதத்தின் மனைவி இழுத்துப் பிடித்தார். நிலம் தெளிந்திருந்தது. "அந்தா மச்சி நம்மட அவுகட கரத்தைததான் வருது".

ரகுமத்தின் உடலோடிச் சிலிர்த்தது, நரம்புகளின் மின்னலின் அதிர்வு. லாந்தரை அப்படியே விட்டு விட்டு ஸ்தம்பித்து நின்றாள். முதற் கரத்தையில் ஆதம்காக்காவின் தலைக் கருப்பு. அதனைத் தொடர்ந்து வருவது அவர்ற கரத்தைதான். பூரிப்பில் கண்கள் குளிர்ந்தன. பல நாள் பிரிந்து தாயைக் கண்டதும் துள்ளிக் குதித்தோடும் இளங்கன்றாய் ரகுமத்து கரத்தையை எதிர்கொண்டு ஓடத் தொடங்கினாள்.

அவளுக்கு விசரோ என சனங்கள் ஐயுற்றனர். மார்புச்சேலை விலகி, தோளில் வழிந்தது. V.C க்கு முன் வண்டிலைப் பிடித்து விட்டாள். ஆதங்காக்கா அவளை அருகே வர வேண்டாம் என சைகை செய்தார். கரத்தையின் பின்னால் சனங்கள் நிரம்பி திரண்டு வந்தனர். ரகுமத்தின் தம்பியும் மாமாவும் கூடவே வந்தனர். அவர்களின் முகங்கள் வெளுத்து கண்களும் சிவந்திருந்தன.

அவரின் கரத்தை ஆதங்காக்காவின் கரத்தையுடன் தொடுக்கப்பட்டிருந்தது. மதர்த்த காளைகள் இரண்டும் கணத்த துயரமாய் தலை குனிந்து நடைபோட்டுச் சென்றன. "அவரு எங்க காணலியே". ரகுமத்தின் கண்களுக்குள் இருள் சூழ் கொண்டது. ஆதங்காக்காவின் தடை யையும் மீறி, கூட்டத்தை விலக்கிக் கொண்டு கரத்தைக்குள் எட்டிப் பார்த்தாள்.

நேற்று உடுத்திச் சென்ற நீல நிற சோர்ட்டும், பச்சை சாரனும் அப்படியே, அவருதான் கரத்தை முசிய குருதியின் வீச்சம். கண்கள் பிதுங்க அஹமதை கிடத்தியிருந்தனர். "கைரியாட வாப்பா ஆரு உங்களையும் சுட்ட?"

கரத்தை நுனியில் தொங்கிக் கொண்டு ஒப்பாரி வைக்கும் ரகுமத்தை கவனிக்காமலேயே காளைகள் இரண்டும் ஓடிக் கொண்டிருந்தன.


நினைவுகள் எப்போதும்
நினைவுகள் அல்லவே
அவை வரலாற்றுப் பதிவுகள்

தினக்கதிர்

வியாபாரம் பெருக விளம்பரம் தேவை.
விளம்பரம் சிறக்க தினக்கதிர் தேவை.

உங்கள் அன்புக்குரியவர்களின்
- பிறந்தநாள் வாழ்த்துக்கள்
- திருமண அழைப்பிதழ்கள்
- நிகழ்ச்சி அரங்கேற்றங்கள்
- மரண அறிவித்தல், நினைவாஞ்சலிகள்

என்பவற்றை வரலாற்றுப்பதிவாக்க நாங்கள் தயாராக உள்ளோம்.

விளம்பர விபரம்
1-கலம் செ.மீ ரூபா 40/=
முன்பக்கம், பின்பக்கம்
மேலதிகம் 50%. வீதம்.
முன்பக்கபெட்டி விளம்பரம் ரூ.400/=
பின்பக்க பெட்டி. விளம்பரம்.ரூ 300/=
ஆலயங்கள், தர்மஸ்தாபனங்களுக்கு, சமூகசேவை நிறுவனங்களுக்கு விசேட சலுகை உண்டு.

★மிகக் குறைந்த கட்டணங்கள் ஆனால் பலனோ அதிகம்.

மேலதிக விபரங்களுக்கு:
விளம்பர முகாமையாளர்
தினக்கதிர்
த.பெ.இல. 06.
மட்டக்களப்பு.
தொலைபேசி- 065 - 23055

தமிழ் பேசும் மக்களின் குரலாக தினக்கதிர்

## யார் இந்த புஹாரி இப்றாஹீம்?



1964ம் ஆண்டு சிறுகதைகள் "தீ" யாக வெளி வருகின்றன.
ஆசைத்"தீ"
அழகுத்"தீ"
அன்புத்"தீ"
பாசத்"தீ"
தியாகத்"தீ"
பொறாமைத்"தீ"

வாசகர்கள் மத்தியில் ஓர் கேள்விக் குறி யார் இவர்? கேள்விகள் தொடர்வதற்கு ஏழ்மை தடுப்புச் சுவராக இருக்கின்றது. கடுமையான முயற்சிகளுடன் தனது பாதையை வகுத்துக் கொள்வதற்கு தன்னை தயார்படுத்திக் கொள்கின்றார்.

கல்வியைத் தொடர்வதற்கு தாய் தந்தையர்கள் அத்தனை வசதி வாய்ந்தவர்களாக இல்லை. எப்படியும் படிக்க வேண்டும் என்ற வெறி உந்தித் தள்ள கடைகளில் ஊழியனாக தன்னை இணைத்துக் கொள்கின்றான் இளைஞனான புஹாரி எம். இப்றாஹீம். காலம் பொன் போன்றதல்லவா? சரியாக உணர்ந்து செயல்பட்ட காரணத்தால் இன்று ஓர் எழுத்தாளன் மாத்திரமல்ல! சிந்தனையாளன், ஆராய்ச்சியாளன்.

பல துறைகளில் தன்னைத் திணித்துக் கொள்ளவும் அவர் தவறவில்லை. மருத்துவத்துறை, எண் விஞ்ஞானத்துறை, மனோதத்துவத் துறை, பத்திரிகைத்துறை, எழுத்துத்துறை, வியாபாரத்துறை, அரசியல் துறை, பேச்சுத்துறை, மருத்துவ ஆராய்ச்சித் துறை, இஸ்லாமிய தத்துவத்துறை போன்றவற்றில் விற்பன்னாகத் திகழும் இவர் எதிலும் சளைத்தவரல்லர் என்பதை இன்று நிரூபித்து வருகிறார்.

எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அத்துறையில் சரித்திரம் படைக்காமல் இருக்க மாட்டார் என்பதில் கடந்த கால இவர் நடவடிக்கைகள் முன் உதாரணங்களாகத் திகழ்கின்றன. உதாரணமாக பல வருடங்களாக "இன ஐக்கியத்திற்காகப் பாடுபட்டு வரும் இவர் 1998ம் ஆண்டு நான்கு இன மக்களில் இருந்து பதினான்கு பேர்களைத் தெரிவு செய்து அவர்களுக்குத் தங்கப்பதக்கங்கள், பொன்னாடைகள், பட்டங்கள் கொடுத்து கௌரவப்படுத்திய இவருடைய செயல் லண்டன் B.B.C யில் கூட ஒலிபரப்பப்பட்டது குறிப்பிடத் தக்கது.

எழுத்துத் துறையிலும் சாமான்யப்பட்டவர் அல்ல! இதுவரை முப்பத்தி இரண்டு நூல்களுக்கு மேல் எழுதியிருக்கும் இவர், பல சாதனைகளை படைத்திருக்கிறார். இஸ்லாமிய யதார்த்த வாதத்தை உடைத்து "ஹமவோஸ்த்" என்ற ஒரு நூலை ஒருவர் எழுதிய போது, அதற்கு எதிராக "ஹமவோஸ்த்" அது ஒரு வேஸ்ட் என்ற நூலையும், "சிந்தித்தால் சந்திப்பாய்" என்ற நூலை மேலே உள்ள அதே நபர் எழுதிய போது "சந்தித்தால் சீரழிவாய்" என்ற பதில் நூலை எழுதி இஸ்லாமியத் துறையில் தனது ஆற்றலை வெளிப்படுத்தினார்.

அது மாத்திரமல்ல "நோய் தீர்க்கும் மாமருந்து பிஸ்மில்லாஹ்!" பெண்களுக்கு பர்தா அவசியமா? உம்றா செய்வது எப்படி? உலமாக்கள் என்றால் யார்? வஹ்ஹாபி என்றால் யார்? தாடி முஸ்லிம்களுக்கு அவசியமா? மௌலானா மௌதூதி மௌலானா இல்யாஸ் இவர்கள் யார்? அஜ்மீக ஹாஜாவை தாஜா செய்யலாமா? போன்ற இஸ்லாமிய ஆத்மீகத் துறை சம்மந்தப்பட்ட நூல்களை எழுதிய போது இவை அனைத்தும் உடனுக்குடன் நூல் உருவில் வெளி வந்தன. இன்றும் இவை சாதனை படைத்து வருகின்றன.

இஸ்லாமிய எழுத்துத் துறை மட்டும்தான் இவரால் முடியுமா? என்ற கேள்வியை உடைத்தெறிந்தது இவரால் எழுதப்பட்ட பயண நூலான "நான் கண்ட மாலைத்தீவு" அது மாத்திரமல்ல "மாலைத்தீவில் நான் கண்ட சரித்தீன்" என்ற நூல் இவருடைய எழுத்தாற்றலில் விளைந்த மற்றுமொரு மைல் கல் என்று சொல்லலாம். இது வும் ஒரு புரட்சிகரமான நூலாகவே திகழ்ந்து கொண்டிருக்கிறது.

மருத்துவத்துறை சார்ந்த நூல்கள் இவருடைய ஆராய்சித் துறையை மேலும் உயர்த்துகின்றது. நீரழிவு, உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு, ஆஸ்மா போன்ற நோய்களைப் பற்றி ஆராய்ந்து அதற்கான மருந்துளைக் கண்டு பிடிக்கும் முயற்சிகளில் தீவிரமாக இறங்கியிருக்கும் இவர் அந்த நோய்களைப் பற்றியும் எழுதிக் குவித்து வருகிறார். மேலும் இன்று உலகை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் "எயிட்ஸ்" நோய் பற்றி கடந்த பல வருடங்களாக ஆராய்ச்சி செய்து "மனிதனைத் துரத்துகிறது எயிட்ஸ்" என்ற நூலையும் எழுதிய இவர் அதற்கான மருந்தையும் கண்டு பிடித்து இப்போது அது பற்றிய இறுதியான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார். அவர் எழுதிய இந்நூல் தான் எமது "தினக்கதிர்" பத்திகையில் கட்டுரையாக வெளி வருகின்றது. இக்கட்டுரையை வாசகர்கள் தொடர்ந்து படிக்கும் போது அவருடைய ஆராய்ச்சித் திறனைக் கண்டு கொள்ள முடியும்.

1978ம் ஆண்டு எண் விஞ்ஞானம் சம்பந்தமாக ஆழமாக ஆராய்ந்து கொண்டிருந்த நேரத்தில் எஸ். ஜோன்ராஜன் அவர்களின் நட்புக் கிடைத்தது. அந்த நட்பு ஆழமாக வேரூன்றியதால் அந்த நட்பிலும் இலக்கணம் வகுத்தார். நண்பருடைய நூலான "மணவாழ்வில் உங்களுக்கு பொருத்தமான துணைவர் யார்?" என்ற நூலை வெளியிட்டு வைத்தார். இதன் மூலம் தன்னால் வெளியிட விருந்த "இலக்கங்களின் தத்துவங்களும் சாதனைகளும்" நூலை வெளியிடாமல் நண்பருடைய நூலுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டார். இப்போது என் விஞ்ஞானத் துறையில் புதிய சிந்தனையப் பற்றி ஆராய்ச்சி செய்து தன்னுடைய நூலை "வெற்றிக்குத் தூண்டு கோல்களாக அமையும் எண் விஞ்ஞானம்" என்ற பெயரில் எழுதி வருகின்றார். அவருடைய "எயிட்ஸ்" சம்மந்தமான மருத்துவத் தொடர் "தினக்கதிரில்" முடிவுற்றதும் மேல்காணும் எண் விஞ்ஞானக் கட்டுரை தொடராக வெளியாகவுள்ளது.

அது மாத்திரமல்ல மனோதத்துவத்திலும் திறமை வாய்ந்த இவர் அது சம்மந்தமான ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு "வெற்றிக்கு வழி வகுக்கும் மனோவசியக்கலை" என்ற பெயரில் எழுதி வருகின்றார். இப்படியாக பல கலைத்துறைகளில் ஆற்றலும், திறமையும் வாய்ந்த இவர் பல துறைக் கல்வியிலும் சிறப்புற்று விளங்குகின்றார்.

உலக நாடுகள் தோறும் பயணம் செய்துள்ளார். 1962ம் ஆண்டு தன்னுடைய பதினைந்தாவது (15) வயதில் மாலைதீவை தரிசிக்கும் பாக்கியம் பெற்ற இவர் ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள சூடான், எகிப்து, லிபியா போன்ற நாடுகளுக்கும், மத்திய கிழக்கு நாடுகள் அனைத்திற்கும் சென்றுள்ளதோடு ஈரான், ஆப்கானிஸ்தான், சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தோனேசியா, அவுஸ்திரேலியா, போன்ற 34 நாடுகளுக்கும் மேல் ஆராய்ச்சித் துறைக்காகக் சென்றிருக்கிறார். இனி என்ன தொடர் உங்களைத் துரத்தக் காத்துள்ளது

நிந்தவூர் நிருபர் பானு

# மனிதனைத் துரத்துகிறது எயிட்ஸ்

## எயிட்ஸ் கிருமிகளும் மனிதர்களும்

உலகில் ஆரம்பகால மனிதர்கள் நாகரீகத்தைப் புரிந்து கொள்ளாதவர்களாக இருந்தாலும், பிரித்தறியக் கூடியவனாக இருந்தால் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

சூரியனின் உஷ்ணம் உடலைத் தாக்கிய போது அதற்கான வழிவகைகளைத் தேடினால் மழை வீழ்ச்சியில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மறைவைத் தேடினான். புயல் காற்றின் கோரத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளப் பாதுகாப்பான வழியைத் தேடினான்.

தனது உடலில் வலிகள், காயங்கள், நோய்கள் ஏற்பட்ட போது அதற்கான நிவாரணங்களையும் தேட ஆரம்பித்தான். நெருப்பைக் கண்டு பிடித்ததும் அதன் தேவையையும், உபயோகமும் அவசியம் என அறிந்து கொண்டான். நெருப்பினால் ஆபத்தும் இருக்கிறது என்பதை அறிந்து கொண்ட மனிதன் அதை சற்று தள்ளி வைக்கவும் தயங்கவில்லை.

மிருகங்களை வேட்டையாடவும், காடுகளைக் களனிகளாக்கவும், தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் முதலில் கற்களினாலும், அதன் பின் மிருகங்களின் எலும்புகளினாலும் அடுத்ததாக இரும்பினாலும் தனக்குத் தேவையான ஆயுதங்களையும் கருவிகளையும் செய்து கொண்டான்.

காலங்களின் இறப்பு, அவனால் உருவம் கொடுத்து உருவாக்கப்பட்ட ஆயுதங்கள் தனக்கும், தனது உயிருக்கும் ஊறு விளைவிக்கும் எனத் தெரிந்து கொண்ட பின்னர் சற்று தள்ளி வைத்துக் கொண்டான்.

இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தவரை மனிதன் எந்த தீங்குகளையும் சந்தித்துக் கொள்ளாமல் மிக மகிழ்ச்சியாக வாழ்ந்தான். அவனுடைய சந்தோசத்தில் எந்தக் குறையையும் இறைவன் ஏற்படுத்தவில்லை.

காலத்தின் நகர்வுகள், மனிதனின் சிந்தனையிலும் வளர்ச்சியை ஏற்படுத்தியது. படிப்படியாக இயற்கையின் இணைப்பில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள நாகரீகமும், பொருளாசையும் அவனை உந்தித்தள்ளியது. அவனுக்கும் பாதுகாப்பாக இருந்த இயற்கை அதனை அழிக்கத் தொடங்கினான்.

தனது ஆசைக்கும், இச்சைக்கும் ஏற்படுத்தப்பட்டிருந்த நெறிமிக்க வரம்புகளை உடைத்தெறிந்து உலகைக் கட்டி ஆளவும் தனது பிடிக்குள் கொண்டு வரவும் பகிரதமுயற்சிகளில் இற்ங்கத் தொடங்கினான்.

தனது பாதுகாப்புக்கு மாத்திரம் அல்ல உலகை வென்று கட்டி ஆளவும் ஆயுதம் அவசியம் என்ற நிலைக்கு அவன் வந்தான். தன்னால் தள்ளி வைக்கப்பட்ட ஆயுதத்தை கரங்களில் தூக்கலானான். பல்லாயிரம் உயிர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டன. திரும்பும் திசைகள் எல்லாம் ஆயுதத்தினால் அவலக் குரல்கள் ஒலிக்கத் துவங்கின. ஆயுதங்கள் முக்கிய இடத்தை உலகில் வகிக்கத் தொடங்கின.

ஆயுதங்களை உருவாக்கிய மனிதனேயே ஆயுதங்களின் உருவில் அவனை ஆட்டிப்படைக்கத் தொடங்கின. செய்வதறியாது தடுமாறிய மனிதன் ஆயுதப்பரிகரணமாக நாடுகளில் இருந்து ஒற்றமை, இணக்கம், சமாதானம், சமத்துவம் என்ற தொனிப் பொருள்களில் கோடிக்கணக்கான ரூபாக்களை செலவளித்து நாடுநாடாக மகாநாடுகளை நடத்தி செய்வதறியாது திகைத்துக் கொண்டு இருக்கின்றான்.

ஆனால் பலன் பூஜ்யம்!

ஆயுதங்களைத் தூக்கிய மனிதனால் தனது உணர்ச்சிகளை திரையிட முடியவில்லை. அவனது உணர்ச்சிகளுக்கு ஆயுதங்களைப் பக்கபலமாக ஆக்கிக் கொண்டான். அரவணைத்துக் கொண்டான்.

இதன் தாக்கம் பெண்களை இச்சைப் பொருளாகாக நினைத்தான். ஆயுதங்களின் துணை கொண்டு தனக்கேற்பட்ட கருமத்தை, உடற் பசியைப் போக்கிக் கொள்ள நாடினான்.

காலங்களின் மரணம்!

விஞ்ஞான எழுச்சிகளுக்கு வித்திட்டன. அதன் எழுச்சி! விஞ்ஞான எழுச்சியாக மாறியும் அழிவுப்படலமே தொடரும் கதையாக இருக்கிறது.

விஞ்ஞான எழுச்சிகூட மனிதனுக்கு 25% சதவீதம் நன்மையை அளித்துக் கொண்டிருக்கின்றன. 75% சதவீதம் மனிதனுக்கு தீமைகளையே விதைத்துக் கொண்டிருக்கின்றன. இது இன்றைய புள்ளி விபரங்கள் காட்டுகின்ற கணிப்பீடுகளாக இருக்கிறது.

விஞ்ஞானபூர்வமாக உயர்ந்த மனிதனால், மனிதனுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மரணங்கள் அளவிட முடியாத அளவுக்கு உயர்ந்து கொண்டிருக்கின்றன.

இயற்கை மரணங்கள் மிகச் சொற்பமாகவே இன்று நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. மனிதனுக்கு மனிதனால் ஏற்படும் மரணங்கள் தினமும் ஆயிரக்கணக்கில் விரிவடைந்து கொண்டிருக்கின்றன. தடுத்து நிறுத்த மனிதனால் முடியவே முடியவில்லை. அதற்கான மார்க்கங்களும் அவனுக்குப் புரியவில்லை.

இந்த நிலையில் மீண்டும் அதிர்ச்சி!

சாதாரண அதிர்ச்சியல்ல பயரங்கர அதிர்ச்சி!

சாதாரண மனிதனை, சாதனை படைக்கும் படித்தவர்களை உலகை கட்டியாளும் தலைவர்களையெல்லாம் ஒரே ஒரு "பூச்சி" அதிச்சிமேல் அதிர்ச்சிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

அது H.I.V என்ற பூச்சியே ஆகும்!

விஞ்ஞான எழுச்சி கொண்ட மனிதன் தான் இந்தப் பூச்சியை உற்பத்தி செய்தான்.

இயற்கையை மீறிச் செயல் பட்டதால் இறைவனால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு உயர் அன்பளிப்பு என்று சொல்லலாம்.

மனிதனுக்கு இன்றைய நிலையில் இறைவனால் கொடுக்கப்பட்ட உயர் அன்பளிப்பை மீளவும் பெற்றுக் கொள்வானா? மனிதன் விரும்பியல்லவா இந்த உயர் அன்பளிப்பைக் கேட்டுப் பெற்றிருக்கிறான். இந்த அன்பளிப்பை பெறுவதற்கு கிட்டத் தட்ட பல ஆயிரம் வருடங்கள் முயற்சி செய்திருக்கிறான். கி.மு 3000 வருடங்களைக் குறிப்பிடலாம்.

ஆக, பல்லாயிரக்கணக்கான வருடங்களின் முயற்சி கி.பி 1960க்கும், 1970க்கும், இடையில் சாத்தியமாகி இருக்கிறது.

மனித உடலில் H.I.V யாகப் பரிணமிக்க 5000 வருடங்கள் தேவைப் பட்டிருக்கின்றன. இது சாதாரண முயற்சியல்ல. பகீரத முயற்சி! இவ்வளவு முயற்சிக்குப் பின் பெற்றுக் கொண்ட ஒரு அன்பளிப்பை இறைவன் மீளப் பெற்றுக் கொள்வான் எனக் கேட்பதிலும் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை. இதை ஒருவரியில் சொல்வதானால் "மனிதனின் முயற்சியினால் பெற்றுக் கொண்ட வெற்றிக் கிண்ணமே எச்.ஐ.வி கிருமியாகும். இப்போது இந்தக் கிருமிஜயை ஒழித்துக் கட்டுவதற்கு எத்தனையோ மகாநாடுகள், ஆராய்ச்சிக்கான பேச்சுவார்த்தைகள், பற்பல முயற்சிகள், இதற்காகப் பல கோடிக்கணக்கான டொலர்கள் தண்ணீராக செலவளிக்கப்படுகின்றன. எதனாலும் அந்தக் கிருமியை அசைக்க முடியவில்லை.

கண்களுக்குப் புலப்படாத கிருமி மனிதனை ஆட்டிப் படைக்கிறது. மண்ணறைக்குள் மனிதனைப் புகுத்திக் கொண்டிருக்கிறது.

இந்தக் கிருமிகளை உருவாக்க முயன்றவர்களும், உருவாக்கிக் கொண்டவர்களும் மனிதர்களே, இதற்கான பெயரைச் சூட்டிக் கொண்டவர்களும் அவர்களே!

அவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட கிருமிகளுக்கு அவர்களாகவே சூட்டிக் கொண்ட பெயர்

HUMAN
IMMUNO DEFICIENCY
VIRUS

என்பதாகும். சுருக்கமாக தலைப்பு எழுத்துக்களால் (H.I.V) எச்.ஐ.வி என அழைக்கின்றார்கள்.

இந்தப் பூச்சிகளை மிகப் பகீரத முயற்சிகள் செய்து உலாவ விட்டிருக்கிறார்கள். இதனால் உலகத்தில் உள்ள ஒவ்வொரு பகுதி மக்களும் இந்த உயிர் கொல்லியான உயர் அன்பளிப்பை தெரிந்தோ தெரியாமலோ பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

தொடரும்

## முறிவு வைத்தியத்தில் முத்திரை பதித்தவர்

மட்டக்களப்பு - இல: 93, எல்லை வீதியைச் சேர்ந்த திரு.சீ. நவரெட்ணராசா ஜே.பி முறிவு வைத்தியர், அந்தியேட்டிக் கிரியா குரு, சமூகத் தொண்டர் என்றவாறு சமூக, சமயப் பணிகளில் முத்திரை பதித்து வருகின்றார்.

காரைதீவில் சமாதி கொண்ட ஸ்ரீ சித்தானைக் குட்டிச் சுவாமிகளின் அருளாசியால் மட்டக்களப்பின் ஆரம்ப கால முறிவு வைத்திய நிபுணர் அமரர் எஸ்.சரவணமுத்து அவர்களுக்கு அருட்கொடையாக வழங்கப்பட்ட "உருக்கு மருந்து" முறிவு வைத்தியத்தை பரம்பரையாக செய்து வரும் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

காலஞ்சென்ற தந்தையும் கோட்டைமுனை தோம்புதோருமாகிய க.சீனித்தம்பி - திருமதி அழகம்மா



தம்பதிகளின் கனிஷ்ட புதல்வர். மட். அர்ச். மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர்.

தமது தந்தையாரிடமிருந்து மரபு வழியாக முறிவு வைத்தியம் கற்று இலங்கை ஆயுர்வேதக் கல்லூரியின் முறிவு வைத்தியப் பரீட்சையில் சித்தியடைந்து 1965 முதல் பதிவு செய்யப்பட்ட வைத்தியராக சேவை செய்து வருகிறார். அத்துடன் தமது மகனையும் முறிவு வைத்தியத்தில் பயிற்றுவித்து வைத்திய பரம்பரையை வளர்த்து வருகிறார்.

கிழக்கு மாகாண சித்த வைத்தியர் சங்க செயலாளராகவும், பொருளாளராகவும் பல ஆண்டுள் பதவி வகித்தவர்.

ஸ்ரீ மாமாங்கேஸ்வர ஆலய பாத யாத்திரை சபை ஸ்தாபகரான இவர் கதிர்காமம் உட்பட பல சைவத் திருத்தலங்களுக்கு பாதயாத்திரைகளை ஒழுங்கு செய்து நடத்தியவர்.

மட்டக்களப்பில் இந்துக்களின் தகனக் கிரியைகள், அந்தியேட்டிக் கிரியைகள் முதலானவற்றை ஆசார விதிப்படி நடத்தி உதவி வருகிறார்.

# வீட்டுக்கு வெளிச்சம் தருவதற்காக கூரையை எரிப்பாரோ? எரிக்கின்றார்! மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவினர்

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் குழு பத்து ஆண்டுகளுக்கு முன்னர் அன் றைய பிரேமதாசா அரசின் கீழ் நிகழ் ந்து கொண்டிருந்த பாரிய வன்முறைக ளைக் கண்டித்து அவற்றை ஆவணப் படுத்தி உலகிற்குத் தெரிவிக்கும் நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்டது. கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம் என இலங்கையின் பல்கலைக்கழங் கள் தோறும் கிளைகளை ஸ்தாபித்து இயங்கி வந்தது. ஆரம்பம் முதல் இயற்றில் யாழ் கிளைதான் அதிக சிரத்தையுடன் இயங்கிக் கொண்டிருந் தது. யூ.என்.பி. ஆட்சி முடிவடைந்த தும் பிற கிளைகள் செயலற்றுப் போயும் கூட, யாழ் கிளை தனது ஆவணப்படுத்தல் நடவடிக்கையினைக் கைவிடவில்லை. முடிவுறாத இனப் பிரச்சினையும் அதன் விளைவாகத் தொடர்ந்த மனித உரிமை மீறல் நிலைமைகளும் இதற்குக் காரணமாக அமைந்தன என்றே கூறலாம். இக்குழு வினைச் சேர்ந்தவர்கள் பிரேமதாசா வின் ஆட்சிக் காலத்திலேயே யாழ் வளாகத்தினை விட்டு வந்து கொழும் பில் நிலை கொண்டிருந்தும், யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் மனித உரி மை குழு என்ற பெயரையே தம் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து உபயோகித்தார்கள் என்பது இங்கு குறிப்பிட வேண்டியதாகும்.

யுத்தம், மனிதரின் உயிர் வாழும் உரிமையினைப் பறிக்கும் மிகப் பெரிய உரிமை மீறலாகும். யுத் தம் என்ற ஒன்று ஆரம்பித்து விட்டால் வெற்றி பெறுவது மிக முக்கியமா கின்றது. அதற்காக எதையும் செய் யத் துணிகின்றனர். போர் புரிபவர்கள் போர்க்காலத்தில் மனிதகுலம் இது காலும் வளர்த்து வந்த நாகரிக விழு மியங்களில் ஏதாவது எஞ்ச வேண்டு மென்றாலும், யுத்த முறைகளில் நடக் கின்ற அநீதிகளைத் தட்டிக் கேட்கும் குழுக்கள் ஆக்ரோஷமாக செயல்பட் டாலன்றி இயலாது. மேலும், இந்த அநீதிகள் ஆவணப்படுத்தப்பட்டால் தான் வருங்கால சந்ததியின் தாம் வரலாற்றை விளங்குவதற்கும், அவர் கள் படிப்பினைக்கொரு பாடமாகவும் இது அமையக் கூடும். இந்த முக்கி யமான தேவைகள் இருந்த எங்கள் சூழ்நிலையில் யாழ் மனித உரிமை குழுவினரின் வரவு அவர்கள் உண் மையில் யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களாக இல்லாவிடினும் என்ன, நால்வர் அடங்கிய ஒரு சின் னஞ்சிறு குழுவாக இருப்பினும் என்ன, ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

மனித உரிமைகள் சம்பந்த மாக ஆவணப்படுத்தல் என்பது கயிற் றின்மேல் நடக்கும் சமாச்சாரமாகும். சம்பவங்களைத் தொகுத்து நடந்தது நடந்தவாறாக எழுத வேண்டும். இவை பற்றிய எமது கற்பிதங்கள் அங்கு இணைக்கப்படக் கூடாது. இவ்வாறு இணைப்பது அவற்றின் உண்மைத் தன்மைக்கு ஊறு விளைவித்து ஆவ ணத்தினை எமது சொந்தக் கருத் துக்கள் அமைந்த கட்டுரையாகிவிடும்.

இதனால் வரலாற்றினை படம் பிடிக்கும் நோக்கில் நின்று விலகி, அது செல்லுபடியாகா ஆவணமாகி விடும்.

நாம் எவருமே நடுநிலையாளர் கள் இல்லை. எந்த சம்பவத்தினையும் நாம் தழுவிக் கொண்ட சித்தாந்தத் தின் பார்வையினூடாகவே பார்க்க விளைகின்றோம். இந்த நிலையில், வரலாற்று சம்பவங்களை ஆவணப்படு த்த இயங்குபவர்கள் சர்வ கால மானுட விழுமியங்களை மட்டும் வைத் துக் கொண்டு மிகக் கவனமாக செயல்பட வேண்டியவர்களாகின்றோம். இங்குதான் யாழ் மனித உரிமை குழு வினர் தோல்வியுற்று விட்டனர். தமது ஆவணங்களை உரிமை மீறல் சம்ப வங்கள் கலந்த தமது அரசியல் வியாக்கியானங்களாக மாற்றி அந்த நடவடிக்கையின் நோக்கத்தினையே சிதைத்து விட்டனர்.

இதற்குரிய முக்கிய காரணம் இவர்கள் கொண்ட அதிதீவிரமான விடு தலைப் புலிகள் எதிர்ப்புக் கொள்கை யாகும். அளவுக்கு மீறினால் அமிர்த மும் நஞ்சு என்பர், அப்பழமொழி இக் குழு விடயத்தில் உண்மையாகி விட் டது. குற்றமில்லா இடம் ஏது? குற்றம் விமர்சிக்கப்பட்டு களையப்பட வேண் டியதுதான் ஆயினும், இவர்கள் கொண்ட தாளாத வெறுப்பு, அவர்கள் அரசியல் பார்வையினை ஊனமாக்கி விட்ட துரதிஷ்ட நிலைக்கு இட்டுச் சென்றுவிட்டது. இன்று இவர்கள் விமர்சனம் தமிழ் தேசிய இனத்தின் உரிமைப் போராட்டத்திற்கெதிரானதா னதும் நடக்கும் யுத்தத்தினை நியாயப்படுத்துவதுமான நஞ்சினைக் கக்குகின்றதை நாங்கள் காண்கின் றோம். தமிழ் மக்களின் உரிமைக ளைக் காக்கும் நோக்குடன், அவர்கள் வாழ்வில் உண்மை காட்டும் விள க்கை உருவாக்கும் நோக்குடன் ஸ்தா பிக்கப்பட்ட இக்குழு இன்று அந்த வெளிச்சத்துக்காக அவர்கள் இருப் பையே கொளுத்த முயற்சி செய் கின்ற நொக்கில் மாறிவிட்டதைக் காண்கின்றோம். ஒரு அரசினால் தன் பிரைஜகள் மீது மேற்கொள்ளப்படும் யுத்தம் என்கின்றது ஒரு புறமும், ஒடுக் கப்பட்ட மக்கள் மேற்கொள்ளும் உரி

**சஞ்சயனின் பார்வையில்**

மைப் போராட்டம் என்பது இன்னொரு புறமும், இன்று நடைபெறுவது இரு வேறு ஆயுத நடவடிக்கைகள். அந்த சூட்சுமங்களை அறியாதவர்களாக புரி யாதவர்களாக இந்த மனித உரிமை கள் குழு செயல்படுவதைக் காண்கின் றோம். இப்போக்கு அவர்களின் ஆவ ணங்கள் எல்லாவற்றிலும் காணப்படு கின்றதெனினும், இவ்வருடம் மே மாதம் வெளியிட்ட வன்னிப் பிரதேச நிலைமைகளைச் சித்தரிக்கும் தகவல் செய்தியறிக்கையில் மிகக் கூர்மை யாக வெளிவருவதைக் காணலாம். "மாறும் சமநிலை" எனத் தலைப்பிட்டு வந்த இவ்வறிக்கை வழக்கம் போல கொழும்பின் பிரபல பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது. இந்த அறிக்கை யின் செய்தியும் பத்திரிகைகள் கொடு த்த தலையங்கமும் ஒன்று. அது என்னவெனில், விடுதலைப் புலிகள் "சரணாகதி" ஆகிக் கொண்டு வரு கின்றனர் என்பதாகும். இன்றைய யுத்த வரலாற்றுக் கட்டத்திலே அரசு வெளியீடு தவிர்ந்த இவ்வகையான மாற்று அறிக்கைகள் ஏற்படுத்தும் தாக் கத்தினை உணர்ந்த பலருக்கும் விச னம் கொடுப்பதாக இது உருவாகியி ருக்கின்றது.

1994ல் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வரும்போது, இந்த ஜனாதிபதி உளச் சுத்தியோடு இப்பிரச்சினையைப் பார்ப்பதனால் நிச் சயம் தீர்வு கொண்டு வரப்படும் என்று கட்டியம் கூறியவர்களில் முக்கியமான வர்கள் யாழ் மனித உரிமைகள் குழு வினர். ஆனால் இவர்கள் கூறியதற்கு எதிர்மாறாக, பொதுஜன ஐக்கிய முன் னணியின் தலைமைத்துவம் அதிகாரத் துக்கு வந்த சில நாட்களிலேயே தன் னை ஒரு சிங்கள பௌத்த நலன்க ளைப் பிரதிபலிக்கும் நிலப்பிரபுத்துவ சக்தியாக இனம் காட்டிக் கொண்டது. இன்றுவரை இவ்வரசு தமிழ் மக்களின் அரசியற் கோரிக்கைகளுக்கு எந்த விதமான நடைமுறைப்படுத்தக்கூடிய தீர்வுத் திட்டங்களையும் முன்வைக்க வில்லை, இந்தப் பிரச்சினை உரி மைகள் என்ற கண்ணோட்டத்தில் இரு ந்து பார்க்கப்படுகின்றது என்ற நம்பிக் கையைக் கூட தமிழ் மக்களுக்கு அது கொடுக்கவில்லை. மாறாக சமா தானத்தை நாடும்" புதுமையானதொரு யுத்தத்தினை உருவாக்கி எங்களெல் லாருக்கும் காதில் பூ வைத்துக் கொண்டிருக்கிறது. முன்னெப்போதும் நாம் கண்டிராத அழிவையும் இழப் பையும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத் திக் கொண்டிருக்கிறது. தென் பகுதி மக்களோ சமாதானம் உருவாக்கப் படும் என்ற நப்பாசையுடனேயே இவர்களைப் பதவியில் அமர்த்தியவர் கள். போரிட மனமில்லாத இவர்களை, இந்தப் போரில் வெற்றி சாத்தியமானது என்ற ஒரே கரும்பினைக் காட்டிக் காட் டித்தான் இதில் ஈடுபடுத்திக் கொண் டிருக்கிறது. அப்பட்டமான பொய்கள் அடங்கிய போர்ச் செய்திகளைத் தரு வதும், இன்று போர்ச் செய்தித் தணிக் கையினை அமுலுக்குக் கொண்டு வந் ததும், சோர்ந்து போகும் சிங்கள மக்க ளுக்கு உற்சாகம் மூட்டி மீண்டும் போரினை ஆதரிக்க வைக்கவேயாம். மேலும், தமிழ் மக்களின் பயத்தில் எழுந்த மௌனத்தினை பயன்படுத்தி, அவர்கள் தாமும் விடுதலைப் புலி களை எதிர்க்கின்றதனால் இந்தப் போரை வேண்டுகின்றனர் என சர்வ தேச அரங்கில் தனக்கு ஆதரவையும் திரட்டி வந்திருக்கிறது.

இந்த நிலைமைகளில் கடந்த 14 மாதங்களாக மேற்கொண்டிருக்கும் ஜயசிக்குறு நடவடிக்கைகளினால் அரசாங்கத்தக்கு தலையிடி இன்னும் அதிகரித்துள்ளது. "விடுதலைப் புலி களை நொண்டிச்சிதறும் தனியார்க ளாக்கி 95 வீதமும் முடிவடைந்த யுத் தம் ஒரு 2 கிலோ மீற்றரைக் கடந்து முன்னேற 6 மாதங்கள் எடுக்கின்றது" என சிங்கள மக்கள் தொடுக்கும் கேள் விகளுக்குப் பதில் சொல்ல முடியாது தத்தளித்துக் கொண்டு இருக்கிறது. தமிழ் மக்களின் ஆதரவு கிஞ்சித்தும் இல்லாத சின்னஞ்சிறிய குழு வெனில் அது எவ்வாறு இந்தப் பாரிய படை நகர்வினை இவ்வளவு தூரம் எதிர்க்க முடிகிறது என மூக்கின் மேல் விரலை வைக்கும் வெளிநாட்டரசுகளுக்கு என்ன பதில் கூறி சமாளிப்பது எனத் திக்கு முக்காடிப் போயிருந்தது. இந்த யுத்தத் தினை வெல்ல முடியாது என உணர்ந்து நீதி மொழியும் சமாதான முமே ஒரே வழி என சிங்கள மக்கள் மனம் மாறுகிறார்களே எனத் தவித்துக் கொண்டிருந்தது. இந்த வேளைதான் ஆபத்பாந்தனாக வந்து குதித்திருக்கி றது. யாழ் மனித உரிமைகள் குழு. புலிகள் தோற்கின்றனர், அவர்கள் தோற்கடிக்கப்பட வேண்டியவர்கள் என்று தமிழர்களே கூறும் போது விளக்கங்கள் மேலும் தேவையில் லையே. ஆறுதற் பெருமூச்சு விட்டுக் கொண்டு அரசாங்கம் போர்க்காரியத் தைத் தொடர வேண்டியதுதான். யுத் தத்தைத் தொடருவதற்கு முண்டு கொடுக்கும் காரணங்களில் இவை போன்ற நடவடிக்கைகள் முக்கியமா னவை என்றால் மிகையில்லை. மனித உயிர்களைக் காக்கவெனக் கிளம்பு வரே எம்மை அழிக்கும் நடவடிக் கையை ஊக்குவிப்பதானது, சமாதா னத்திற்கான யுத்தம் படைக்கும் அதே புதுமை வரலாற்றை இன்று படைத்துக் கொண்டிருக்கின்றது.

யாழ் மனித உரிமைகள் குழு வினரின் இந்த அறிக்கையில் கிட்ட தட்ட மூன்றிலொரு பங்கு விடுதலைப் புலியினர் புதிய போராளிகளைத் திரட் டுவதில் எவ்வளவு தோல்வியைத் தழு விக் கொண்டிருக்கின்றனர் என்பதை விவரிக்கிறது. இந்த விடயத்துக்கு இவ்வளவு இடம் இந்த சந்தர்ப்பத்தில் ஒதுக்கியருப்பது என்ன நோக்கத்திற் காக என்ற கேள்வி எழுகின்றதாயினும் அதைவிட்டு எழுதப்பட்ட விடயத்துக்கு வருவோம். புதிய போராளிகள் இணை வதைப் பற்றிய ஆவணப்படுத்தல் என் றால் அதில் திட்டவட்டமான எண்ணிக் கைகள் இருக்க வேண்டும். எங்கு யாரை அவருக்கு எத்தனை வயது என்ற விவரங்கள் இருக்க வேண்டும். ஆனால் இந்த அறிக்கையோ அவர் சொன்னார் இவர் சொன்னார் என்ற சொதப்பலாகத்தான் முழுக்க முழுக்க செல்கின்றது. முடிவாக, போராளி களை இணைத்துக் கொள்வதில் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகின்ற னர் என முத்தாய்ப்பு வைக்கின்றது. உறுதியா கூற முடியாதவிடத்து ஏன் இதை வலியுறுத்தக் கிளம்புகின்ற னரோ தெரியவில்லை.

புலிகள் எதைச் செய்தாலும் கபட நோக்குடன் செய்பவர்கள்ா கத்தான் காட்டப்படுகின்றது. இப்போ தெல்லாம் அவர்கள் விமர்சனங்களை ஏற்றுக் கொள்கின்றனர், மக்களை அன்னியப்படுத்தி நடப்பதை தவிர்க் கின்றனர் என்று சொல்ல வேண்டியிருக் கின்ற போதும் கூட அது அவர்கள் கைக்கொள்ளும் தந்திரோபாயமாகத் தான் சொல்லப்படுகின்றது. யுத்தம் காரணமாக மூன்று மாதங்களுக்குப் பாடசாலைகள் மூடப்பட வேண்டும் என்ற புலிகள் கோரிக்கையினை பாட சாலை ஆசிரியர்கள் நிராகரித்ததை புலிகளுக்கெதிராக மக்கள் கிளர்ந் தெழுந்த சம்பவம் என்பது போல் காட்டியிருக்கிறது. ஜனநாயகம் அங்கு செயற்படுத்தப்படுகிறது என்பதை அங் கீகரிக்காதவர்கள் அடுத்த வரியி லேயே இதனை "மிகுந்த தியாகத் துக்கு மத்தியில் பெறப்பட்ட ஜனநாய கம்" என்கின்றனர். அதுமட்டுமல்லாது, இது நாளைய அரசாங்கம் குடிமக்கள் மீது விமானத் தாக்குதல் நடத்துவதா லேயோ அல்லது புலிகள் எதிர்பாராத சாதனையைப் படைத்தலினாலோ அடித்துச் செல்லப்படும் அபாயம் இருக்கிறது என்று அங்கலாய்க்கின் றனர். இவற்றுக்கூடாக வாசகர் கொள் ளும் பொருள் என்ன? விடுதலைப் புலி களை தமது பக்கம் சார்ந்த இந்த அரசாங்கம் எப்படியும் தோற்கடித்து விடும் என்ற நம்பிக்கையிலே தான் மக்கள் இவ்வாறு ஜனநாயகத்தை ஏற் படுத்த துணிந்திருக்கின்றனர் என்பதா? அரசாங்கம் தோற்றுவிட்டால் ஜனநா யகம் சிதைந்துவிடும் என்பதா? யாழ் மனித உரிமைகள் குழுவினர் எந்த உலகத்தில் வாழ்கின்றனர் என்பது புரியாத புதிராகவே இருக்கின்றது.

இதே போலத்தான் விடுத லைப் புலிகளின் வரி வசூலிக்கும் நடவடிக்கைகளும் நெல் கொள்வனவு செய்து சந்தைப்படுத்தும் நடவடிக்கை களும் எவ்வாறு படுதோல்வியைத் தழுவிக் கொண்டன என்பது அடுத்த கருத்தாக முன்வைக்கப்படுகின்றது. விடுதலைப் புலிகள் ஏதோ சிறிய தவறினைக் கூட செய்யக் கூடாது என்பது போல எழுதுவது இவர்களின் சிறுபிள்ளைத் தனத்தையே காட்டுகின் றது. அரசாங்கம் பாதுகாப்பு செலவி னங்களுக்காக வரி விதிக்கலாம், புலி கள் அவ்வாறு செய்யத் துணிவது குற்றம் என்ற கருத்து இங்கு மேலோங் கியிருப்பதைக் காணலாம். புலிகள் மூடைக்கு ரூ 300 தரத் தயாராக இருந்த போது விற்க மறுத்த (திரும் பவும் கிளர்ச்சி என்ற கருத்துப்பக் கூறப்படுகின்றது) விவசாயிகள் இப் போது தனியாருக்கு ரூ 500க்கு விற்ப தாகப் போட்டிருக்கிறது. அடேடே ஜன நாயகத்தைப் பற்றி இவ்வளவு அக்க றையுள்ளவர்கள், மூடைக்கு ரூ 200 இலாபம் பெற விவசாயிகள் முயலும் அளவுக்கு ஜனநாயகம் அங்கு இருக் கிறது என்றாவது குறிப்பிடத் தவறு வது வாசகர்கள் சிந்தனையை உறுத் தாமல் இல்லை. அறிக்கை என்பது இரு பக்கங்களையும் அலசி ஆராயும் ஆவணமல்லவா?

இவ்வகையான கற்பிதங்க ளுக்கு மேலாக, இரண்டும் இரண்டும் ஐந்து என்றும் தாவ முனைகிறது இந்த அறிக்கை. ஒன்றுக்கொன்று தொடர்பின்றி ஒருவித இலக்குமின்றி அங்குமிங்குமாக அவிழ்த்து விடப்படும் தரவுகள், கதாகாலட்சேபத்தில் திரும் பத் திரும்ப ஒலிக்கும் பிற்பாட்டுக்காரர் போடும் ஆமா போல விடுதலைப் புலி கள் அழிக்கின்றனர் என்ற கோரஸல் தான் வந்து முடிக்கிறது. ஒருபுறம் விடுதலைப் புலிகள் ஆயுத பலமும், நிதி வளமும், சகல சர்வதேச தொடர்

**கடந்த 14 மாதங்களாக மேற்கொண்டிருக்கும் ஜய சிக்குறு நடவடிக்கைகளினால் அரசாங்கத்தக்கு தலையிடி இன்னும் அதிகரித்துள்ளது.**

பாடல் வசதிகளும், தமிழ் நாட்டைச் சேர்ந்த தொண்டர்கள் போராளிகளா கவும் பொருந்திய குழுவாக விவரிக் கப்படுகின்றது. மறுபுறம் யாழ் ஆய ருடன் தாம் வலியப் போய்ப் பேச்சு வார்த்தை வைத்துக் கொண்டதனாலும் மக்களை !!விடுவிக்கப்பட்ட பிரதேசங் களுக்கு" தங்கு தடையின்றி அனுப் புவதனாலும், யாழ் நகரை பறி கொடுத் ததனால் வருமானம் குன்றியவர்களாக ஆகிவிட்டதனாலும் புலிகள் இயற்கை மரணம் எய்திக் கொண்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது. வாசிப்பவர்கள் வெகுவாகக் குழம்பித்தான் போகின் றோம். ஜனாதிபதி சந்திரிகாவைப் பற் றிய ஜோஸ்யம் போலத்தானா இதுவும் எனப் பலரும் நையாண்டிக் கேள்வி எழுப்ப இது இடம் வைத்து விட்டது.

புலிகளின் தோல்வி என்ற அர சியல் நாணயத்தின் மறுபுறம் அரசாங் கத்தின் வெற்றியே. பொதுஜன ஐக் கிய முன்னணி அரசாங்கம் வெல்ல வேண்டுமென்று கூறும் இக்குழுவினர், அதே மூச்சில் இந்த அரசாங்கத்தில் ஊறியுள்ள இனவாதத்தினையும் ஊழ லினையும் கண்டிக்கின்றனர். ஈற்றில் தமிழ் மக்களுக்கு இவர்கள் காட்ட விரும்பும் தீர்வுதான் என்ன?

**தற்போது வன்னிச் சமர் உக்கிரமான மரபுவழிச் சம ராக உருப்பெற்று இருக்கின்ற நிலையில் பாதை திறப்பு விவகாரம் எட்டக் கனியாகவே இருக்கின்ற. இக்காலட்டத்தில் இராணுவ தரப்பு சந்திக்கும் தோல் விகளை நிவர்த்திக்கவும் தென்னிலங்கை மக் களை திசை திருப்பவும் நடாத்தப்படும் கிழக்கு மாகாண இராணுவ நடவடிக்கைகள் குறிப்பிட்ட இலக்கை அடைய முடியாமல் இடைநடுவில் நிறுத்த வேண்டிய நிலையில் அரச தரப்பு உள்ளது.**

இவ்வளவு கருத்துக்களையும் மனித உரிமைகளுக்கான யாழ் பல் கலைக்கழக ஆசிரியர் குழுவெனத் தங்களைக் கூறிக் கொள்பவர்கள் தாராளமாக வெளியிடலாம் தங்களு டைய சொந்தப் பெயர்களில் எழுதும் கட்டுரைகளில். ஆனால், யாழ் நகரை மையமாக வைத்துச் செயற்படும் தமிழ் விரிவுரையாளர் மனித உரிமை கள் குழுவினர் தாம் வெளியிடும் தக வல் அறிக்கை இவை என சர்வதேச சமூகத்தினருக்கும் வெளிநாட்டுத் தூத ரகங்களுக்கும் தென்பகுதி மக்களுக் கும் அவர்கள் பசப்ப முயல்வது மிக வும் நேர்மையற்ற செயலாகும்.

சஞ்சயன்

பிரபல சோதிடர் "ரமணி" எழுதும்

# அரசியல் வானில் சனியின் உலா

அனைத்து கோள்களையும் அதற்குரிய ஒழுங்கில் அசைந்து திரிய விட்டது ஒரு சக்தி. அந்தக் கோள்களிலே வாழ்கின்ற உயிர்களைத் தீர்மானித்ததும் அதே சக்தி. நாமறிந்த வரை பூமியில் மட்டும்தான் உயிர்கள் உண்டு என்பதற்காகப் பூமியைவிட வேறெந்தக் கோள்களிலும் உயிர்கள் இல்லை என்ற முடிவிற்கு வந்துவிட முடியாது. அதேபோல் கோள்கள் பற்றி நாம் அறிந்த விடயங்கள் சிலவற்றை வைத்துக் கொண்டு "இவ்வளவு தான் கோள்களைப் பற்றிய அறிவு" என்ற முடிவுக்கும் நாம் வந்து விட முடி

யான் அறிந்தவரை எனது மூளையில் பதிவு செய்யப்பட்ட விடயங்களை நேயர்களிற்குத் தெளிவுபடுத்தத் "தினக்கதிர்" வழியமைத்துக் கொடுத்தது வரவேற்கத்தக்க ஒரு விடயம். தனது இருப்பத்தைந்தாவது மலரில் இப்படி ஒரு அசுரபலத்துடன் எழுந்து நின்று கொண்டிருப்பது ஆச்சரியமே! அதற்கு நம் வாழ்த்துக்கள்.

பொதுவாகவே "சோதிடம்" என்று சொன்னவுடன் புரியாத ஒரு புதிராகவே தொண்ணூற்றொன்பது சதவீத மக்களாலும் உணரப்பட்டுள்ளது.

ஏழரைச்சனி என்று சோதிடர் சொன்னவுடனேயே "ஏக்கப் பெருமூச்சு" விடுகின்ற அளவிற்குச் சோதிட அறிவில் மக்கள் பாமரர்களாகவே இருக்கின்றார்கள்.

எனவே அந்தப் பாமரத்தனத்தில் இருந்து விடுபட மக்களிற்குக் கைகொடுக்கின்ற தினக்கதிருக்கு என் கைகளைக் கொடுக்கிறேன்.

ஒரு சதவீத அறிவு கூட இல்லாத சோதிடப் பாமரர்களை "ஓரளவு" முயற்சி செய்து "சிந்திக்க" வழிகாட்டி விட்டால் நிட்சயம் அவர்கள் தாமாகவே நிறைய விடயங்களைத் தேடிப் பெற்றுக் கொள்வார்கள் என்பது "தினக்கதிரின்" அசைக்க முடியாத நம்பிக்கை.

பாடசாலைகளிலே வரலாறு பூமிசாத்திரம் (தற்போது சமூகக்கல்வி - சுற்றாடற்கல்வி) என்பவற்றைப் படிக்கும்போது எம்மை அறியாமலே "நித்திரை" வருவதுண்டு. ஏனென்றால் பாடத்தின் "கனம்" அப்படி.

மக்களால் உணரமுடியாத - புரியமுடியாத விடயங்கள் என்று சொல்லப்பட்ட இரண்டு விடயங்களை இணைத்து "இன்சுவை"யுடன் கொடுக்கின்றேன். என் விருந்தை ஏற்றுக் கொண்டு - குறைகளை எம்மிடத்தும் (தினக்கதிர்) நிறைகளைப் பலரிடத்தும் கூறுவீர்களென்று எதிர்பாக்கின்றேன்.

பூமியிலே எத்தனையோ இனங்கள் - மொழிகள் - நாடுகள். ஆனால் எல்லோரையும் தாங்குகின்ற பூமித்தாய்க்குத் தாய்மொழி எதுவென்று எமக்குத் தெரியாது.

மனிதர்களிடையே வேறுபாடுகள் வளர்வதற்கு மூலகாரணமே மதங்களும் மொழிகளும்.

மழையும் வெயிலும் மண்ணில் தவழும் நதியும் கடலும் தேகந் தொட்டுத் தாலாட்டும் தென்றற்காற்றும் எல்லோருக்கும் பொதுவானவையே. அதே போல்தான் கோள்களும்.

சாஸ்திரம் என்ற வடமொழிச் சொல்லின் தமிழ்க் கருத்து "அறிவு" என்பதே! எனவே அந்த அறிவைத் தேடிக் கொள்வதற்கு மதங்களோ மொழிகளோ ஒரு தடையாக இருக்க முடியாது.

பூமி பற்றிய அறிவு 'பூமிசாத்திரம்" வானம் பற்றிய அறிவு "வான சாத்திரம்". கிரகங்கள் பற்றிய அறிவு "கிரக சாத்திரம்.

நாம் வாழுகின்ற இந்த இலங்கைத் தீவின் இன்றைய பிரச்சினைக்குத் தீர்வு எப்போது கிட்டும்? தீர்வுக்குத் தடையாக இருப்பது என்ன? இது பற்றி நீண்ட தூர சிந்தனைக்குத் தள்ளப்பட்ட ஒவ்வொருவரும் "மனநோயாளி" என்ற "மாண்புடன்" வாழவேண்டிய நிலைதான் ஏற்படும்.

ஏனென்றால் மனிதனுடைய சிந்தனைக்கும் அப்பால் ஒரு சக்தி - (அது ஏதோ ஒன்று) விளையாடிக் கொண்டிருக்கிறது. அதற்குத்தான் எமது நாட்டை ஆண்டு கொண்டிருப்பது தெரியவரும்.

1948ல் "இலங்கை" சுதந்திரம் பெற்றபோதே தமிழ் அரசியல் தரப்பின்

| | | | |
|---|---|---|---|
| மீனம் | * மேடம வடபகுதி | இடம் | மிதுனம் |
| கும்பம் இலங்கை | 1948. பெப் 4 (சுதந்திரதினம்) | | கடகம் சனி |
| * மகரம் சூரியன் | | | சிம்மம் |
| தனுசு | விருச்சிகம் | துலாம | கன்னி * |

* இக்குறியிட்ட இடங்கள் சனியின் பார்வை பெறுகின்றன.

"நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் இன்னொன்று நினைக்கும்" என்று கூறுவார்கள்.

இலங்கையின் கடந்தகால வரலாற்றை ஆராய்கின்ற ஒவ்வொருவருக்கும் சோதிடப் பின்னணி ஒன்று அதியுயர் தலைவர்கள் வாழ்ந்த வடபகுதி துன்பம் காணத் தொடங்கியது. அதாவது இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம் வடபகுதிக்குக் கிடைத்த "தரித்திரம்" என்றாகிவிட்டது.

அதுமட்டுமன்றிப் பூகோள ரீதியின்படி இலங்கை என்ற நாட்டிற்குக் கிடைக்கின்ற நன்மைகள் எல்லாம் வடபகுதிக்குத் தீமையாகவே நடந்து கொண்டிருக்கும்.

பூகோள அமைப்பின்படி இலங்கை கும்பராசியாகக் கணிக்கப்பட்டுள்ளது. அந்த இலங்கையின் உருவ அமைப்பிற்கு வடபகுதியைக் குறிப்பது மேட ராசியே.

சுதந்திரம் கிடைத்த அன்று இலங்கைக்கு 6 இல் நின்ற சனி வடபகுதிக்கு 4 ம் இடத்திற்குரிய பலனைச் செய்தான்.

சோதிட விதியின்படி சனி தான் நின்ற இடம் எதுவோ அதற்குரிய பலனைச் செய்தே தீருவான்.

இதோ உங்கள் உபயோகத்திற்குச் சில தகவல்கள். (இவை இந்த நீண்ட தொடரிற்கு எப்போதும் அவசியமானவை.)

### சனி நின்ற வீடுகளும் - பலன்களும

1ம் வீடு - அழகு குறையும். மனச் சங்கடம். வியாதி
2ம் வீடு - காரணமில்லாத பகை. தேசசஞ்சாரம்.
3ம் வீடு - ஜீவன லாபம். தனலாபம். விவாகம்.
4ம் வீடு - ஸ்தான பேதம். ஆரோக்கிய வீழ்ச்சி.
5ம் வீடு - மனஸ்தாபம், தனவிரயம், ஆரோக்கிய வீழ்ச்சி.
6ம் வீட - சத்துரு ஜயம், தனதான்ய லாபம், இஷ்ட காரிய சித்தி.
7ம் வீடு - குடும்ப விரோதம், தனலாபக் குறைவு, மனோநிலை பாதிப்பு.
8ம் வீடு - ஸ்தான பேதம். ஆடை ஆபரணக் கஷ்டம். காரிய விக்கினம்.
9ம் வீடு - சுக சௌக்கியம். சந்தோஷம். தனவரவு. இஷ்ட காரிய சித்தி.
10ம் வீடு - உத்தியோக மாற்றம். குடும்ப மாற்றம், ஜீவன கஷ்டம்.
11ம் வீடு - சென்ற பொருள் திரும்பும். குடும்ப சௌக்கியம். ஆதாய லாபம்.
12ம் வீடு - தேசசஞ்சாரம் - திரவிய நஷ்டம்.

இலங்கைக்கு 6 ம் இடத்தில் நின்ற சனி 6 ம்வீட்டுப் பலனான சத்துரு ஜயம் - (எதிரிகளை வெல்லுதல்) என்ற பலனை கொடுத்த அதே நேரத்தில் வடபகுதிக்கு 4ம் வீட்டில் நின்று ஸ்தான பேதம், ஆரோக்கிய வீழ்ச்சி என்பவற்றைக் கொடுத்துவிட்டான்.

தொடரும்

# போடியார் வாறார்...!

சும்மா சொல்லப் போடா..... நம்மட மௌனகுரு ஒரு நல்ல காரியம் செய்து போட்டுது –

விபுலாநந்த சாமி "யாழ்நூல்" எழுதி இசை ஆராய்ச்சி செய்தாப் போல –

மௌனகுருவும் நம்மட கூத்தைப் பத்தி ஒரு ஆராய்ச்சிப் புத்தகம் எழுதிக் கிட்டடியில வெளிக்கிடுத்தி இரிக்கு –

அடே, நம்மட ஊர்வழிய அந்த நாளையில 'ஆனா ஆவன்னா"த் தெரியாத புள்ளங்கள் எல்லாம் காதால கேட்டு மனப்பாடம் செஞ்சு அரங்கேத்தின கூத்து – இப்பிடி ஒரு 'பெரிய' சங்கதியாய் இரிக்கும் எண்டு நான் கனவிலயும் நினைக்கல்ல –

புத்தகத்தத் தொட்டொடன எனக்கு 'தலைவிறைச்சு'ப் போச்சு –

அந்தக் காலத்தில புளியந்தீவு ரவுணில ஒரு கூத்து நடத்தக்க அங்க கொஞ்சப் பேர் கூச்சல் போட்டானுகள்....

"கூத்தாடுவதும் 'என்னமோ' நெளிப்பதும் ஆத்தாதவன் தொழில்" எண்டு 'பகிடி' பண்ணின ஆக்களும் இருக்கிறானுகள் –

ஆனா, வித்தியானந்தன் ஐயா 'வாசிற்றி'யில கூத்த அரங்கேத்துனாரு–

நம்மட தேவநேசன் நேசையா இஞ்ச 'ஏசண்டா' இரிக்கக்க நம்மட 'அண்ணாவிகளை' எல்லாம் ரவுணுக்குக் கூப்பிட்டு மேடையில ஏத்தி மந்திரியிர கையால சால்வை போட்டு பாராட்டினாரு –

இப்ப, தம்பி மௌனகுரு சர்வகலாசாலையில ஆராய்ச்சி செய்து காட்டிப் புத்தகமாக அச்சுப் போட்டு வெளிப்படுத்தி இருக்குது –

இப்ப என்னடா சொல்லிறயள்....?

'நாட்டுக் கூத்து' – "நாட்டுக் கூத்து" எண்டு இழிவாய் பேசினயளே – இப்ப என்ன சொல்லப்போறயள்......?

அந்தப் புத்தகத்த வாசிச்ச ஆக்கள் சொன்னாங்க – இனிமேல் கண்டகண்டவனெல்லாம் கூத்துப் பழக்க வெளிக்கிட்டுக் 'குப்பை'யைக் கொட்டாம. ஒரு ஒழுங்கு முறையோடக் கூத்தப் பழக்கணும் – கூத்த ஆடனும் –

இப்பிடித்தான் ஆடுவம் – எங்க பார்ப்பம் எந்த ஏட்டில எண்ட கூத்துப் புழை எண்டிருக்கு? கொண்டு வா பார்ப்பம்" – எண்டு 'வாய் கதைக்க" இனி மேல் ஏலாது!

மௌனகுருவிட புத்தகம் இருக்கு!

புத்தகத்த வெளியிட்டதோட அந்தப் புள்ள விடல்ல –

நம்மட அண்ணாவியார் நாகமணிப் போடியாரயும் நாலு தக்க மனிசன் இருந்த அந்த மேடையில ஏத்திக் கௌரவம் குடுத்துப் போட்டுது மௌனகுரு–

எங்க பார்த்தாலும் – எம்.பி எண்டும், ஏசண்டு எண்டும் 'ஆர் ஆர' எங்க வைக்கிற எண்டு 'விவஸ்த்த கிவஸ்த்த' இல்லாம – எல்லாத்துக்கும் 'கோயில் மோளம்' போல அவங்களைத்தான் கூப்பிட்டு 'பந்தம்' புடிக்கிற இந்த நாளையில–

பொருத்தமான இடத்துக்குப் பொருத்தமான ஆளைக் கூப்பிட்டு தம்பி மௌனகுரு விழா நடத்தினது மெத்தச் சரி –

இது வழிய விழா நடத்தி 'பந்தம்' புடிச்சித் திரியிற ஆக்களுக்கு இது நல்ல பாடம் –

நம்மட 'வேங்கு' மனேச்சர் சீவரெட்ணத்தையும் அந்தக் கூட்டம் போட்ட – அது தான் மௌனகுருவிட புத்தகம் போட்ட புள்ளங்களையும் நாம பாராட்டணும் –

இப்பதான் – நம்மட ஊரில – கண்ணதாசன் பாடினாப் போல "வீடிப் புகைக்கும் ஊதுபத்திக்கும் வித்தியாசம்" தெரியத்தொடங்கியிருக்கு...

அதுசரிடா மக்காள் – நம்மட 'பொக்கிஷம்' ஒண்டு வெளிவந்திருக்கு – அதை வாங்கிக்கீங்கி ஊக்கம் கொடுக்கிறல்லயா...?



ஒள்ளுப்பமெண்டாலும் உணர்ச்சி இருக்கணும் பாருங்க –

கதையோட கதையாக இன்னொரு சங்கதி –

மட்டக்களப்பில இருந்து ஒரு 'பேப்பர்' அடிக்கணும் எண்டு அங்கயும் இங்கயும் நிண்டு நம்மட ஆக்கள் 'லோப்' புளப்பானுகள் –

ஆரெண்டாலும் புள்ளயள் பாடுபட்டுப் பேப்பர் அடிச்சி வெளியிட்டா ஒரு பத்து ரூபாக் குடுத்து அதை வாங்கி வாசிக்கிற நல்ல தன்மை கிடையாது! இப்ப நம்மட ஊரில அச்சடிக்கிற "தினக்கதிர்" பேப்பரைப் பத்தித்தான் சொல்லுறனன் –

இந்த நாளையில பத்து ரூபா பெரிய காசா...?

அயினைக்கு ஒரு தேத்தண்ணிக் க்டைக்க பூந்து – ஒரு 'பிளேண்டி'யும், வடையும் கடிச்சா – அந்தா பத்துப் பதினைந்து ரூபா பறக்குது –

என்னமோ – சொல்லுறதச் சொல்லிப் போட்டன், செய்யிறதச் செஞ்சிடுங்க – நல்லதத்தான் சொன்னன் கொஞ்சம் கேட்டிடுங்க..

புறகு வாறன்.....

## அடுத்த ஆண்டில் மட்/ மாவட்டத்திற்கு முன்னுரிமை இளைஞர் பரிசளிப்பு விழாவில் பணிப்பாளர் நாயகம் தகவல்

(ச.நல்லரெட்ணம்)

பத்து வருடத்திற்கு முன்பு நடைபெற்ற களியாட்ட நிகழ்வுகள் இப்போது நடைபெற இடமளிக்கவில்லை. மாறாக எமது இளைஞர்களை சிறந்த இளைஞர்களாக்குவதும் நல்வழிப்படுத்துவதுமே எமது முக்கிய நோக்கமாகும். இவ்வாறு அண்மையில் தேசிய இளைஞர் கௌரவிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிழக்கு மாகாணப் பணிப்பாளர் திரு.பொன் செல்வநாயகம் அவர்கள் தெரிவித்தார்.

இவ் விழாவிற்கு சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட பணிப்பாளர் நாயகம் திரு. எக்கநாயக்கா உரையாற்றுகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இளைஞர்களுக்கு இருக்கும் தேவைகளில் ஒரு வீதம் மாத்திரமே பூர்த்தியாகி உள்ளது. எஞ்சிய 99 வீதமும் பூர்த்தியாக்கப்படவில்லை.

எனவே அடுத்த வருடம் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்களைக் கருத்திற் கொண்டு கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்வேன்.

இதேவேளை நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் இளைஞர் யுவதிகள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துடனும் கல்விச் சான்றிதழ்களுடனுமே வருகிறார்கள். இப்படியான ஒரு நிலை இனிமேலும் தொடரக்கூடாது. இளைஞர் கழக கலாச்சார மற்றும் விளையாட்டு போன்றவற்றில் கலந்து சான்றிதழ்கள் வைத்திருப்பவர்களுக்கே இனிமேல் வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர், மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் இளைஞர் சேவை அலுவலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## தந்திவரி...

வதைப்படுத்தப்பட்டுள்ளார். தற்போது ராஜபக்ஷயால் ஒழுங்காக பேசமுடியாது. இதுபற்றி சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் கருத்து வெளியிடுகையில் மேற்படி குற்றவாளி தப்பி ஓட முற்பட்டார் என்றும் குற்றவாளிகள் மீது சில ஒழுக்கக் கட்டுப்பாடுகளை பேணும் முகமாக கையாண்ட நடவடிக்கைதான் என குறிப்பிட்டிருந்தார். நீதி அமைச்சு அறிக்கை விடுகையில் செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பாக மேற்படி குற்றவாளி தாக்கப்படவில்லை என கூறியுள்ளனர்.

உண்மையில் செம்மணியில் புதைகுழி இருப்பது நிருபனமாகி விட்டது இதை அம்பலப்படுத்த முற்பட்ட ராஜபக்ஷவுக்கு உயிராபத்து ஏற்படவுள்ளது. எனவே இன்னும் அரசு புதைகுழி விவகாரத்தை இழுத்தடிப்பு செய்யாது அவற்றை தோண்டுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதுவே சமாதானத்துக்கான யுத்தம் செய்யும் அரசின் தலையாய கடமையாகும்.

சோழன்

# நல்லைக் கந்தனின் உற்சவத்தை வைத்து நாடகமாடிய சந்திரிக்கா......!

## குண்டு மழை பொழிந்த ஹெலிகள் பூமழை பொழிந்தால் தமிழர் மனங்கள் மகிழுமா.....?

இம்முறை நல்லைக்கந்தனின் தேர் திருவிழாவன்று இரண்டு ஹெலிகப்டர்கள் பூமழை பொழிந்து கந்தனுக்கு வணக்கம் செலுத்தியமை தமிழ் மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது இதேவேளை குண்டு மழை பொழிந்த ஹெலிகள் பூமழை பொழிந்தால் தமிழ் மக்கள் மகிழ்ச்சி அடைவார்களா?

வடக்கு கிழக்கில் மிக நீண்டதொரு கால கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் யுத்தத்தில் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துன்பங்கள் துயரங்கள் சொல்லி அடங்காதவை அந்த நிலமைக்கு இட்டுச் செல்வதற்கு மிக முக்கிய காரணியாய் அமைந்தவை விமானப்படையினரின் கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதலே ஆகும் இவற்றில் குறிப்பாக யாழ் மண்ணை தான் விமானக் குண்டுகள் பதம் பார்த்தது அரச படைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்படும் சண்டையில் புலிகளின் தாக்குதலுக்கு நிகர் நிற்க முடியாத படையினர் பதிலடியயாய் கையாள்வது விமான குண்டு வீச்சேயாகும் ஒவ்வொரு குண்டு வீச்சுகளிலும் தமிழ் மக்களின் உயிர் உடமைகளே பலியாயின. பலியாகும் தமிழ் மக்கள் பயங்கரவாதிகள் என்றும் தமிழர் குடிமனைகள் புலிகளின் பாசறை என்றும் பட்டையம் குத்தியதை தமிழ் மக்கள் மறந்து விடவில்லை ஜே. ஆர் தொடக்கம் சந்திரிகா வரை விமான குண்டு வீச்சை நடத்துவதில் ஒரு படி முன்னேறி வருகின்றனர்

சாதாரண சியாமாஜெட், அன்ரநோவ், சுப்பசொனிக், புக்காரா, எம்..ஐ 24 ரக ஹெலி இன்னும் எத்தனை எத்தனையோ யாழ் மண்னை பதம் பார்த்துவிட்டன.

அழகிய பனை வளமும் செழுமையும் கொண்ட யாழ் மண் இன்று பாலைவனமாக காட்சி தருவதற்கு காரணம் விமானப்படை நடத்திய குண்டு தாக்குலே ஆகும் குடிமனை, பாடசாலை, எல்லாவற்றையும் சேர்த்து குண்டு வீச் சுகள் நடத்தப்பட்டது சகட்டுமேனிக்கு எல்லாம் புலிகளின் பாசறைகளாகவே அரசிற்கு தெரிந்தது இந்தியா உட்பட பல நாடுகள் இலங்கை படையினர் நடத்தும் குண்டுமழையைக் கண்டித் தும் கூட இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை இவற்றையெல்லாம் நல்லைக் கந்தனும் நன்கு அறிந்தவர் தான் தமிழ் மக்களும் உணர்ந்தனர்.

மடுமாதா ஆலயம், நவாலி கிறிஸ்தவ ஆலயங்கள் உட்பட பல இந்து ஆலயங்களும் குண்டு வீச்சினால் சிதைவடைந்தே காணப்படுகின்றன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் நல்லூர் முருகனின் மகோற்சவத்தின் தேர்திருவிழா அன்று ஜனாதிபதி அவர்களின் உத்தரவின் பெயரில் இரண்டு ஹெலிகள் சுவாமி வீதியுலா வரும் வேளை பூமழை பொழிந்துள்ளன. இவ் மலர்கள் நாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து எடுத்து வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அத்துடன் ரூபவாஹினியிலும் .தமிழ் சேவை வானொலியிலும் நேரடி ஒளி, ஒலிபரப்புகளும் இடம் பெற்றன சேவை உண்மையில் தமிழ் மக்கள் மீதோ அல்லது சமயப் பற்றுடனேயே செய்த வேலை அல்ல மாறாக அரசியல் ரீதியிலான ஒரு தந்திர உபாயமே ஆகும் நாங்கள் தமிழர்களுக்கு சகல சலுகைகளையும் வழங்குகின்றோம் அவர்களின் மத அனுட்டானங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன் அரசும் பங்களிப்பை வழங்குகின்றது. என்பதனைத்தான் இந்த பூமழை உணர்ந்திருக்கின்றது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்குடா நாடு இருந்த காலகட்டத்தில் விமானமோ ஹெலியோ இரைந்தால் சகல மக்களும் பதுங்குகுழிக்குள் புகுந்து விடுவார்கள் வானில் வட்டம் அடித்து குண்டு பொழிந்து சென்ற பின்தான் புற்றில் இருந்து நாகம் வருவது போல் வெளியே வருவார்கள் தற்போது யாழ் குடா நாடு அரச கட்டுப்பாட்டில் இருந்தாலும் பழைய பழக்க தோசம் மாறவில்லை தப்பித்தவறி விமானமோ ஹெலியோ இரைந்தால் தற்பாகாப்பு நிலைக்கே மக்கள் மனங்கள் சென்று விடுகின்றன .இந்த வகையில் தேர் உலா வீதிவலம் வரும் வேளை வானில் இரு ஹெலிகள் வட்டம் அடித்தது கண்டு மக்கள் அச்சம் அடையவே செய்தனர் அப்போதுதான் பூக்களை தூவிச் சென்றனர் அங்கு ஒரு அன்பர் இப்படித்தான் சொன்னார். இன்று பூக்களை வீசிச் செல்கின்றார்கள் நாளை "கலீபர்" துப்பாக்கியால் வந்து சுட்டுத்தள்ளுவார்கள். இவர்களின் நாடகம் யாருக்குத்தான் தெரியாது உண்மைதான் அஞ்சியோடும் எலிகளாக காணப்படும் தமிழ் மக்களிடையே மலர் அஞ்சலி செலுத்தினால் மறாத வடுக்கள் மாறி விடுமா? மகிமை பொங்கிய அந்த நல்லூராந்தான் கூட ஏற்றுக்கொள்வாரா?

சிகண்டி

## தெரியா விட்டால் தெரிந்து கொள்ளுங்களேன்!

### உங்களுக்குத் தெரியுமா? மிக மிக முற்காலத்திய இராட்சத மிருகங்கள் இவை!

(வீ.நளினி)

அனேக ஆண்டுகளுக்கு முன்னர் பாம்பு, பல்லி, வகையைச் சார்ந்த இராட்சத மிருகங்கள், உலகில் வாழ்ந்து மறைந்ததாக அத்தாட்சிகளும் அந்த மிருகங்களின் எலும்புக் கூடுகளும் கிடைத்துள்ளன. இவை வாழ்ந்த காலத்தை "Mesozoic Era" என்று அழைக்கின்றனர். அவற்றுள் சில:-

01) டைரன்னோசாரஸ் என்ற ஊரும் மிருகப் பிராணி, 47 அடி நீளமாக இருந்தது. அதன் தலை 4 அடி நீளம் கொண்டது. அதன் பல் வரிசை சிறியதில் இருந்து பெரியது வரை 3 அங்குலம் முதல், 6 அங்குலம் வரை அளவுடையதாக இருந்தது. இது மாமிசம் உண்பது ஆகும்.

02) ப்ரோண்டோசாரஸ் இந்த ஊரும் மிருகத்தின் உடல் 67 அடி நீளம் கொண்டது. அதாவது 22(m) மீற்றர் நீளம் 30000 கிலோ எடை கொண்டது. 24 கூரிய பற்களை அது உடையதாக இருந்தது. இது பெரும்பாலும் நீரில் வாழ்ந்து வந்தது. இது நீரிலும், நிலத்திலும் வாழக் கூடிய பிராணி.

03) ப்ரொக்கோசாரஸ் இந்த மிருகம் 80 அடி நீளம் உடையதாக இருந்தது. பெரிய கழுத்தை கொண்டதாகவும், சிறிய வாலை உடையதாகவும் இருந்தது. இதன் எலும்புக்கூடு படிவத்தை தென் டெக்கோடா என்ற இடத்தில் கண்டு எடுத்திருக்கின்றனர். யானையை இதனுடனே ஒப்பிட்டுப் பார்த்தால் யானை ஒரு பூனையைப் போல தோற்றமளிக்கும்.

04) டிப்ளோகஸ் 29 மீற்றர் நீளமுள்ளது. இந்த இனத்தில் இதுதான் மிகவும் நீளமுள்ளது. எப்பொழுதும் நீரில் தானிருந்தது. சிறிய தலையை கொண்டது. தண்ணீரில் முற்றும் மூழ்கி சிறிய தலையை மட்டும் வெளியே நீட்டி சுவாசித்தது. வெளி உலகைப் பார்த்தது.

05) ஸ்டெகசாரஸ் இதன் முதுகின் மீது கேடயம் போன்ற இரு எலும்புத் தட்டுக்கள் அமைந்திருந்தது. பாதுகாப்பிற்காக மூளை இதனுடைய முன் தாடைகளையும், முன்னங் கால்களையும் ஆண்டு நடத்தியது. இதையன்றிப் பின்னுமொரு மூளை, பின் பாகத்திலிருந்தது. அதன் உடம்பின் பிற பாகங்களை இது ஆண்டு நடத்தியது.

### பிறந்தநாள் வாழ்த்து

சிவசுப்பிரமணியம் - மைதிலி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சிவசுஜன் தனது எட்டாவது பிறந்த தினத்தை 25.08.98 அன்று வெகு விமர்சையாக தனதில்லத்தில் கொண்டாடுகிறார். இவரை பெற்றோர், உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் ஆனைப்பந்தியான் அருள் பெற்று பல கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.



## மாணவ பூக்கள்

### சந்திரனுக்குச் சென்ற நீரழிவு நோயாளி

(வீ.நளினி)

நான் இப்பொழுது ஒரு விறு விறுப்பான காரியத்தை உங்களுக்கு சொல்லப் போகிறேன். உங்களுக்கு இது ஆச்சரியத்தை அளிக்கலாம். அமெரிக்காவிலிருந்து மூன்று பேர் சந்திரனுக்கு சென்றார்களல்லவா? அவர்களில் ஒருவருக்கு திடீரென்று மயக்கம் வந்து விட்டதாம். உடனே கூட இருந்தவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மயக்கமுற்றவரின் ஆடைகளை தளர்த்தி விட்ட அடுத்தவர் கையில் ஒரு துண்டுக் கடிதம் அகப்பட்டது. அதில் என்ன எழுதியிருந்தது தெரியுமா?

"நான் ஒரு சர்க்கரை வியாதி உள்ளவன். என்னை மயக்க நிலையில் காண்போர், எனக்கு ஒரு மிட்டாயோ, சர்க்கரையோ கொடுத்தால் எனக்கு மயக்கம் தெளிந்துவிடும்" என்று எழுதியிருந்தது. நல்லவேளை அந்தத் துண்டு சீட்டு ஒருவரின் கண்ணில் பட்டது! மயங்கியவர்தன் நிலை குறித்து, அத்தகைய சீட்டை எழுதி வைத்தது எத்துணை நன்மையாகிற்று பாருங்கள்! இல்லையென்றால் சந்திரனில் போய் எந்த வைத்தியரை அவர்கள் தேடிக் கண்டு பிடிப்பது! பூமியிலிருந்து வைத்தியர் வரும் வரைக்கும் மயங்கியவரின் நிலை என்ன ஆகும்.

உடனே சிறிது சீனியைக் கரைந்து மயங்கியவரின் வாயில் பூசினார்கள். சிறிது நேரத்தில் அவர் எழுந்து சகஜமாகத் தன் அலுவல்களை நிறைவேற்றினார். இதை ஏன் கூறுகின்றேன் என்றால் நம்மைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் மத்தியில் நாம் எப்பொழுதும் இருப்பதில்லை. இப்பொழுது, உங்களையோ அல்லது அலுவலகத்திலையொ மட்டும் கழிப்பதில்லை. எத்தனையோ வேலைகள் உங்களுக்கு உண்டு. பற்பல முகங்களை சந்திக்கிறீர்கள். அவர்களனைவருக்கும் நீங்கள் சர்க்கரை வியாதிக்காரர் என்று தெரியாது. மேற்கொண்டு உங்களுக்கு திடீரென்று மயக்கம் வந்தால், என்ன செய்வதென்று அவர்களுக்கும் தெரியாது. எனவே நீங்களும் சந்திர மண்டலம் சென்ற அமெரிக்கரைப் பொலவே சர்க்கரை வியாதிக்காரரென்று காட்டுகின்ற ஒரு அடையாளச்சீட்டை எப்பொழுதும் உங்களுடனே வைத்துக் கொள்ளலாம். நாங்கள் கூறிய காரியங்களனைத்தையும் மனத்தில் இறுத்திச் சிந்தனையில் வைத்து செயலில் கொண்டு வாருங்கள் என்று வைத்தியர்கள் ஆலோசனை கூறுகின்றனர்.

### பிறந்தநாள் வாழ்த்து



முறக்கொட்டான்சேனை சேமன் வீதியைச் சேர்ந்த ரவீந்திரன் சாந்தம் தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜவாகர் தனது முதலாவது பிறந்தநாளை 19.08.98 அன்று தமது இல்லத்தில் குதூகலமாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, பெரியப்பா, பெரியம்மா, அன்ராமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அக்காமார், அத்தான்மார், அண்ணன்மார், பாட்டன்மார், பாட்டிமார், கல்லடி மாமா குடும்பத்தினர், ஜீ.எஸ் மாமா குடும்பத்தினர், கங்காணியப்பா குடும்பத்தினர், மம்மி குடும்பத்தினர், ஸ்ரீ முத்துமாரியம்மன் அருள் பெற்று பல்லாண்டு காலம் நீடூழிவாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

### பிறந்தநாள் வாழ்த்து



கல்லடி திருச்செந்தூார் வீதியைச் சேர்ந்த யூலியன் விஜய நிர்மலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் நிலுக்ஷன் தனது முதலாவது பிறந்த தினத்தை 07-09-98 அன்று தனது இல்லத்தில் கெண்டாடுகின்றார். இவரை அக்கா அண்ணன்மார் உற்றார் உறவினர்கள் புனித அன்னை வேளாங்கன்னி அருளால் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்துகின்றார்கள்.

### பிறந்தநாள்வாழ்த்து



வந்தாறுமூலையைச் சேர்ந்த அருளானந்தம் யோகமலர் தம்பதிகளின் செல்வப்புதல்வி மயூரினி தனது முதலாவது பிறந்த நாளை 01-09-98 அன்று தனது இல்லத்தில் வெகு விமர்சியாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்திமாா், அக்காமாா், அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் கண்ணனின் அருளால் அருள் பெறவாழ்துகிறார்கள்.

# தினக்கதிர்
வார வெளியீடு



**THINAKKATHIR WEEKLY**
**P.O. BOX - 06**
**NO: 05, VETHARANIYAM SQUARE,**
**BATTICALOA**
**SRI LANKA.**
**☎ 065 - 23055 FAX : 22500**


# புலி வேட்டையா? எலி வேட்டையா?

கொழும்பில் மீண்டும் தமிழ் இளைஞர்கள் கைது விவகாரம் தொடர்கதையாகி விட்டது. ஒரு இராணுவ அதிகாரி சுடப்பட்டு படு காயமடைந்ததைத் தொடர்ந்து கட்டில் இருந்து விடுபட்ட நாய் கடித்துக் குதறுவது போன்று காவல் கடமையில் ஈடுபட்டோர் தமிழ் இளைஞர்களை கண்கண்ட இடத்தில் கைது செய்யத் தொடங்கி உள்ளனர். அத்துடன் பல்கலைக் கழக மாணவர்கள் வரை கைது விவகாரம் சென்று விட்டது.

இராணுவ அதிகாரியைச் சுட்ட சூத்திரதாரி புலிகள் தான் என்ற போர்வையில் பம்பலப்பிட்டி திறந்த பல்கலைக் கழகத்தில் இயந்திரவியல் கற்கைநெறி மாணவன் கைது செய்யப்பட்டுள்ளான். துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை கண்ணுற்ற ஆட்டோ சாரதி ஒருவன் திறமையால்தான் மேற்படி பல்கலைக்கழக மாணவன் பிடிபட்டதாக அரசு கூறுகிறது. அத்துடன் ஆட்டோ சாரதிக்கு பாராட்டும் தெரிவித்துள்ளனர். இதேவேளை மேலும் 24 பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கொலைக்கான குற்றவாளியை விசாரணை செய்ய முன்பே புலி என கூறி விடுவது அபத்தமானது.

கொழும்பில் ஒரு பெரும்பான்மை இன பல்கலைக்கழக மாணவன் கைது செய்யப்பட்டு இருந்தாலே போதும் ஆர்ப்பாட்டம் பகிஸ்கரிப்பு அடிதடி உதை. அமைச்சர், அதிகாரிகள் கண்டனங்கள் எத்தனை எல்லாம் உருவாகி இருக்கும். ஆனால் தமிழ் மாணவர்கள் என்ற காரணத்தினால் எந்த ஒரு சக்தியும் வாய் பேசவில்லை. மௌனமாக இருக்கின்றனர். இது வேதனைக்குரியது. தமிழ் இளைஞர்களாக இருந்தால் என்ன ஏனைய சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் என்ன? அனைவரும் பல்கலைக்கழக மாணவர்களே என்ற கோட்பாட்டில் நோக்க வேண்டும். இதேவேளை கடந்த காலங்களில் கொழும்பில் நடைபெற்ற பல சம்பவங்களில் அப்பாவித் தமிழ் இளைஞர்களை சுட்டுக் கொலை செய்து அவனருகே வடபகுதி அடையாள அட்டையையும் சயனட் குப்பி, கைக்குண்டு போன்றவற்றைப் பொருத்திப் புலி எனச் சோடனை செய்த பாதுகாப்பு தரப்பினரால் பல்கலைக் கழக மாணவர்களை புலிகளாக சோடனை செய்ய முடியாதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

இதேவேளை தலைநகரில் ஆயுத கலாச்சாரம் மிதமிஞ்சி விட்டன. இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியோர், எதிர்க்கட்சிக்காரர்கள், பாதாள உலகக் கோஷ்ரி என பல தரப்பினரிடம் துப்பாக்கிகள் முளை விட்டுள்ள நிலையில் நடப்பது யாவற்றிக்கும் புலிகள் தான் காரணகர்த்தாக்கள் என்று கூறிக்கொண்டு அப்பாவித் தமிழ் இளைஞர்களை எலிகளைப் பிடிப்பது போல் கைது செய்வதால் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. இதனால் தமிழ் மக்களே பாதிக்கப்படுவர். எனவே தலைநகரில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும். பல்கலைக்கழக மாணவர்கள் விடுதலை செய்யப்பட வேண் டும் என்பதே எமது கருத்தாகும்.

* * *

தினக்கதிரின் தனது 25வது இதழை பிரசவித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக ஒரு பத்திரிகையை அதுவும் வார வெளியீட்டை வெளிக் கொணர்வது என்பது கல்லில் நார் உரிப்பது போன்றதே.

காலத்துக்கு காலம் ஒன்றிரண்டு பத்திரிகைகள் வெளிக் கொணரப்பட்டிருந்தாலும் தொடர்ச்சியான அவற்றின் இருப்பு என்றும் கேள்விக்குறியாகவே இருந்துள்ளது. பொதுவாகவே கிழக்கு மாகாணத்தில் பத்திரிகை வாசிப்பு என்பது குறைவாகவே உள்ளது. பல நூற்றுக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் தமது பட்டப் படிப்பை மேற்கொள்ளும் பல்கலைக்கழகங்களில் கூட செய்திப் பத்திரிகைகள் தீண்டுவாரற்று கிடப்பது கண்கூடு. இன்னமும் நாம் வாசிப்புத் துறையிலும், செய்திகளை, சம்பவங்களை, நிகழ்வுகளை அறிந்து கொள்ளுவதிலும் சோம்பேறியாகவே இருக்கின்றோம். எனவே இங்கு ஒரு பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக் கொணர்வதற்கு சேவை நோக்கம் கண்டவர்களே முன் நிற்க முடியும்.

அந்த வகையில் பல சிரமங்களுக்கு மத்தியில் திக்கதிரை தொடர்ச்சியாக வெளியிட ஆதரவாக இருக்கும் எமது நிறுவன முகாமைப் பணிப்பாளர் அவர்களையும் தினக்கதிரின் ஆரம்ப காலங்களில் எம்மொடு இணைந்து செயற்பட்டவர்களையும், அதன் உருவாக்கத்திற்கு வித்திட்டவர்களையும், இது எமது பிரதேச பத்திரிகை என்ற நினைப்பில் எமக்கு உதவி புரியும் வாசகர்கள், எழுத்தாளர்கள் விளம்பரதாரர்கள் அனைவரையும் நினைத்துப் பார்க்கிறோம்.

அன்பகலா பிரியங்களுடன்
ஆசிரியர்

# வட - கிழக்குப்பயிலுநர் ஆசிரியர்களின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம்

(அம்பாறை மாவட்ட நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள பயிலுநர் ஆசிரியர்கள் வடக்கு - கிழக்கிலுள்ள பயிலுநர் ஆசிரியர்களையும் இணைத்துக் கொண்டு சாகும் வரை உண்ணாவிரதத்தில் குதிக்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

சென்ற வாரம் நிந்தவூரில் உள்ள பயிலுநர் ஆசிரியர் சங்கத்தின் விசேட கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பயிலுநர் ஆசிரியர் சங்கத் தலைவர் ஏ.சீ.எம்.முஸ்தபா தலைமையில் நிந்தவூர் அல.அஷ்ரப் தேசிய பாடசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் சங்கச் செயலாளர் எம்.ஐ.இஷாக் கருத்து தெரிவிக்கையில் இன்று நாம் வடகிழக்கில் மூன்று வகையான பயிலுநர் ஆசிரியர்கள் உள்ளார்கள்.

1992ம் ஆண்டு தொண்டர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர்கள்.

1992ம் ஆண்டு போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட மௌல விப் பயிலுநர்.
சேவையின் போது பட்டம் பெற்ற பயிலுநர் ஆசிரியர்கள்.

இவ்வாறான நாம் தெரிவு செய்யப்பட்டு ஏழு வருடங்களைப் பூர்த்தி செய்யப் போகும் நிலையில் உள்ளோம். ஆனால் இதுவரை நாம் நிரந்தரமாக்கப்படவில்லை. எமக்கு ரூபா 2500 மட்டுமே கிடைக்கிறது. இன்று எமது நிலை சமுர்த்தி ஊழியர்களைவிட மோசமாக உள்ளது. சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் அரசியல் நீரோட்டத்தில் எந்தவித பரீட்சைகளும் இன்றி தெரிவு செய்யப்பட்டவர்கள். இன்று இவர்கள் எமது ஆசிரியர்களை விட மிக அதிக வேதனம் பெறுகின்றனர்.

எனவே எமக்கு இம்மாதம் (செப்டம்பர்) நடுப்பகுதியில் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் செப்டம்பர் இறுதிப் பகுதியில் வட - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு முன் சாகும் வரை வரை உண்ணாவிரதம் இருப் போம்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் வட - கிழக்கிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் பயிலுனர் ஆசிரியர் அனைவரும் கலந்து கொள்வார்கள். தற்போது மூன்று இனத்திலிருந்து மூவர் சாகும் வரை உண்ணாவிரதத் திலிருந்து தமது உயிர்களை மாய்த்துக் கொள்ளவும் துணிந்து விட்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

**தினக்கதிரின் 25 வது இதழை முன்னிட்டு தினக்கதிரும் DCS ஸ்தாபனத்தினரும் பெருமையுடன் நடாத்தும் வினாக்கள் பத்து**

## வினா விடைப்போட்டி

கீழ் காணும் வினாக்களுக்கு சரியான விடையளிப்போரில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். மேலும் 10 பேருக்கு 250 ரூபா பெறு மதியான புலமைப் பரிசில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

01. சாள்ஸ் பேச்சினால் உருவாக்க முடியாமல் போன இயந்திரத்தின் பெயர்
02. INTEL இன் அர்த்தம் என்ன?
03. Internet எந்த ஆண்டில் உருவாக்கப்பட்டது?
04. IMB எந்த ஆண்டில் உருவானது?
05. உலகத்தில் தற்போது உள்ள அதிவேக Micro Chip இன் பெயர் என்ன?
06. DVD தட்டின் கொள்ளளவு என்ன?
07. HTTP என்றால் என்ன?
08. கணனி துறைத் தொழிலில் Easter eggs என்று அழைக்கப்படுவது என்ன?
09. வைரசின் விரிவாக்கம்
10 விண்டோஸ் 95 க்கு கொடுக்கப்பட்ட குறியீட்டுப் பெயர் என்ன?

உங்கள் விடைகளை 15.09.1998க்கு முன்னர்தினக்கதிர் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# மட்டக்களப்பு நகரத்தில் அமைக்கப்பட்டிருந்த தொலைபேசி கூடாரங்கள் அகற்றப்படுவதன் உள்நோக்கம் என்ன?

(ச.சந்திரபிரகாஷ்)

மட்டக்களப்பு நகரத்தினுள பொரு த்தப்பட்டிருந்த அட்டைத் தொலைபேசிகளும், நாணயக்குற்றி தொலைபேசிகளும் தடித்தடிகளைப் பிடுங்கப்படுவதன் மர்மம் என்ன? என்று தெரியாமல் பொதுமக்கள் கொதிப்படைந்துள்ளனர்.

பல அலங்கரிப்புக்களின் மத்தியில் பொருத்தப்படும் நாணயக்குற்றி தொலைபேசிகள் ஒழுங்காக ஒரு மாத காலத்திற்கு செயற்படும் பின்னர் இருந்த இடம் தெரியாமல் மாயமாக மறைந்து விடுகின்றது.

சிலவேளைகளில் அவசர தேவைகளுக்கு தொலைபேசி அழைப்புக்களைப் பெற சென்றால் "தொலைபேசி பழுதடைந்துள்ளது என்ற வாசகம் மட்டும் எழுதித் தொங்க விடப்பட்டிருக்கும்". இது சிலருக்கு அவசகுனமாக அமைந்து விடுகின்றது. இதனால் பலர் ஆத்திரமுற்றுள்ளனர்.

இத்தொலைபேசிகள் பழுதடைவதற்குரிய காரணம்தான் என்ன? அல்லது தனியார் தொலைபேசி நிலையங்களை அமைத்துள்ள்வர்களால் தங்கள் வருமானம் பாதிக்கப்படுகின்றது என்பதால் இத்தொலைபேசி கள் சேதமாக்கப்படுகின்றனவா?

மேலும் நகரத்தில் நான்கு அட்டை தொலைபேசி கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தது. அவற்றில் மத்திய வீதியில் அமைக்கப்பட்டிருந்த தொலைபேசி கூடாரம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து செயற்படாமல் நேர்ந்த மற்றைய மூன்று அட்டை தொலைபேசிகளும் அகற்றப்பட்டன. இது வரைக்கும் அவை பொருத்தப்படவில்லை.

இத்தொலைபேசிகளை ஒழுங்காக கவனித்து பொருத்துவதற்கு திட்டமிட்ட எந்தவொரு குழுக்களும் அமைக்கப்பட்டமையால் உளளூர் வாசிகளும், வெளியூர் வாசிகளும் தனியார் தொலைபேசி நிலையங்களில் அதிக கட்டணம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளனர்.

# கும்பாபிஷேகம்

மட்/ மயிலம்பாவெளி விபுலானந்தபுரம் அருள்மிகு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய அஷ்டபந்தன பிரதிஷ்டாமகா கும்பாபிஷேகம் செப்டெம்பர் 3ம் திகதி நடைபெற்றது. தொடர்ந்து 12 நாட்களு க்கு மண்டலாபிஷேகமும் முடிவில் அஷ்டோத்திர சங்காபிஷேகம் நடைபெறும்.


தினக்கதிர் பன்னீர்த்துளி போல்
வாசனை தேடவில்லை
பனித்துளி போல் சுத்தம் தேடுகிறது

என்றும் தங்கள் தங்க வைர நகைகளுக்கு
நாடவேண்டிய ஸ்தாபனமாக முத்திரை பதித்துள்ளது

காயத்திரி ஜவலரி

மகாத்மா காந்தி வீதி
12, 1ம் குறுக்கு .மட்டக்களப்பு
T.P - 065 - 23256



தினக்கதிரின 25 வது இதழ் சிறப்புற
மனமாற வாழ்த்துகிறோம்

பிரியா ஜுவலர்ஸ்

மங்கையர் மனங்கவரும் அழகிய 22 கரட் தங்க வைர
நகைகளுக்கும் ஓடர் நகைகளை குறித்த தினத்தில்
உத்தரவாதத்துடன் செய்து கொள்வதற்கும்

பிரியா ஜுவலர்ஸ்

23, பிரதான வீதி மட்டக்களப்பு
T.P - 065 - 23281



டிலக்சி ஸ்ரோர்ஸ்

உங்களுக்குத் தேவையான சகல விதமான
சில்லறைச் சமான்களை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

16, மார்க்கட் குறுக்கு வீதி,
செங்கலடி.


இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினரால் மட்டக்களப்பு ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.